*12*

# கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவன், 2

## (3:5-14)

### *3:5-14* ன் மேலோட்ட கண்ணோட்டம்

*பவுல் 3:5-14ஐத் தொடங்கி ஒரு வரிசையான முக்கிய கருத்துக்களைச் சொல்லி கூடவே "ஆகையால்" (oun) என்பதை பயன்படுத்தி இந்த கட்டளைகளெல்லாம் இதற்கு முந்தின வாக்கியத்தில் பயன்படுத்தப்பட்டதுடன் தொடர்புடையது என்று காட்டினார். கொலோசெயர்கள் கிறிஸ்துவுடனே கூட எழுப்பப்பட்டு, உலக வழிபாடுகளுக்கு மரித்து, கிறிஸ்துவுடனே கூட மகிமையிலே வெளிப்பட எதிர்நோக்கிக் கொண்டிருந்தனர்; "ஆகையால்," அதற்கேற்றாற் போல் வாழ வேண்டியவர்களாயிருந்தனர். அவர்கள் புதிய ஜனங்களானதால், புதிய ஜனங்களாக வாழ வேண்டியவர்களாயிருந்தனர். அவர்கள் புதியவர்கள் ஆனாலும் பூரணப்படாதவர்களாயிருந்தனர், எனவே அவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாக இருந்தது. பவுல் தனிப்பட்ட ரீதியில் இது உண்மையானது என்று உணர்ந்திருந்தார்; கிறிஸ்துவுக்கு பல ஆண்டுகளாக ஊழியக்காரனாயிருந்த பின்பும், இன்னும் உயர்ந்த எல்லையைத் தொட வேண்டும் என்று கிறிஸ்தவ வளர்ச்சிக்கு வகை தேடினார் (பிலிப்பியர் 3:13, 14).*

*சரீர இச்சைகளை மரிக்கச் செய்ய வேண்டியதிருந்தது. இப்படியாக அவைகள் இனியும் இந்தக் கிறிஸ்தவர்களை கட்டுப்படுத்த அனுமதிக்கப்படவில்லை. பவுல் பூமியின் வெறுமையையும் கனியற்ற தன்மையையும் அவர்கள் உணர வேண்டும் என்று விரும்பினார், அதினால் உலகம் எதையும் கொடுப்பதற்கு இல்லை என்று உணர்வடைவர். அவர்கள் பரலோகத்துக்குரிய நிஜத்தை நோக்கி பார்க்கவும் அடையப்போகிறதும் அனுபவிக்கப்போகிறதுமான மகிமையைக் காண வேண்டியதிருந்தது. இப்படிப்பட்ட கண்ணோட்டத்தை அவர்களுடைய மனதில் நாட்டின பின்னதாக, பவுல் பரலோகத்தின் மகிமையை அவர்கள் அடைய ஏதுவான கீழே - பூமிக்குரிய தகுதியாம்ஸங்களை விருத்தி பண்ணவும் கைக்கொள்ளவும் தவிர்க்க வேண்டியவைகளைத் தவிர்க்கவும் வேண்டியவைகளை முன் வைத்தார்.*

*கொலோசெயர்கள் எதிர்மறைக் காரியங்களை களைந்து போட வேண்டியவர்களாயிருந்தனர் (வசனங்கள் 5-11). ஆவிக்குரிய காரியங்களை தரித்துக் கொள்ளவும் (வசனங்கள் 12-14) வேண்டியவர்களாயிருந்தனர். எதிர்மறைக் காரியங்களின் பட்டியல் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டது. இதில் முதலாவதாக சரீர இச்சைகள் உட்படுத்தப்படுகின்றன, அவைகள் விசேஷமாக புறஜாதிகளால் மனம்போன*

*போக்கில் நடப்பிக்கப்பட்டவைகள் (வசனம் 5). தேவ கோபத்தினிமித்தம் அவர்கள் இவைகளை களைந்து போட வேண்டியவர்களாயிருந்தனர் (வசனம் 6). இரண்டாவது பகுதியில் ஏற்புடையதல்லாத குணங்கள் உள்ளடக்கிப் பேசப்படுகிறது (வசனங்கள் 8, 9), அவைகள் பவுலின் வாசகர்கள் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டியவை, ஏனெனில் அவர்கள் தங்களுடைய பழைய மனுஷனைக் களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருந்தனர் (வசனங்கள் 9, 10).*

*பிற நிருபங்களில் பவுல் இதற்கு ஒப்பான பட்டியல்களை கொடுத்துள்ளார். இந்தப் பட்டியல்களில் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதை தடை செய்யும் பாவங்களை வரிசைப்படுத்துகிறார்; ஒழுங்கீனம் (வேசித்தனம்), அசுத்தம், இச்சித்தல் (பொருளாசை), மற்றும் விக்கிரகாராதனை (கலாத்தியர் 5:19; 1 கொரிந்தியர் 6:9). கிறிஸ்தவர்கள் இப்படிப்பட்ட சில காரியங்களில் ஈடுபட்டு, விபசாரம், பொருளாசை, (இச்சைகள்) விக்கிரகாராதனை உட்பட்ட காரியங்களில் துணைபோகும் கிறிஸ்துவுக்குள்ளான சகோதர சகோதரிகளோடு கலந்திருக்கக் கூடாது என்று போதிக்கப்பட்டார்கள் (1 கொரிந்தியர் 5:11).*

*3:5-14ல் பவுல் தான் விரும்பியவைகளை கொலோசெயர்கள் முற்றிலுமாக சாதித்துக் காட்ட ஏதுவான நிறைவுள்ள உறுதியான செயலைச் செய்யும்படி பவுல் மூன்று வினைச்சொற்களை வைத்து கேட்டுக் கொள்கிறார். முதலாவதாக, அவர்கள் குறிப்பிட்ட சில பாவச் செயல்களை "மரித்தவைகளாக ... எண்ணும்படி" சொல்லப்பட்டார்கள் (வசனங்கள் 5-7). இரண்டாவதாக, அவர்கள் குறிப்பிட்ட சில தீய ஒழுக்கங்களை "களைந்து போட வேண்டும்" என்று அவர் குறிப்பிட்டார் (வசனங்கள் 8, 9). மூன்றாவதாக, குறிப்பிட்ட சில நல்லொழுக்கங்களை "தரித்துக் கொள்ள" (வசனங்கள் 10-14) - முழுமையாய் தங்கள் மீது போட்டுக் கொள்ளச் சொல்லப்பட்டார்கள்.*

## அவர்களுடைய கடந்த கால ஒழுங்கீனக்காரியங்களை அழிக்க வேண்டியவர்கள் (3:5-7)

***5ஆகையால், விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையாகிய பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். 6இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும். 7நீங்களும் முற்காலத்திலே அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்து கொண்டு வந்தீர்கள்.***

***"ஆகையால், விபச்சாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை" (3:5அ)***

*பவுலின் முதல் பட்டியலில் ஒழுங்கீனமான பாவங்கள் பட்டியலிடப்படுகிறது (வசனம் 5அ). இரண்டாம் பட்டியலில் நடத்தை மற்றும் சுபாவம் பண்புகள் குறித்த பாவங்கள் பெயரிடப்படுகிறது (வசனங்கள் 8, 9). இந்த தீயக் குணங்களை களைந்து போடுவதாலும், கிறிஸ்தவ ஒழுக்கங்களைத் தரித்துக் கொள்வதாலும் (வசனங்கள் 12-14)*

*கொலோசெயர்கள் ஞானஸ்நானத்தினால் அடைந்திருந்த புதிய ஜீவனுக்குரிய குணாதிசயங்களில் வளர்ச்சியடைவார்கள். முதல் பட்டியலில் இடம் பெற்ற தீய ஒழுக்கங்கள் தேவனுடைய கோபாக்கினையையும் ஆக்கினைத்தீர்ப்பையும் பெற ஏதுவானவை (ரோமர் 1:29-31; 1 கொரிந்தியர் 6:9, 10; கலாத்தியர் 5:21; எபேசியர் 5:5). இப்படிப்பட்ட தீயபழக்கங்களை கொலோசெயிலும் பிற இடங்களிலும் இருந்த கிறிஸ்தவர்கள் தங்களுடைய கடந்த கால அஞ்ஞான நம்பிக்கை காலத்தின் போது மனம் போன போக்கில் கைக் கொண்டிருந்தார்கள்.*

*அவர் முதலில் குறிப்பிட்ட செயல்* ***விபச்சாரம்****, இதற்கு porneia என்பதை பயன்படுத்தினார், இந்த வார்த்தையிலிருந்துதான் "பரத்தையர் பற்றிய இலக்கியம்"* (pornography) *வந்தது. மற்ற மொழிபெயர்ப்புகளில்* fornication *"வேசித்தனம்" என்று இந்தப்பதம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது* (KJV; NKJV; NRSV) *அல்லது "பாலுறவு ஒழுங்கீனங்கள்"* (NIV; TNIV). *"பாலுணர்வு ஒழுங்கீனங்கள், அல்லது "மாறுபட்ட பாலுணர்வு," என்பதே "விபச்சாரம்" என்பதைக் காட்டிலும் சிறப்பான மொழிபெயர்ப்பாக இருக்கக் கூடும், இது மிக விசாலமான பொருளையுடையதாக இருக்கக் கூடும். Porneia என்பது ஒரு முறையற்ற பாலுறவை மட்டும் குறிப்பது; ஆனால் இது விபச்சாரத்துக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட வார்த்தையல்ல, இந்த உறவு மணம் செய்து கொள்ளாத இருவர்களுக்கிடையே இடம்பெறும் உடலுறவு. மாறாக, பவுல் இங்கே பயன்படுத்தியுள்ள வார்த்தை சட்டத்திற்குப் புறம்பான பாலுறவு செயல்களாகக் காணும் அனைத்தையும் உட்படுத்திய வார்த்தை, அவை ஓரினச்சேர்க்கை, பெண்புணர்ச்சி, மிருகத்தனமான புணர்ச்சி, விபச்சாரம், வேசித்தனம், மணமாகாதவர்களுக்கிடையேயான பாலுறவு செயல் போன்றவை. புதிய ஏற்பாட்டின் பிற இடங்களில் பலதரப்பட்ட வார்த்தைகள் இதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன, எல்லா இடங்களிலும் அப்படிப்பட்ட செயல்கள் கண்டிக்கப்படவே செய்கிறது.[1] யோவான் இதை வெளிப்படுத்தின விசேஷத்தில் உருவகமாக, இறைவெளிப்பாடாக பாபிலோனின் தீய ஒழுக்கங்களும் அதன் விபரங்களுமாக, குறிப்பிடுகிறார். (வெளிப்படுத்தின விசேஷம் 14:8; 17:2, 4; 18:3; 19:2).*

*கிரேக்கப் பெயர்ச்சொல் moicheia ("விபச்சாரம்"[2]) மற்றும் வினைச் சொல்லான moicheuō ("விபச்சாரம் செய்தல்"[3]) ஆகிய இரண்டையும் porneia எனும் "பாலுணர்வு ஒழுங்கீனத்துடன் குழப்பிக் கொள்ளக் கூடாது" இந்த செயல் திருமணமான ஒருவருக்கும் திருமணமாகாத ஒருவருக்குமிடையேயான உடலுறவையோ அல்லது திருமணமான ஒருவர் இன்னொருவருடைய (மனைவி அல்லது கணவன் ஆகிய) வாழ்க்கை துணைவராக இல்லாத ஒருவருடன் கொள்ளும் உடலுறவையோ குறிக்கப்பயன்படுத்தும் வார்த்தை. Porneia என்பது ஒரு விசாலமான பதத்திலிருந்து moicheia மற்றும் moicheuō ஆகிய இரண்டையும் உட்படுத்தின பதமாகும்.*

*பவுல் கொரிந்தியர்களுக்கு கற்பித்து porneia தொடர்புடையோருடன் கலந்திருக்க வேண்டாம் என்று சொன்னார் (1 கொரிந்தியர் 5:11). அவர் எச்சரிக்கை செய்து அவர்களிடம் "வேசிமார்க்கத்தாரும்" "தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை" என்று சொன்னார் (1 கொரிந்தியர் 6:9, 10). மேலும் அவர்களுக்கு அறிவுறுத்தி, "வேசித்தனத்துக்கு [பாலுணர்வு*

*ஒழுங்கீனங்களுக்கு] விலகியோடுங்கள்" என்று சொன்னார் (1 கொரிந்தியர் 6:18). கலாத்தியர் 5:19-21ல் மாம்சத்தின் கிரியைகளில் விபச்சாரத்தை அவர் முதலாவதாகக் குறிப்பிட்டார்.*

*பாலுணர்வு ஆசைகள் இனி கிறிஸ்தவர்களுக்குள் நிலைத்திருப்பதில்லை என்று போதிப்பதற்குப் பதிலாக, பவுல் இந்த ஆசைகளெல்லாம் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்று போதித்தார். வேசித்தனத்தைத் தவிர்க்க, தங்களுடைய பாலுணர்வு ஆசைகளை கட்டுப்படுத்துவதிலிருந்து விலகியிருக்க ஏதுவாக ஒருவர் திருமணம் செய்து கொண்டு தேவன் வகுத்த எல்லைக்குள் பாலுறவை தாராளமாக அனுபவிக்கலாம் (1 கொரிந்தியர் 7:1-5).*

*பாலுறவு முரண்பாடு அடுத்து வரும் இரண்டு வார்த்தைகளில் அடங்கக் கூடும்,* **அசுத்தம்**, *மற்றும்* **மோகம்**. *"அசுத்தம்" (akatharsia) சுத்தமற்ற ஏதோ ஒன்று அருவறுப்பான, குப்பையாக என்ற அர்த்தத்தில், சரீரக் கழிவு அல்லது கல்லறைக்குள் இருக்கும் நிலையை ஒத்த வார்த்தை (மத்தேயு 23:27). ஒழுக்க சம்பந்தப்பட்ட இழிவுத்தன்மை மற்றும் அசுத்தம் ஆகியவற்றுக்கு பயன்படுத்தும் போது, அது பெரும்பாலும் போர்னியாவுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். கலாத்தியர் 5:19ல் அது மாம்சத்தின் கிரியை என்று அழைக்கப்படுகிறது (காண்க 2 கொரிந்தியர் 12:21; எபேசியர் 5:3). இந்த வார்த்தை சுபாவப்படியல்லாத ஒழுங்கீனமான அனுபவத்தைக் குறிப்பிடுவது (ரோமர் 1:24), இதற்கு முரணானது பரிசுத்தமும் ("பரிசுத்தம்"; 1 தெசலோனிக்கேயர் 4:7) நீதியும் (ரோமர் 6:19).*

*"கட்டுக்கடங்கா உணர்ச்சி" (pathos) என்பது ஒருவரை அடிமையாக்கிவிடும் தன்மையைக் கொடுத்து கட்டுப்படுத்த இயலாதவாறு மேலோங்கி நிற்கும். இந்த வார்த்தை 3:5ஆ விலும், ரோமர் 1:26லும் காணப்படுகிறது ("இழிவான இச்சை ரோகங்கள்") மேலும் 1 தெசலோனிக்கேயர் 4:4ல் ("மோக இச்சை"). பெரும்பாலான வேதாகமம் சாராத பயன்பாடுகளில் "அநுபவிக்கப்படுவது, சகித்துக் கொள்வது, அல்லது பாடுபடுதலைக் குறிக்கும்" (இயேசு சிலுவையிலே பாடுபட்ட காட்சியும் இதற்கு உட்பட்டது). ஸ்தோயிக்கர்கள் இந்தப் பதத்தை உணர்ச்சிகளால் ஆட்கொள்ளப்பட்ட ஒரு நபர் அமைதியாக வாழ இயலாமல் போகும் காட்சிக்கு இதைப் பயன்படுத்தினர். இங்கே இது ஒரு வலிமையான பாலுணர்வு மோகத்துக்கு, தீமையான பாலுணர்வு ஆர்வத்துக்கு, கட்டுப்படுத்த இயலாத பாலுணர்வு ஆசைகளை ஒழுங்கீனமாய் அனுபவித்தலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. "பாலுணர்வு ஒழுங்கீனங்கள்" சரீர செயலையும் உட்படுத்தியது, "மோகமோ" மனதிலே உட்கார்ந்து கொண்டு ஒழுங்கீனமான சரீர (பாலுறவுச்) செயலைச் செய்ய தூண்டிக் கொண்டேயிருக்கும்.*

**துர்இச்சை** *என்பது இரண்டு கிரேக்க வார்த்தைகளின், kakē ("தீமையான") மற்றும் epithumia ("ஆசை") ஆகியவைகளின் மொழிபெயர்ப்பு. ஒரு வசனப்பகுதியால் மட்டுமே "ஆசை" என்பது நல்லதா கெட்டதா என தீர்க்கமாக முடிவு எடுக்க உதவும். இந்தக் காரியத்தில், "ஆசை" என்பது "தீமை" என்பதோடு வருவது, பவுல் பாவ ஆசையைக் குறிப்பிட்டார் என்று பொருள்படுத்தும்.*

*Epithumia என்பதன் அடிப்படைப் பொருள் "ஒருவருடைய இருதயம் ஏதோ ஒன்றில் இருத்தல்," ஏதோ ஒன்றைச் செய்வதற்காக அல்லது*

*பெறுவதற்காக வலிமையாக ஏக்கங் கொண்டிருத்தல். அந்த வார்த்தையானது "இச்சித்தலைக்" குறிக்கிற தவறான அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது, அது பத்துக்கட்டளைகளில் தடை செய்யப்பட்டுள்ளவைகளில் ஒன்று (காண்க ரோமர் 7:7; 13:9), தவறான இச்சை (1 கொரிந்தியர் 10:6; கலாத்தியர் 5:17; யாக்கோபு 4:2). பவுல் எபேசியரின் வெள்ளியையாகிலும், பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் தான் "இச்சிக்கவில்லை" என்று சொன்னார் (நடபடிகள் 20:33). முறையற்ற பாலுணர்வு ஆசைக்கு இயேசு இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (மத்தேயு 5:28). விபச்சார எண்ணத்தை மனதில் வைத்துக் கொண்டிருப்பதே விபச்சாரம் செய்வதற்கு ஒப்பான பாவம் என்று போதித்தார். பாலுறவில் ஈடுபடுவது மட்டுமே பாவம் செய்வதற்கான வழிஅல்ல; ஆசைகளை வளர்த்துக் கொண்டு பாலுறவில் உடல் உறவை ஏற்படுத்திக்கொள்ளும் நோக்கத்தோடு ஒரு பெண்ணை பார்ப்பதும் பாவமே. அப்படிப்பட்ட ஆசைகளுக்கு மரிக்க வேண்டும் என்று பவுல் போதித்தார்.*

*மற்றொரு வசனப்பகுதியில் epithumia என்பது நல்ல ஆசையையோ அல்லது ஏக்கத்தைக் கொள்வதையோ பொருள்படுத்தலாம்.[4] இதற்கு ஒரு உதாரணம் தான் கண்காணிப்பை விரும்புகிற மனுஷனுடைய விஷயத்தில் சொல்லப்படுகிறது; பவுல் எழுதும்போது அவன் நல்ல வேலையை "விரும்புகிறான்" என்று எழுதினார் (1 தீமோத்தேயு 3:1).*

***"விக்கிரகாராதனையான பொருளாசை" (3:5இ)***

*பவுலின் அடுத்த வார்த்தை, pleonexia,* KJV *"இச்சித்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆகிலும்* NASB *மொழிபெயர்ப்பில் வழக்கமாக பொருளாசை என்றே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[5]* KJV *மொழிபெயர்ப்பிலும்* NASB *மொழிபெயர்ப்பிலும் ஒரே அடிப்படை வார்த்தையாகிய pleonektēs என்பது "இச்சித்தல்" என மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 5:10, 11; 6:10; எபேசியர் 5:5). அது ஒரு தேவைக்கு மேலாக அல்லது எதிர்பார்க்கப்பட வேண்டியதற்கும் மேலாக, ஆசைவைத்தல் என்ற பொருளில் பொருளாசை கொள்ளுதல் இச்சித்தல் ஆகியன. பாலுணர்வு பாவங்களை மட்டும் குறிப்பதாக இந்த வார்த்தை பொருள் படவில்லை என்பதை உறுதிப்படுத்தும்படி, பவுல் தொடர்ந்து, "விக்கிரகாராதனையாகிய" என்பதையும் கூட்டி எழுதுகிறார். இயேசு தம்முடைய சீஷர்களிடம் "(எல்லாவகையான) பொருளாசையைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்" என்று சொன்னார் (லூக்கா 12:15அ).*

*ஒன்றை அடைய வேண்டும் என்ற பேராவல், சொந்தம் பண்ணிக் கொள்ளவோ, பயன்படுத்திக்கொள்ளவோ, அல்லது ஒன்றை அனுபவித்துவிட வேண்டும் என்ற வேட்கை விக்கிரகாராதனையாகிறது. ஒருவர் மிகத் தீவிரமாக தனது இச்சையைத் தீர்த்துக் கொள்ள ஆதாரம் தேடுவது அதுவே ஆராதிக்கப்படுவதாகிறது. இந்தப் பேராசை பாலுணர்வில் ஈடுபட விரும்புதலையோ அல்லது வேறு ஏதோ ஒரு ஆசை தேவனுக்குரிய சேவை மற்றும் ஒப்புக் கொடுத்தலின் இடத்தைப் பிடித்துக் கொள்ளுதலையே குறிப்பிடுமாகில் அது விக்கிரகாராதனையாகிறது. பண ஆசை இதற்கு ஒரு உதாரணம்: அது பொருளாசையை அடிப்படையாகக் கொண்டதும் "எல்லா தீமைக்கும்" வேரான தென்றும் காணுகிறோம் (1 தீமோத்தேயு 6:10).*

பவுல் தனது சுவிசேஷப் பிரசங்கத்தின் உள்நோக்கம் பொருளாசையோ மாயம் பண்ணுதலோ செய்து ஐசுவரிய சம்பன்னனாவது அல்ல என்று எழுதினார் (1 தெசலோனிக்கேயர் 2:4, 5). கொரிந்துவிலே, சிலர் பொருளாசை கொண்டு, "peddling the word of God" என்றுள்ளது (2 கொரிந்தியர் 2:17; NASB).

**விக்கிரகாராதனை** இஸ்ரவேலரின் தொழுகையில் ஒரு வாதையாக தொடர்ந்து நுழைந்து கொண்டிருந்தது. தேவன் கடுமையாக அதைக் கண்டனம் பண்ணினார், மேலும் தொடர்ந்து தீர்க்கதரிசிகளை அனுப்பி அதற்கு எதிராக எச்சரித்தார். தாவீது அநேகமாக தேவனுடைய எச்சரிப்புகளை பிரதிபலிக்கும் பொருட்டு வலிமையான வார்த்தைகளால் விக்கிரகாராதனைக்காரர்களுக்குக் கொடுத்தார்: "வீண் மாயைகளைப் (விக்கிரகங்களை) பற்றிக் கொள்ளுகிறவர்களை" வெறுக்கிறேன் (சங்கீதம் 31:6அ). இஸ்ரவேலர்கள் விக்கிரகாராதனை செய்கிற காரியத்தைக் குறித்து, "உங்களுக்குப் பாவமாக உங்கள் கைகள் செய்திருந்த வெள்ளி விக்கிரகங்களையும், பொன் விக்கிரகங்களையும், உங்களில் ஒவ்வொருவரும் அக்காலத்திலே வெறுத்து விடுவீர்கள்" என்று ஏசாயா எழுதினார் (ஏசாயா 31:7). மேலும் அவர் குறிப்பிடுகையில், "சித்திர வேலையான விக்கிரகங்களை நம்பி, வார்ப்பிக்கப்பட்ட சுரூபங்களை நோக்கி: நீங்கள் எங்கள் தேவர்கள் என்று சொல்லுகிறவர்கள் பின்னடைந்து மிகவும் வெட்கப்படுவார்கள்" (ஏசாயா 42:17; காண்க எரேமியா 10:14). எசேக்கியேல் மூலமாக, ஆராதிக்கப்பட்ட இந்தப் பொருட்கள் "சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்க விக்கிரகங்கள்" என்று தேவன் சொன்னார் (எசேக்கியேல் 5:11).

தேவன் பத்துக் கட்டளைகளில் இஸ்ரவேலர்கள் விக்கிரக வணக்கம் செய்தல் கூடாது என்று தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார் (யாத்திராகமம் 20:3-5; உபாகமம் 5:7-9). அதே போல கிறிஸ்தவர்களும் விக்கிரகங்களுக்கு சேவை செய்தலைக் குறித்து எச்சரித்தார் (காண்க நடபடிகள் 15:20). தங்களுடைய வாழ்க்கையின் பிரதானமான இலக்கு ஆஸ்திகளை சேர்க்க வேண்டுமென்று இருப்பவர்கள் தாங்கள் தேவனுக்கு பணிவிடை செய்வதைக் காட்டிலும், ஆஸ்திகளையே தங்கள் தேவர்களாக்குகிறார்கள், அதுவே அவர்களுடைய தேவர்களாகின்றன. ஆதிசபையானது "... விக்கிரகங்களுக்கு விலகியிருக்கும்படியும்" (நடபடிகள் 15:29அ) விக்கிரகங்களை வணங்குவதைத் தவிர்க்கும்படியும் போதிக்கப்பட்டிருந்தது (காண்க 1 கொரிந்தியர் 10:14; கலாத்தியர் 5:20, 21; 1 யோவான் 5:21).

தங்களுடைய தொழுகையிலே உருவங்களையும், சுரூபங்களையும் பயன்படுத்துகிறவர்கள் விக்கிரகங்களுக்கு எதிரான தேவனுடைய கட்டளையை மீறுவதாகும். தேவன் மோசேயினிடத்தில் காரணமாகத்தான் எந்த ஒரு சரீரப்பிரகாரமான தோற்றத்திலுள்ளவைகள் வானத்திலுள்ளவைகளுக்கு ஒப்பாக இருந்தாலும் பூமியிலுள்ளவைகளுக்கு ஒப்பாக இருந்தாலும் நமஸ்கரிக்க வேண்டாம் என்றார்: "கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காணவில்லை" (உபாகமம் 4:15ஆ). ஏனெனில் தேவன் அதரிசனமானவர் (கொலோசெயர் 1:15; 1 தீமோத்தேயு 6:16), எனவே அவர் ஒரு அதரிசனமானவர் என்ற வகையில் மட்டுமே தொழுது கொள்ளப்பட வேண்டும். ஆவி என்ற வகையில் அவர் ஆவியோடும் உண்மையோடும்

தொழுது கொள்ளப்பட வேண்டும் (யோவான் 4:23, 24). மனுஷன் செய்கிற எதுவுமே தேவனை வெளிப்படுத்த சரியான ஒன்றாக இருக்க இயலாது, மேலும் அவரைத் தொழுது கொள்ள சரியான தோற்றத்தை கொடுக்க இயலாது அவரைத் தொழுது கொள்ள மனிதன் செய்கிற எதுவும் உபயோகப்படுத்தப்படக்கூடாது.

**"ஆகிய இவைகளைப் பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்" (3:5ஆ)**

அவர்கள் **பூமிக்குரிய சரீரத்தின் அவயங்களை செத்துப் போனதாக நினைத்துக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தார்கள்** (3:5). நல்ல செயல்களும் அதே போல கெட்ட செயல்களும் சரீரத்தின் "அவயவங்கள்" மூலமே (*melē*) நடப்பிக்கப்படுகின்றன. கைகள் திருடக்கூடும் அல்லது நல்லது செய்யக்கூடும், கால் ஒருவரை தீமை செய்யும்படி ஒரு இடத்திற்கு கூட்டிக் கொண்டு போகலாம் அல்லது தேவனை தொழுகை செய்யும்படி கூட்டிக் கொண்டு போகலாம், கண்கள் சோதனைக்குட்படுத்தும் வாசகங்களை வாசிக்கவோ அல்லது தேவனுடைய வசனத்தின் மீது கவனத்தைத் திருப்பவோ செய்யலாம், நாவுகள் தீமையானவைகளைப் பேசலாம் அல்லது மற்றவர்களுக்கு உதவத்தக்க வார்த்தைகளைச் சொல்லி ஊக்கப்படுத்தலாம். காதுகள் வன்முறையான பேச்சுக்களைக் கேட்கலாம் அல்லது நல்வார்த்தைகளைக் கேட்கலாம் மற்றும் மூளையானது பாவகாரியங்களைச் சிந்திக்கலாம் அல்லது பரிசுத்தமான சிந்தனைகளைக் கொண்டிருக்கலாம், இந்த இடத்தில், பவுல் பொதுப்படையாக அவயங்களை தீமையான காரியங்களுக்குப் பயன்படுத்துவதையே குறிப்பிட்டார். தீமையான காரியங்களுக்கான மரணம் கிறிஸ்தவர்கள் அது உண்மையென்று கருதினால் மட்டுமே அது உண்மையானதாயிருக்கும். "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" (ரோமர் 6:11).

"மரித்தவர்களாக ... எண்ணிக்கொள்ளுங்கள்" (*nekrōsate*), இந்த வசனத்தில் இது ஒரு முக்கியத்துவம் ஆனது, கிரேக்க மொழியில் மிக பலமான ஒரு சொல், நேரடிப் பொருளில் "மரிக்கச் செய்தல்." பவுலின் வழிகாட்டல் என்னவெனில் அவர்கள் தங்கள் பாவசரீரத்தின் செய்கைகளை ஞானஸ்நானத்தின் போதே முடிவுற்றிருக்க வேண்டிய நிலையில் முழுமையாய் கொல்லப்பட்டிருக்க வேண்டும் (6:1-6). அவர்கள் தங்கள் முந்தின வாழ்வுமுறைகளுக்கு ஞானஸ்நானத்தின் போது மரித்திருந்த போதிலும், அவர்களுடைய வாழ்க்கையிலிருந்த தீமையான எண்ணங்களெல்லாம் மரித்துப் போனதாகப் பொருளல்ல, ஏனெனில் இவைகள் ஆபத்துக்குரிய விதத்தில் அவர்களுடைய வாழ்க்கையிலே மீண்டும் கிரியை செய்யத் தூண்டக்கூடும், எனவே "சாக வேண்டுமெனில்" முற்றிலுமாக அகற்றப்பட வேண்டும்.

எட்வார்ட் லோஷ்சி எழுதினதாவது, "அழித்துப் போடுங்கள்." அதன் பொருள்: 'பழைய மனுஷன், அவன் மரித்தே இருக்கட்டும் ஏற்கனவே ஞானஸ்நானத்திலே, மரித்திருக்கிறான். "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய

*இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்.' "*[6] மேலும் அவர் விளக்கமளித்து, "ஞானஸ்நானத்தில் பெற்ற கிறிஸ்துவுடனே கூட மரித்தல் என்பது, 'பூமிக்குரிய அவயங்களை' மரிக்கச் செய்வதால் அழித்துப் போடுதல் இப்போது சரியானதாக இருக்கும்" என்றார்.[7]

பவுல் இந்தக் கிறிஸ்தவர்களுக்கு அறைகூவலாக கடந்த காலத்துக்கு மரித்து நிகழ்காலத்துக்கு வாழும்படி அறிவுறுத்துகிறார். அழித்துப் போடுதல் (மரித்தல்) என்பதை அவர் நேரடிப் பொருளில் சொல்லவில்லை; மாறாக, அதை உருவக மொழியில் வாழுகிற மாதிரியை விட்டு விடும்படியாக, உலகத்தால் மாசுபடாதபடிக்கு அவைகளிலிருந்து முழுமையாக விலகியிருக்க வேண்டியதைக் குறிப்பிட்டார். சரீர ஆசைகளை தவறாக பயன்படுத்துவதால் பாவங்கள் வருகிறது - அவை பாலுணர்வு சம்பந்தப்பட்டவை, பசி, சரீர அமைதி போன்றவை - அவை தேவன் கொடுத்துள்ள வரையறைக்கு உட்பட்டதாயிருந்தால், நல்லது. கொலோசெயர்கள் இந்த சரீரமோகங்களை முறையாக வழிநடத்திக் கொள்ள வேண்டியவர்கள், அதினால் அவைகளைக் கட்டுப்படுத்தி தேவனுக்கென்று பயன்படுத்த வேண்டும். சரீரம், தன்னில் தானே, தீமையானது அல்ல; ஆனால் அது பாவமுள்ள செயல்கள் இடம் பெற ஏதுவாக அது ஒரு வழிப்பாதை. அது மூலமாகத்தான் இருதயம் நற்கிரியைகளை வெளிப்படுத்துகிற ஒரு கருவியாக இருக்கிறது. நல்லதும் கெட்டதும் ஒரு நபருடைய ஜீவியத்தில் உருவாகும் மூலஸ்தலம் அவரே (மத்தேயு 15:19, 20). உண்மையான நபர் உள்ளான மனுஷன்.

சரீரத்தின் அவயவங்கள் தீய நோக்கங்களுக்காக மரித்திருந்தால், அதன் விளைவு புதிய பயன்பாடாகவும் அவைகளுக்கென ஒரு நோக்கம் உடையதாகவும் இருக்கக் கூடும். "உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும் ... இதுவே தேவனுக்குப் பிரியமானது" (ரோமர் 12:1); "மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மை சுத்திகரித்துக் கொண்டு பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோட பூரணப்படுத்தக்கடவோம்" (2 கொரிந்தியர் 7:1). பாவ சரீரம், மாம்ச சரீரமல்ல, அது ஒழிந்து போக வேண்டும் (ரோமர் 6:6). அதன் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாக பயன்படுத்துவதற்குப் பதிலாக, கொலோசெயர்கள் அவைகளை, மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவர்களாக, நீதியின் ஆயுதங்ககளாகப் பயன்படுத்த வேண்டும் (ரோமர் 6:13). அவயவங்கள் அசுத்தத்திற்கும் அக்கிரமத்துக்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுக்கப்படாமல் நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுக்கப்பட வேண்டும் (ரோமர் 6:19ஆ).

உலகத்தார்கள், ஒரு குறிப்பிட்ட அளவு, பலதரப்பட்ட தீயக் குணங்களை தங்களுடைய வாழ்க்கையிலிருந்து ஒருவேளை அகற்றவோ அல்லது புதிய ஜீவனை அடையும் பொழுது அவர்கள் பவுல் பரிந்துரைக்கும் சில நல்லொழுக்கங்களைப் பெருக்கிக்கொள்ளவோ செய்யலாம், எப்படியிருப்பினும், கிறிஸ்தவர்களாகிய நமக்கு உலகத்தாருக்கு இல்லாத ஒரு சிநேகிதர் இருக்கிறார் (யோவான் 14:17அ), நம்முடைய வாழ்க்கையில் நாம் பரிபூரணமான பரிசுத்தத்தை அடைய நாம் தேடும் போது அவர் நம்மை பெலப்படுத்துகிறார் (எபேசியர் 3:16; 2 கொரிந்தியர் 7:1ஆ).

உலகம் சுயநீதிக்கென அப்படிப்பட்ட மாற்றங்களைப் பெற வகைதேடக் கூடும், ஆகிலும் கிறிஸ்தவர்களாகிய நாமோ கிறிஸ்துவை மகிமைப் படுத்தவும் பிரியப்படுத்தவும் நாம் மாற்றங்களைச் செய்கிறோம். இப்படிச் செய்வதால், அருவெறுக்கத்தக்க ஒழுங்கீனத்தில் கெட்டுப்போய் துர்வாடை வீசும் இந்த சமுதாயத்திற்கு எதிரான நற்கிரியைகளைச் செய்யக் கூடும். 2 கொரிந்தியர் 2:15, 16ல் பவுல், "இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்கு நற்கந்தமாயிருக்கிறோம், கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்திற்கேதுவான மரண வாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கிறோம்."

***"இவைகளின் பொருட்டே ... தேவகோபாக்கினை" (3:6அ)***

**கோபாக்கினை** என்பது கிரேக்க வார்த்தையான *orgē*, என்ற சொல்லிலிருந்து வந்தது, இது "கோபம்" என்றும் மொழிபெயர்க்கப்படலாம். (காண்க 3:8ஆ வில் வரும் விவாதம்.) தேவனுடைய கோபம்தான் பழைய ஏற்பாட்டு புஸ்தகங்களினூடே சொல்லப்பட்ட பெரிதான மையக்கருத்து.[8] இது "தேவ கோபாக்கினை"[9] என்பதும் உண்மையாகும். புதிய ஏற்பாடும் கோபத்தின் தன்மையையும் தேவ கோபாக்கினையையும் தேவனுடைய பண்பாகப் பேசுகிறது.[10] கோபாக்கினை என்பது தேவனுடைய குணாதிசயத்துக்குரியது, அதை யாரும் மறுக்க முடியாது, அப்படித்தான் பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் சொல்லப்பட்டுள்ளது. (காண்க "மேலும் கற்றுக்கொள்ள: 'தேவக்கோபாக்கினை' [3:6]").

தொடர்ந்து தேவனுடைய அன்பு, இரக்கம், மற்றும் தயவு ஆகியவைகளையே பார்த்தவர்களில் சிலர் அவருடைய கோபத்தையும் கோபாக்கினையையும் காண இயலாதவர்களாக்கப்பட்டுள்ளனர். மறையியல் ஞானிகள் என்போரின் கூற்றுப்படி பழைய ஏற்பாட்டுத் தேவன், கோபாக்கினை செலுத்தும் தேவனாக இருந்தார், அவர் புதிய ஏற்பாடு கூறும் அன்பின் தேவனைப் போன்றவரல்ல என்று போதித்தனர், நியாயப்பிரமாணத்துக் கீழ்ப்படியாமற்போனவர்களுக்கு மிகவும் கடுமையான தண்டனையை தேவன் கொடுத்ததால் அச்செயல் பழைய ஏற்பாட்டின் தேவன் புதிய ஏற்பாட்டிலிருந்து வித்தியாசப்பட்டவர் என்பதற்கான ஆதாரமாகப் பார்த்தனர்.

இப்படிப்பட்ட முடிவுகளால் இயேசுவின் கோபத்தை அறியாமலிருக்கின்றனர் (மாற்கு 3:5) மேலும் அனனியா சப்பீராள் மீது தேவன் செலுத்தின தண்டனையையும் (நடபடிகள் 5:1-10), ஏரோதின் மீதும் (நடபடிகள் 12:21-23), மற்றும் எலிமா மீதும் செலுத்தின ஆக்கினையையும் அறியாதிருக்கிறார்கள் (நடபடிகள் 13:6-11). அக்கிரமஞ் செய்வோர் மீது செலுத்தப்படும் தண்டனைகளும் கணக்கில் கொள்ளப்பட வில்லை (ரோமர் 2:6-11). இயேசுவும் பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு தேவனும் தங்கள் தன்மையிலே ஒரே மாதிரியாகத்தான் இருக்கிறார்கள். இயேசு கீழ்ப்படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினையை செலுத்தும்படி வருவார் (2 தெசலோனிக்கேயர் 1:7-9).

*தேவனுடைய கோபாக்கினையின் கடும் தீவிரம் இஸ்ரவேல் மீது காட்டப்பட்டது கிறிஸ்தவயுகத்தில் வாழ்வோருக்கு ஒரு எச்சரிப்பாகவும் உறுதியளிப்பதாகவும் கொடுக்கப்பட்டுள்ளது அவருக்குக் கீழ்ப்படியாதவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதற்குச் சான்று (எபிரெயர் 10:28, 29). இஸ்ரவேலுக்கு எதிரான அவருடைய செயல்கள் எல்லா ஜனத்தாரிலும் அவருக்கு மதிப்பளிக்காமலும் அவருடைய சித்தத்திற்கு பொறுப்பேற்காமலும்போகிறவர்களுக்குஅவர்அளிக்கும்தீர்ப்புஎப்படியிருக்கும் என்பதற்கு ஒரு உதாரணம். "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1 கொரிந்தியர் 10:11); "விரோதமான எந்த செய்கைக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரும்" (எபிரெயர் 2:2ஆ).*

*தேவனுடைய கோபாக்கினையும் கோபமும் பகுத்தறிவற்ற பிரதிபலிப்பால் உண்டாகும் பிரியமற்ற காரியங்களுடன் ஒப்பிடப்படக்கூடாது. சில விளக்கவுரையாளர்கள் இந்த வார்த்தைகளை தவிர்த்து தேவனைக் குறிப்பிடுகையில் "தேவனுடைய திடீர் சங்காரம்," மற்றும் "தேவனுடைய பயங்கரமான தண்டனை," "தேவனுடைய தீர்ப்பு," "நடுங்கச் செய்யும் தண்டனை" என்றெல்லாம் பயன்படுத்துகின்றனர். இந்த வாக்கியங்களெல்லாம் உண்மையானவைதான் என்றாலும் பொல்லாங்கு நிறைந்த மனிதர்கள் முன்பு தேவனுடைய மனது அடையாளம் காட்டப்படுவதில்லை.*

*ஆச்சரியமாகக் காணப்பட்டாலும், கோபாக்கினை என்பது அன்பின் விளைவாக இருக்க முடியும். தன் மனைவியை அதிகமாய் அன்புகூரும் ஒரு மனிதன், தான் மனைவி அவனை விட்டு விட்டு வேறொரு மனுஷனோடு போய் விடுவாளானால் அவன் கோபம் கொப்பளிக்கக் காணப்படுவான். அவன் அவளிடத்தில் அன்பில்லாதவனாக இருந்திருந்தால் அவள் அவனை விட்டுப் போன சம்பவம் அவனைக் கோபப்படுத்தியிருக்காது. தேவன் தமது அன்பினாலே, தம்மை விட்டு விலகி பிசாசானவனை பின்பற்றிப்போகிறவன் மேல் தமது கோபாக்கினையைச் செலுத்துகிறார் (1 யோவான் 3:8), பவுல் பட்டியலிட்டபடி பாவத்தின் செய்கையில் ஈடுபட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு அந்தக் கோபாக்கினை வரும்.*

### *"கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் வரும்" (3:6ஆ)*

*தேவனுடைய கோபாக்கினை* **(வரும்)** *என்பதை பவுல் உறுதிப்படுத்த வினைச்சொல்லாகிய erchomai எனும் பதத்தைப் பயன்படுத்தினார். வசனம் 6லும் எபேசியர் 5:6லும் erchomai எனும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருப்பது (நிகழ்) காலத்தில் (அது எதிர்கால நிகழ்ச்சி போல் குறிப்பிடப்பட்டிருந்தாலும்), சில வல்லுனர்கள் கீழ்ப்படியாதவர்கள் மேல் தேவனுடைய கோபம் இப்போது இருக்கிறது என்று பவுல் அர்த்தப்படுத்தினார் என்று முடிவு செய்கின்றனர்.* William Hendriksen *விளக்கமளித்து, "சில வேளைகளில் இது நிகழ்காலத்தில் பேசும் தீர்க்க தரிசனம் என்பர் (ஒப்பீடுக யோவான் 4:21; 14:3) தேவனுடைய கோபாக்கினை வரும் எனும் வார்த்தை, அப்படிப்பட்ட பாவங்களை செய்வோரை அவர் விசாரிப்பார், என்பது உறுதி என்று காட்டும் பொருட்டு ஏற்கனவே வந்து விட்டது போல் பேசப்படுகிறது என்றார்."[11]*

*தேவனுடைய கோபாக்கினையின் தண்டனை எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட்ட திருப்தியை நிகழ்கால நிஜமாக பாவிக்கப்படுகிறது (1 தெசலோனிக்கேயர் 1:10). "குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" (யோவான் 3:36ஆ).*

***கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்*** *எனும் சொற்றொடர் மூலபாஷையில் இருக்கும் வார்த்தையா இல்லையா என்பது குறித்து வல்லுனர்கள் கேள்வி எழுப்புகின்றனர். அதன் கிரேக்க புதிய ஏற்பாட்டின் சேர்க்கையைக் குறித்து ஐக்கிய திருமறைச் சங்கத்தால் வெளியிடப்பட்டதில்* Bruce Metzger *சொன்னதாவது, "... கமிட்டியின் பெரும்பான்மையோர் வசனங்களில் அந்த வார்த்தைகளை வைத்துக் கொள்ளவும் ஆனால் கொலோசெயரின் உண்மைத் தன்மைபற்றிய சில சந்தேகத்தினால் அவைகளை சதுர அடைப்புக் குறிக்குள் சேர்த்து கொள்ளவும் தீர்மானித்தனர்."*[12]

*இந்த சொற்றொடரின் வேறுபாடுகள் எண்ணிறைந்த மொழிபெயர்ப்புகளில் காணப்படுகிறது* (NASB; KJV; NKJV; TEV). *மற்றவைகளில் அது விடுபட்டு பக்க எல்லைக் கோட்டுக்குள் குறிப்பிடப்பட்டுள்ளது* (1977 NASB; ASV; NEB; NIV; TNIV; RSV; NRSV). *பெரிய மூலப் பிரதிகள் (உதாரணமாக, சீனாய்டிகஸ் என்னும் கிரேக்க- சீனாய் திருமறை, மற்றும் எகிப்திலிருந்த அலெக்ஸாந்திரிய திருமறை ஆகியன, மற்றும் அநேக சிறு சிறு பிரதிகள்) இந்த சொற்றொடர் மூலப் பிரதியில் இருந்தது என்பதற்கு இன்னும் அதிக ஆதாரத்தைக் கொடுக்கின்றன. சில வியாக்கியானிகள் "இந்தச் சொற்றொடர் தொடர்ந்து நிலைத்திருக்க அநேக பிரதிகளின் வெற்றி சிறந்த ஆதாரங்கள் காணுகின்றன" என்று சொல்லுகின்றனர்.*[13]

*கொலோசெயர் நிருபத்தின் மூலப்பிரதியில் இச்சொற்றொடர் காணுகிறதோ இல்லையோ, எபேசியர் 5:6ல் இது காணுகிறது: "இப்படிப் பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண் வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்." இந்தக் காரணத்தால், இதில் வரும் வார்த்தைகள் கீழ்ப்படியாதவர்கள்மேல் வரும் தேவனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்த முகவுரைக்கு ஆதாரம் அளிக்கின்றது.*

*"கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்" என்றால் இந்தக் கூட்டத்தில் இருப்போர் கீழ்ப்படிதலில்லாத வாழ்க்கையை வாழ்ந்ததின் பயனாக உருவான இயல்பைப் பெற்றவர்கள் என்று பொருள். பவுல் இங்கே கீழ்ப்படிதலில்லாத பெற்றோருக்கு பிறந்தவர்கள் அவர்கள் என்று பொருள்படுத்தி எழுதவில்லை, அல்லது பாவ இயல்புடன் பிறந்ததாகவும் கூறவில்லை. "பிள்ளைகள்" என்பதோ "மகன்" (பிள்ளை) என்பதோ அவர்களுடைய (சுய) குணத்தை வெளிப்படுத்தப் பயன்படுத்திய வார்த்தை, அது "நரகத்தின் மகன்" (மத்தேயு 23:15), "இடிமுழக்க மக்கள்" (மாற்கு 3:17), "ஒளியின் பிள்ளைகள்" (லூக்கா 16:8), "இப்பிரஞ்சத்தின் பிள்ளைகள்" (லூக்கா 16:8), "கேட்டின் மகன்" (யோவான் 17:12), "ஆறுதலின் மகன்" (நடபடிகள் 4:36), மற்றும் "பிசாசின் மகன்" (நடபடிகள் 13:10), போன்றவற்றைக் குறிக்கும்.*

***"நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்து கொண்டுவந்தீர்கள்" (3:7).***

*கடந்த காலத்தில் கொலோசெயர்கள் உலகப்பிரகாரமான செயல்களில் ஈடுபட்டு வந்தனர், ஆனால் இப்பொழுது அப்படிப்பட்ட நடக்கைகளோடு அவர்களுக்கு எவ்வித சம்பந்தமுமில்லை. "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும்" அவர்கள் இருந்தார்கள் (1:21). கிறிஸ்துவுக்குள் புதிய ஜீவனை அவர்கள் துவங்கினார்கள் என்ற உண்மையானது அவர்கள் இதற்கு முன்பு சஞ்சரித்துக் கொண்டிருந்த காரியங்களுக்குத் திரும்பவே முடியாது என்று அர்த்தப்படுவதில்லை. எப்படியிருப்பினும், இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள வினைச் சொல் (periepatēsate) அது முற்றுப்பெற்றுள்ள கடந்தகால செயலாக அல்லது நிறைவேறின செயலாகக் கண்ணோக்கப்பட வேண்டும் பவுலின் நிருபத்தைப் பெற்றவர்கள் இந்தப் பாவங்களுக்காக மரித்திருந்தார்கள், இப்படியாக தங்களுடைய வாழ்வு முறையின் முந்தின மாதிரிக்கு முடிவுண்டாக்கினார்கள்.*

*"சஞ்சரித்தபோது" என்பது அவர்களுடைய செய்கையை, அல்லது இயக்கத்தைக் குறிக்கிறது, அது கடந்த காலத்தில் நிகழ்ந்திருக்கலாம் அல்லது நிகழ்காலத்திலே நடந்து கொண்டு இருக்கலாம்; ஆகிலும். "... போது" என்னும் வார்த்தை (pote) அவர்கள் தொடர்ந்து கடந்த காலத்தில் இந்தப் பாவங்களில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. சஞ்சரித்தல் என்பது குறிப்பிட்ட முறையில், நல்லமுறையிலோ, கெட்ட முறையிலோ, வாழ்வதைக் குறிப்பிடுகிறது. அது நல்ல அர்த்தமுடைய வாழ்விற்கும் பயன்படுத்தலாம்[14] அல்லது கெட்ட அர்த்தமுடைய வாழ்க்கைக்கும் பயன்படுத்தப்படலாம்[15] (காண்க ரோமர் 8:4).*

*பவுல் குறிப்பிட்ட பாவங்கள் போன்றவை ஜனங்களுடைய வாழ்க்கையை கட்டுப்படுத்தும் சக்திகளாக மாறிவிடக் கூடும். கொலோசெயர்கள் தொடர்ந்து பாலுணர்வு ஒழுங்கீனங்களிலும் (விபச்சாரம்) அசுத்தம், மோகம், துர்இச்சை, மற்றும் பொருளாசை போன்ற பாவங்களில் இருந்துள்ளனர். இயேசு, பாவஞ்செய்கிறவன் "பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்" என்றார் (யோவான் 8:34). பவுலும் பேதுருவும் இதே உண்மையைப் போதித்தார்கள் (ரோமர் 6:16; 2 பேதுரு 2:19). கொலோசெயர்கள் எச்சரிக்கையாக இராமற்போனால், அவர்கள் மீண்டும் தங்களுடைய முந்தின வாழ்க்கைக்கு திரும்பி விடக்கூடும், என்று அவர்கள் உணரும்படி பவுல் விரும்பினார். அவர்கள் பாவங்களில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள், அவைகளில் நடந்து கொள்வதையே வாழ்வு நெறியாகக் கொண்டிருந்தனர், இப்பொழுதோ இனியும் அவ்வழியில் வாழ்கிறவர்களல்ல.*

## அவபக்திக்குரிய நடத்தைகளை களைந்து போடுதல் *(3:8, 9)*

**8இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள். 9ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய**

**மனுஷனையும் அவனுடைய செய்கைகளையும் களைந்து போட்டு.**

**“இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத வம்பு வார்த்தைகளுமாகிய” (3:8அ)**

*__கோபம்__ என்பது என்பதன் orgē, என்பதன் மொழிபெயர்ப்பு, இது 3:6ல் கோபாக்கினை என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[16] இது தவறு நடத்தலை கண்ணுறும் போது சில வேளைகளில் அதனிமித்தம் வெளிப்படுகிற கடுமையான மற்றும் ஆழமான அதிருப்தியை வெளிப்படுத்துவது, அது ஒரு தண்டிக்கப்படுதலிலோ அல்லது தெய்வத் தண்டனையிலோ முடிவுறும். Orgē என்பது மனிதனுடைய உணர்ச்சி வேகத்தைக் குறிக்கும், ஆனாலும் இந்த வார்த்தை பெரும்பாலும் கீழ்ப்படியாதவர்களுக்கும் பாவத்துக்கும் எதிரான தண்டனைத் தீர்ப்பாகவே பயன்படுத்தப்படுகிறது (யோவான் 3:36; ரோமர் 1:18; 13:4; எபிரெயர் 3:11; 4:3). அவருடைய கோபம் நியாயத்தீர்ப்பிலும் ஆக்கினைத்தீர்ப்பிலும் முடிவுறும்.[17] நியாயப்பிரமாணம் ஆக்கினைக்குள்ளாக்கும் “கோபாக்கினையைக்” கொண்டுவருவது (orgē; ரோமர் 4:15). ஒரு அரசுக்கு தண்டனையளிக்கும் உரிமையுண்டு, அது துன்மார்க்கர் மீது “கோபாக்கினையை” செலுத்துகிறது; கிறிஸ்தவர்கள் அப்படிப்பட்ட “கோபாக்கினைக்குட்படாமல்” அரசாங்கத்துக்கு கீழ்ப்பட்டிருக்க வேண்டும் (orgē; ரோமர் 13:4, 5). குறிப்பிட்ட; சூழ்நிலையில் கிறிஸ்தவர்கள் கோபப்பட வேண்டிய இடத்தில் அப்படிச் செய்ய உரிமையுண்டு (எபேசியர் 4:26); எப்படியிருப்பினும், பொதுவாக, நாம் கோபப்படுவதைத் தவிர்க்க வேண்டும் (எபேசியர் 4:31; யாக்கோபு 1:19, 20). வழக்கமாக, வேத வாக்கியங்கள் விவரிக்கும் கோபம் கட்டுப்படுத்தப்படும் கோணத்திலேயே பேசுகிறது.*

*அடுத்த வார்த்தை __மூர்க்கம்__ (thumos) இது அநியாயத்தைக் கண்டு கடுமையான உணர்ச்சி வசப்பட்டு கோபிப்பதைக் கொண்டது. சில விஷயங்களில் இது orgē ஐ ஒத்திருக்கும்; இப்படியாக இதை தனித்த ஒரு பொருளைக் கொண்டதாக பயன்படுத்துவது இயலாதது. இந்த கிரேக்க வார்த்தைகளின் அமைப்புகள் ஒன்றாக சில வசனப் பகுதிகளில் காணப்படுவதுண்டு (ரோமர் 2:8; எபேசியர் 4:31; வெளிப்படுத்தின விசேஷம் 16:19; 19:15). வெளிப்படுத்தின விசேஷம் மற்றும் ரோமர் 2:8 லும், தேவனுடைய கோபாக்கினை குறித்துப் பேசுவதற்கு அப்பால், தூமாஸ் என்பது மனிதனுடைய கோபாக்கினையை அல்லது மூர்க்கக் குணத்தை குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (லூக்கா 4:28; நடபடிகள் 19:28; 2 கொரிந்தியர் 12:20; கலாத்தியர் 5:20; எபேசியர் 4:31; கொலோசெயர் 3:8; எபிரெயர் 11:27). வெளிப்படுத்தின விசேஷத்தில் சாத்தானின் கோபத்துக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (வெளிப்படுத்தின விசேஷம் 12:12), பாபிலோனின் வெளியாக்கப்பட்ட “மோகம்” (வெளிப்படுத்தின விசேஷம் 14:8; 18:3), மற்றும் தேவனுடைய கோபாக்கினை (வெளிப்படுத்தின விசேஷம் 14:10, 19; 15:1, 7).*

*Orgēயும், thumosயும் இணைத்து பார்த்தால் வரும் பொருள், “உக்கிரமான கோபாக்கினை” (வெளிப்படுத்தின விசேஷம் 16:19; 19:15). பிற அமைப்புகளில் வித்தியாசப்பட்ட பொருள்களின் கிரேக்க வார்த்தை*

*காணப்படும் போது (2 கொரிந்தியர் 12:20; கலாத்தியர் 5:20; எபேசியர் 4:31; கொலோசெயர் 3:8), அது "அதிருப்தியின் தீவிரம்," அநியாயத்தைக் காணக்கூடாமல் வரும் கோபாக்கினை, அல்லது கோபாவேசம், என்றெல்லாம் ஆலோசனையாகச் சொல்லப்படுகிறது எனலாம். அது ஒருவேளை orgeலிருந்து வித்தியாசப்படலாம், அதிலும் கூட இன்னும் அதிகத் தீவிரமாகவும் உக்கிரமாகவும் கோபாவேசம் கொண்டு பழிவாங்கத் தேடுவதையோ கட்டுப்படுத்தப்பட்ட கோபாவேசத்தையோ கொண்டிருக்கலாம் (லூக்கா 4:28; நடபடிகள் 19:28; எபிரெயர் 11:27).*

**பொறாமையும்** *மூலப்பிரதியில்* (malice) *வன்மம் (kakia) என்றுள்ளது இது மனுஷனுடைய கீழ்த்தரமான ஆசைகளின் வெளிப்பாடு, இழிநிலை, மோசமான நடத்தை, மற்றும் துன்மார்க்கம் போன்றவைகளோடு சம்பந்தப்பட்டது. அது தவறான எண்ணங் கொண்டோருடைய இருதயங்களில் ஏற்படும் பொல்லாததும், வன்மமும் மிக்க குணம். கெடு புத்தி கொண்ட (வன்மம்) மனுஷர்கள் இழிவான குணத்தையுடையவர்களாக, ஆழமான வெறுப்பு உடையவர்களாக, தீயொழுக்கம் உடையோராய், வெறுக்கத்தக்கவர்களாயிருப்பார்கள் (ரோமர் 1:29; எபேசியர் 4:31; தீத்து 3:3; 1 பேதுரு 2:1). "Kakia எனும் வார்த்தையை பழங்கால கிரேக்க அகராதி தொகுப்பாளர், சுய்தாஸ், விளக்கப்படுத்தியுள்ள விதமாவது, 'ஒருவர் தன்னுடைய அயலானை துன்புறுத்துவதில் ஆர்வம் காட்டுதல்' "[18] இந்த வார்த்தை "துன்புறுத்த, துன்பம் விளைவிக்க அல்லது மற்றவர்களை அழித்து அவர்கள்படும் துன்பங்களைக் கண்டு மகிழ்தலைக் குறிப்பிடுகிறது.*

**தூஷணவார்த்தை** *(blasphēmia, இதிலிருந்தே "தேவதூஷணம்" எனும் வார்த்தை வந்தது), இதன் பொருள் மற்றவர்களை வேண்டுமென்றே புண்படுத்தி புகழைக்கெடுக்கமுயற்சித்தல். மற்றவர்களைத் தவறாக நினைத்துக் கொள்ளும்படி செய்ய தவறான காரியங்களைப் பேசித்திரிபவர்கள் தூஷண வார்த்தைகளைப் பயன்படுத்தி புறங்கூரித்திரிபவர்கள் அல்லது தூஷணமாய் பேசுபவர்கள், எனப்படுபவர்கள். தூஷணவார்த்தைகளைப் பேசுதலில் மரியாதைக் குறைவாய்ப் பேசுதல் அல்லது வினயமாக நடந்து அவதூறு பேசி, சிறுமைபடுத்துதல், இதுவும் மற்றவர்களைக்கு தீமையாகப் பேசுவதாகும் (காண்க மத்தேயு 12:32). தூஷணவார்த்தையுடன் உட்பட்டது மனதில் கொண்ட எண்ணத்தை நிறைவேற்ற நினைப்பதுமாகும்; வேண்டுமென்றே ஏதாவது ஒன்றையோ அல்லது யாராவது ஒருவரையோ தவறாக நினைத்துக் கொள்ள பேசுபவர்கள் தூஷண வார்த்தைகளை (புறங்கூறித்திரிகிறவர்களாகப்) பேசப்படுவார்கள். இந்த வார்த்தை தேவனைத் தாழ்த்தி நிந்திக்கிறவர்களுக்குப் பொருந்தும் (வெளிப்படுத்தின விசேஷம் 13:6; 16:11, 21), அவருடைய நாமத்தையும் (ரோமர் 2:24; 1 தீமோத்தேயு 6:1; வெளிப்படுத்தின விசேஷம் 16:9), அவருடைய வார்த்தையையும் (1 தீமோத்தேயு 6:1; தீத்து 2:5), பரிசுத்த ஆவியையும் (மத்தேயு 12:31; மாற்கு 3:28, 29; லூக்கா 12:10), அல்லது பிற ஜனங்கள் (தீத்து 3:2), ஆகிய அனைத்திலும் தூஷணம் பண்ணுதல் பொருந்தும், தேவ தூஷணத்தின் அமைப்புச் சொற்கள் பலதரப்பட்ட குற்றச் சாட்டுக்களில் உட்பட்டது.[19]*

*சிலர் மனப்பூர்வமாக தேவனையும் மற்றவர்களையும் தூஷணமாய் பேசித்திரிகின்றனர். பவுல் இந்தப் பாவத்தை குறிப்பிடக்காரணம்*

*உபத்திரவப்பட கொலோசெயர்களை ஆயத்தப்படுத்துவதாகும்; உபத்திரவப் படுத்துவோரால் அவர்கள் தேவனை நிந்திக்க நிர்பந்திக்காதபடி அப்படிச் செய்தார். அவர் கிறிஸ்தவனாவதற்கு முன், சவுல் என்ற - அப்போஸ்தலனாகிய பவுல் - தூஷிக்கும்படி கிறிஸ்தவர்கள் நிர்பந்தித்திருந்தார் (நடபடிகள் 26:11), மற்றும் அவரே தூஷணம் பண்ணுகிறவராக இருந்தார் (1 தீமோத்தேயு 1:13).*

***வம்பு வார்த்தை*** *(aischrologia) கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது. இது மிக மட்டமான வார்த்தை; தீமையும் அசுத்தமும் மிக்க வார்த்தை; கெட்ட வார்த்தைகள் கொண்ட வேடிக்கைப் பேச்சுக்கள்; அநாகரிகமான பாலுணர்வு வார்த்தைகள்; வெட்கக் கேடான பேச்சுக்கள்; அருவெறுப்பைக் கொண்ட வாய்ப்பேச்சுக்கள் ஆகியன. கூடுதலாக, இது வெறுப்பூட்டும் வார்த்தைகளும், இழிவார்த்தைகளும், முரட்டுத்தனமான வார்த்தைகளும் எபேசியர் 5:4ல் பவுல் குறிப்பிடுவதற்கு ஒத்தவைகளாகும். இப்படிப்பட்ட தன்மை கொண்ட வார்த்தைகள் கொலோசெயரின் வாயிலிருந்து வரக்கூடாதிருந்தது. மாறாக, அவர்களுடைய வார்த்தைகள் எப்போதும் "கிருபை பொருந்தினதாயும், உப்பினால் சாரம் ஏற்றபட்டதாயும் இருக்க வேண்டும்" என்று பவுல் பின்னதாக எழுதினார் (கொலோசெயர் 4:6). யாக்கோபு குறிப்பிடுகையில் நல்லவைகளும் கெட்டவைகளுமான வார்த்தைகள் ஒரே வாயிலிருந்து வருவது இயல்புக்கு எதிரானது என்றார் (யாக்கோபு 3:9-12).*

***உங்கள் வாயில் இருந்து*** *என்று பவுல் குறிப்பிட்டார், அது இப்படிப்பட்ட சிந்தனைகள் - அவை மனதில் தோன்றிலும் கூட - வாயினால் வெளிவரக்கூடாதவை. அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசுவது தடுக்கப்பட ஒருவரது சிந்தனைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.*

***"இப்பொழுதோ ... இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்" (3:8ஆ)***

*3:5ல் பவுல் கிறிஸ்தவர்களிடத்தில் அவர்களுடைய கடந்தகால தீய ஒழுக்கங்களுக்கு "... மரித்தீர்கள்" அல்லது "மரிக்கப்பண்ணப்பட்டீர்கள்" என்பதை சிந்தித்துப் பார்க்கும் படி சொன்னார். அவர்களுடைய நடத்தைக்கடுத்த குணங்கள் இன்னும் அவர்களுக்குள் இருந்து கொண்டிருந்தது, எனவே அவைகளை மரிக்கச் செய்யாதே போனால் மீண்டும் அது துளிர்த்து உயிர் பெற்று விடும். முந்தின நடக்கைகளுக்குரிய காரியங்களை களைந்து போடும்படி மற்ற வசனப்பகுதிகள் போதிக்கின்றன (ரோமர் 13:12; எபேசியர் 4:22, 25; எபிரெயர் 12:1; யாக்கோபு 1:21). கொலோசெயர்கள் முற்கால வாழ்க்கைக்குரிய காரியங்களுக்காக மரித்திருந்த போதிலும், அவர்களுடைய முந்தின வாழ்க்கை முறையை புறந்தள்ளி மாற்று வழி வாழ்க்கையை அந்த இடத்தில் கொண்டு வர வேண்டியவர்களாயிருந்தார்கள். ஒருவகையில், அவர்கள் தங்களுடைய சிறு அறைகளை சுத்தம் பண்ணவும் புதிய ஆடைகளை தரிக்கத் துவங்கவும் வேண்டும்.*

*கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டியாக (2 கொரிந்தியர் 5:17; கலாத்தியர் 3:27) இருத்தல் கிறிஸ்தவனை பாவமற்றவனாக்காது. அது நம்மை ஒரு பாவமற்ற இலக்கிற்கானவர்களாய் மாற்றும் ஒரு ரீதிக்கு மட்டுமே நடத்துகிறது. அனைத்து ஒழுங்கீன செய்கைகளையும் தீய ஒழுக்கங்களையும் நாம் களைந்து போட்டு, நமது வாழ்க்கையில் சுயக்கட்டுப்பாட்டை உடையவர்களாயிருக்க வேண்டும்*

*(வசனங்கள் 5, 8, 9). இவைகளெல்லாம் (தீய ஒழுக்கங்களெல்லாம்) நமக்கு சேதத்தை உண்டு பண்ணக் கூடியவைகள் மாத்திரமல்ல, மற்றவர்களுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியவைகளும் உறவுமுறையில் குந்தகம் விளைவிக்கக் கூடியவைகளுமாகும்.*

*"கோபம்" மற்றவர்களைத் துன்புறுத்தவும் கொலை செய்யவும் கூடத் தூண்டும். இவ்வார்த்தை எப்பொழுதும் "கோபாக்கினையோடு" ஒத்த வார்த்தையாகக் குறிப்பிடப்படும், ஆகிலும் இது உடனடி (முன்) கோபமாகவோ கோபாக்கினையைப்போல வெடிக்கும் வார்த்தைகளாகவோ இருக்காது, ஜனங்கள் கோபப்படும் போது, பேச்சிலோ அல்லது செய்கையிலோ தங்களுக்கே ஆக்கினையை வரவழைத்துக் கொள்ளக் கூடியவைகளாக இருக்கும் (மத்தேயு 5:22).*

*மனித "கோபாக்கினை" (மூர்க்கம்) என்பது ஜனங்களை எரிச்சலடைய தூண்டப்படுவதன் பிரதிபலிப்பாகி உடனடியாக கட்டுப்படுத்த இயலாத உணர்ச்சிவசப்படச் செய்யும்.*

*"மூர்க்ககுணம்" ஜனங்களை வெறுப்படையவும் வன்மம் பாராட்டவும் தூண்டும் அதினால் மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்கவும் அவர்கள் துன்புறுவதைக் கண்டு சந்தோஷப்படவும் செய்யும்.*

*"தூஷணம்" வழக்கமாக பொறாமையினாலும், அன்பற்ற இருதயங்களாலும், மூர்க்கக்குணத்தாலும் வருகிறது, தூஷிக்கிறவர்கள் மற்றவர்கள் மீது பலமான கெடுதியை உண்டாக்குவதோடு பிற ஜனங்கள் தூஷிக்கப்படுகிறவைகளையோ அல்லது தூஷிக்கப்படும் நபர்களையோ தவறாக நினைத்துக் கொள்ளச் செய்யும்.*

*"வம்பு வார்த்தைகள்," நாகரிகமற்ற ஒரு மொழி, அது மற்றவர்களுக்கு தீங்கை ஏற்படுத்தும். இது ஜனங்களுடைய மனதிலே தீய சிந்தைகளை நிரப்பி, அல்லது அவைகளுக்கு உட்பட்டவர்களை ஊக்கமிழக்கச் செய்து அல்லது மனத்துயரைக் கொண்டுவரும்.*

*பொய்பேசுதல் சமுதாயத்துக்கு தீங்கு விளைவிப்பது ஏனெனில் ஒரு சமுதாயம் அமைப்புப் பெற்றுள்ள அடித்தளத்தையோ அதன் அமைப்பையோ அது மதிப்பற்றதாக்குகிறது. பொய்பேசுகிறவனை இச்செயல் தகுதியற்றவனாகவும் பிறருடைய நம்பிக்கையை தன் மீது வைக்கக் கூடாத நிலைக்கும் தள்ளுகிறது.*

*இப்படிப்பட்ட செயல்களால் ஏற்படும் விளைவுகளால், கொலோசெயர்கள் அவைகளை புறக்கணிக்க வேண்டும்; அவர்கள் தங்களுடைய வாழ்க்கையின் முழு எண்ணங்களையும் அணுகுமுறைகளையும் மாற்ற வேண்டும், ஞானஸ்நானத்தில் ஏற்படும் மறுரூபம் (2:11-13) முழுமை யாக கடந்த கால குணத்தை அகற்ற வில்லை, இப்பொழுது வளர்ச்சி அவர்களிடத்தில் வர வேண்டும்.*

> *விளக்கிக் காட்டப்பட்டபடி (காண்க 2:11, 12), கொலோசெயர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது ஒரு தீர்மானமாக தங்களையே துறந்து - "பழைய மனுஷனையும்" (ரோமர் 6:6; எபேசியர் 4:22). அதாவது "மாம்ச சரீரத்தையும்," தங்களுடைய முந்தின வாழ்க்கை நிலையையும், "முந்தைய துன்மார்க்கமான மனுஷனையும்," அதின் செய்கைகளையும், 3:5, 8, 9ல்*

குறிப்பிடப்பட்டுள்ள செயல்களையும் *களைந்து போட்டு*, அல்லது *விட்டு விட்டு* - புதிய மனுஷனாக, கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டவர்களாய் இருந்தார்கள் (கலாத்தியர் 3:27), அதாவது கிறிஸ்துவின் அவயவங்களாக புதிய இயல்பைத் தரித்துக் கொண்டிருக்கிறார்கள், எனவே, தேவபக்தியுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்ந்து தங்களின் ஞானஸ்நானத்திலே செய்த அறிக்கையினை அலங்கரிக்கட்டும்.[20]

**இவைகளையெல்லாம் விட்டு விடுங்கள்** எனும் வார்த்தைகளும் (3:8அ) பின்னதாக "தரித்துக் கொள்ளுங்கள்" என்பதும் (3:12), கொலோசெயர்கள் பவுலின் கோரிக்கைகளுக்கு பதில் செயல் செய்ய வேண்டிய மிகவும் வலிமையான வார்த்தைகள். இவைகள் சகோதரர்கள் தீர்மானித்து தெரிவு செய்து கொள்ளக்கூடிய காரியமல்ல; அவைகள் கோரப்படுபவை. தனது வாசகர்கள் நேர்மையான முயற்சியுடன் இவைகளை நிறைவேற்றும்படி பவுல் எதிர்பார்த்தார். "அவைகளை அழித்துப்போடுங்கள்" என்பதன் பொருள் "மரித்திவர்களாய் எண்ணிக் கொள்ளுங்கள்" (3:5) அல்லது நேர் பொருளில் "மரிக்கச் செய்யுங்கள்" என்பதாகும்.

### "ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்து போட்டு" (3:9)

வசனம் 9 பவுலின் நெடிய வாக்கியங்களில் ஒன்றாகத் துவங்குகிறது, அது வசனம் 11 வரைத் தொடருகிறது. அவருடைய வாசகர்கள் ஒருவருக்கொருவர் **பொய்** சொல்லக்கூடியவர்களாய் (*pseudomai*) இருக்கக் கூடாதவர்கள் என்று எழுதின போது, அவர் கிறிஸ்தவ சமுதாயத்தைக் குறிப்பிட்டு எழுதினார். அப்படிச் செய்வதினால், கிறிஸ்தவர்களல்லாதவர்களிடம் பொய் சொல்லிக் கொள்ளலாம் என்று பொருளல்ல. "... படியால், பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்" (எபேசியர் 4:25ஆ). பொய்யர்களுக்கென்று தேவன் வைத்திருக்கிற தண்டனையே அது எவ்வளவாய் தேவனுடைய கண்களில் வினயமானது என்பதை வெளிப்படுத்துகிறது. "... பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 21:8).

மோசேயின் பத்துக்கட்டளைகளில் பொய்பேசுதல் விலக்கப்பட்டது (யாத்திராகமம் 20:16; உபாகமம் 5:20). இந்தக் காரணத்தினால், இது கோபத்தைக் காட்டிலும் மிகவும் வினயமானதாக, மூர்க்கம், தூஷணம், மற்றும் வம்பு வார்த்தைகளைக் காட்டிலும் மோசமானதாக சிலர் கருதுகின்றனர். கிறிஸ்தவர்கள் வசனம் 8ல் சொல்லப்படுகிற ஐந்து தீய ஒழுக்கங்களையும் பாவமுள்ளவைகளாகவும், விபச்சாரம், கற்பழிப்பு, மற்றும் கொலை செய்வதைப் போன்றது என்றும் உணர்ந்தறிய வேண்டும்.

வசனம் 9ஆ மற்றும் 10அவில் **களைந்து போட்டு** மற்றும் "தரித்துக் கொண்டிருக்கிறீர்களே" என்ற வார்த்தைகள் கடந்த கால முற்று வினைச் சொற்கள்.

வசனம் 9-10ல் காணப்படும் கடந்த கால முற்றுவினைச் சொற்களாகிய இரண்டும் ("களைந்து போடப்பட்டது" மற்றும் "தரித்துக் கொள்ளுங்கள்"

[AB]) *உறுதிப்பட ஏற்கனவே உண்மையில் நடந்தது என சிறப்பாகப் புரிந்துகொள்ளப்பட்டது: விசுவாசம் மற்றும் ஞானஸ்நானத்தின் மூலமாக எல்லா விசுவாசிகளும் தங்களுடைய "பழைய மனுஷனையும்" (அதோடு 3:5, 8-9அல் குறிப்பிடப்பட்ட தீய கிரியைகளையும்) அழித்துப் போட்டு புதிய மனுஷனைத் தரித்துக்கொண்டவர்கள் (வசனங்கள் 12-17ல் முறையான வாழ்வின் வழி விளக்கப்பட்டுள்ளது).*[21]

*"விட்டு விடுங்கள்" (apekduomai) மற்றும் "தரித்துக் கொள்ளுங்கள்" (enduō) ஆகிய பதங்கள் வழக்கமாக ஆடையை களைந்து போடுதலையும் மேலே போட்டுக் கொள்வதையும் குறிக்கும்.* ***பழைய மனுஷன் அகற்றப்பட்டு,*** *புதிய மனுஷன் தன்மீது ஏற்றுக் கொள்ளப்படுகிறான். பவுல் தனிப்பண்பாக பட்டியலிட்ட கொலோசெயர்களின் முந்தின கால கெட்டுப்போன வாழ்க்கை நிலை அகற்றப்பட வேண்டியிருந்தது இந்த ஜனங்கள் "துர்க்கிரியைகளுக்குரிய மனதுடையவர்களாய்" இருந்தபடியால் அப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்த்திருந்தார்கள் (1:21), ஆனால் அவர்கள் ஒரு காலத்தில் அப்படியிருந்த நிலையை விட்டு விட்டார்கள். அவர்களுடைய கடந்த கால தவறுகளும் செயல்களும் இனியும் நிலைத்திருக்க கூடாது; "பழைய மனுஷனானது" களையப்பட்டு அந்த இடத்தில் "புதிய மனுஷனானது" இடம் பெற்றது. இதே கருத்தை பவுல் ரோமரில் வெளிப்படுத்தினார்: "... பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டது" (ரோமர் 6:6).*

*பவுல் "மனுஷன்" என்று குறிப்பிடுவது, ஒருவருடைய மாம்ச சரீரப் பகுதியைக் குறிப்பிடாமல், நபர்த்தத்துவத்தைப் பொருள்படுத்துகிறார். ஒருவர் கிறிஸ்தவனாகும்போது, தீமையினால் கெட்டுப்போயிருந்தவனும் பாவத்தால் மூழ்கியிருந்தவனுமாகிய பழைய மனுஷன் அகற்றப்பட்டாக வேண்டும். நீதியோடு கூடிய ஒரு புதிய மனுஷனும் பரிசுத்தமானவனுமாகிய நபர் பழைய மனுஷன் இருந்த இடத்தில் இடம் வகிக்க வேண்டியதாயிருந்தது.*

*வேறொரு இடத்தில், பவுல் கடந்தவை களைந்து புதியவைகளை தரித்துக் கெள்ளுதலைப் பற்றிப் பேசுகிறார்.*[22] *அவர் தான் உலகத்திற்கு சிலுவையில் அறையுண்டதாகக் குறிப்பிடுகிறார் (கலாத்தியர் 6:14) மாம்சமும் அதின் ஆசை இச்சைகளும் கூட சிலுவையிலறையப்பட்டன (2 கொரிந்தியர் 4:16; எபேசியர் 3:16). அதே நாளத்தில் பேதுரு கிறிஸ்தவ ஸ்திரீகள் இருதயத்தில் மறைந்திருக்கிற தங்கள் குணத்தையே அலங்காரமாக்கிக் கொள்ள வேண்டும் என்று எழுதினார் (1 பேதுரு 3:4). உள்ளான புதிய மனுஷன் பழைய வஸ்திரத்தைக் களைந்துபோட்டு மேலும் புறம்பாக புதிய வஸ்திரங்களால் தரிப்பிக்கப்பட வேண்டும்.*

## *கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாய் புதிதாக்கப்பட்டிருத்தல் (3:10, 11)*

***[10]தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே. [11]அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை, விருத்தசேதனமுள்ளவனென்றும்***

***விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை, புறஜாதி யானென்றும் புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்.***

***"தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலுக் கொப்பாய்" (3:10அ)***

*கொலோசெயர்கள் தங்களைப் புதிதாக்கிக் கொள்ள அவர்களைச்* ***சிருஷ்டித்தவருடைய*** *சாயலுக்கொப்பானவருடைய அறிவைத்தேட வேண்டியதாயிருந்தது. புதிதாக்கிக்கொள்ளுதல் அறிவைக் கொண்டு வரும், அறிவு மேலும் புதிதாக்கிக் கொள்ள ஏதுவான அடிப்படையைக் கொடுக்கும். அறிவின் நோக்கம் அவர்கள் இயேசுவைப்போல மாற வேண்டும், அவர் அவர்களை புதிய ஜனமாய் மாற்றியிருக்கிறாரே (2 கொரிந்தியர் 5:17). இயேசுவின் மரணத்திற்கொப்பான சாயலைப் பெறுவதும் கிறிஸ்துவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பை அடைவதும் பவுலின் அணுகுமுறையாக இருந்தது (பிலிப்பியர் 3:10-14). உண்மையான அறிவைப் பெருக்கிக் கொள்வதில் அசையாது நிலைத்திருந்தால், தொடர்ந்து புதிதாகுதல் வந்து சேரும். ஒரு நடிகன் தான் நடிக்கும் பாத்திரத்தில் அதற்கொப்பான நிலையிலுள்ள ஒரு உண்மையான நபரை அறிந்திருக்க வேண்டும். அதைக் காட்டிலும் பெரிதான முறையில், நாம் கிறிஸ்துவின் சாயலில் புதிதாக்கப்படுவதற்கு முன் நாம் அவரைப் பற்றி அறிந்திருத்தல் அவசியம்.*

*நாம் இயேசுவுக்குள் பிரவேசித்து அவரைத் தரித்துக் கொண்ட பிறகு (கலாத்தியர் 3:27), கொலோசெயர்கள் தங்களுடைய ஜீவியம் பாதுகாப்பாக இருக்கச் செய்பவரைப்போல மாற வேண்டியவர்களாயிருந்தனர், மனமாற்றம் பெற்ற ஒவ்வொரு வரும் தனது இயல்பைப் பெருக்கிக் கொள்ள இயேசுவை நோக்கிப்பார்க்க வேண்டும். 2 கொரிந்தியர் 3:18ல் பவுல் தனது இலக்கை இப்படியாக வெளிப்படுத்துகிறார்: "நாமெல்லாரும் திறந்த முகமாய் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போல கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத் தானே மகிமையின் மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்." இந்த இலக்கை அடைய, நாம் முன்னானவைகளை மறந்து "தேவன் கிறிஸ்துவுக்குள் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக" இலக்கை நோக்கி தொடரவேண்டும் (பிலிப்பியர் 3:13, 14அ). நாம் நம்மை சிருஷ்டித்தவரை அறிந்து கொள்வதன் மூலம், நாம் அவருடைய தனிப் பண்புகளை வளர்த்துக்கொள்ள முடியும்.*

> *... புதிதாக்கப்படுதல் சிருஷ்டித்தவரின் சாயலுக்கொப்பானபடி இடம் பெறுகிறது. இப்படியாக ஒரு பக்கம் அவர் அது ஒரு புதிய சிருஷ்டியைப் பற்றிய விஷயம் என்பதை அவர் உறுதிப்படுத்துகிறார், ஒரு சில தீய செயல்களை விட்டு ஒரு சில ஒழுக்கங்களை ஏற்றுக் கொள்வது அல்ல. மறுபக்கம் பார்த்தால், அது அறிவுக்கு இட்டுச் செல்கிறது என்று சொல்லுகிறார்.*[23]

*கொலோசெயர்களுக்கு என்ன விதமான அறிவு தேவைப்பட்டது? சீனாய் மலையில் மேசேயின் மூலம் கொடுக்கப்பட்ட உடன்படிக்கைகளைக் கொண்ட மோசேயின் நியாயப்பிரமாணம் (உபாகமம் 4:2-8, 13), அவர்களுடைய வாழ்க்கைக்குரிய அளவுகோல் அல்ல, சகல ஞானமும்*

அறிவும் இயேசுவிடமுண்டு; அவைகளை அவர் பரிபூரணமாய்த் தமக்குள் உண்டாக்கியிருக்கிறார், அவர் அவர்கள் “எல்லாரிலும், எல்லாமுமாயிருக்கிறார்” (3:11). அவர்களுக்கு வேறெவரும், வேறெதுவும் தேவையில்லை, ஏனெனில் இயேசுவே உண்மையான கிறிஸ்தவ ஜீவியத்தின் மூலாதாரமும் முன்மாதிரியுமாயிருக்கிறார். யூதப் பாரம்பரியங்கள், இறைமை இணைவுப் பண்பு பக்திகள், கிரேக்க தத்துவம், மற்றும் அஞ்ஞான மதம் ஆகியன அவர்களுக்கென செய்ய எதுவுமில்லை.

ஆவியானவர் மூலம் அப்போஸ்தலர்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் கொடுக்கப்பட்ட தேவனுடைய வெளிப்பாடுகளை வாசிப்பதன் மூலம், ஜனங்கள் இன்றைக்கு கிறிஸ்துவின் இரகசியத்தை “அறிந்து கொள்ள” இயலும் (எபேசியர் 3:4). தேவனுடைய குமாரனின் அறிவின் மூலம், தேவன் சபையில் ஆளுகை செய்பவர்களை (மூப்பர்களை)யும் போதகர்களையும் நியமித்து கிறிஸ்தவர்கள், “கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும் வரைக்கும்” அவர்களுடைய வளர்ச்சியில் உதவி செய்தார் (எபேசியர் 4:11ஆ, 13). நாம் இயேசுவின் தன்மையைக் கொண்டவர்களானால், தேவனுடைய சாயலின்படி இருக்கிற அவருடைய இயல்பின்படி, நாம் பரிசுத்தமாவோம்; ஏனெனில் தேவன் பரிசுத்தராயிருக்கிறார் (1 பேதுரு 1:16).

விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாக இருந்தாலும் கூட நாமாக ஒரு மனநிறைவு அடைந்து நமது கிறிஸ்தவ நடக்கைக்கு ஒரு தளம் அமைத்துக் கொண்டு விடக் கூடாது. நம்முடைய ஜீவியத்தின் உதாரணம் - இயேசுகிறிஸ்துவே நம்முடைய வளர்ச்சியை அளவிட்டுப் பார்க்க ஏதுவான அளவுகோலாக இருக்கிறார் - நமக்கு மேலாகவும் அப்பாலும் இருக்கிறது. நாம் மேல் நோக்கிச் செல்லவும் தொடர்ந்து வளர்ச்சிபெறவும், அறைகூவல் விடப்பட்டுள்ளோம், ஆகிலும் கிறிஸ்துவிலுள்ள வளர்ச்சிக்குத்தக்க பரிபூரணத்தை நம்மால் ஒரு போதும் அடைய முடியாது. இயேசு சரியானது எதுவோ அதையே கோருகிறார், எது சுலபமானது என்பதையல்ல.

### *“பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட” (3:10ஆ)*

பழைய மனுஷனானது களைந்து போடப்பட்டு புதிய மனுஷனானது தரித்துக் கொள்ளப்பட்ட போதிலும், புத்துயிர் ஊட்டிக் கொண்டேயிருப்பது அவசியமானது. **புதிதாக்கப்படடிருத்தல்** (*anakainoumenon*) என்பது நிகழ்கால எச்சவினையாக கிரேக்க மொழியில் சொல்லப்பட்டுள்ளது, இது ஒரு தொடர் செயல். புதிய மனுஷனானது தொடர்ந்து புதிதாக்கப்படுகிறது. ஞானஸ்நானத்திலே பிறந்த புதிய மனுஷன் ஒரு குழந்தையைப் போல, இருக்கிறது. முழு வளர்ச்சிபெற்ற கிறிஸ்தவனாவதற்குரிய வலிமை இருந்த போதிலும், வளர்ச்சியை முழுமையாய் அடைவதற்கு முன் வளர்வதற்குத் தேவையான கால அவகாசம் தேவை.

நதிநீரை எதிர்த்து தனது படகை செலுத்த பிரயாசப்படாத ஒருவன், வேகமாக நதியின் போக்கிலே அடித்துச் செல்லப்படுவான். பெலவீனமாய் படகைச் செலுத்த முற்படுவது அதை அசைக்க முடியாமல் நின்ற இடத்திலேயே நின்று கொண்டிருக்கக் செய்யும், அதை முன்னுக்கு கொண்டு போக அது போதுமானதல்ல. எதிர்த்து முன்னேறச் செய்ய, தொடர்ந்து படகை (வலித்து) செலுத்த வேண்டும், அதே போலத்தான், கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவைப்

*பின் பற்றிப் போகக் கூடியவர்களுக்கே உரிய நடக்கைகளோடே ஒழுக்கக் காரியங்களில் முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும் (2 கொரிந்தியர் 3:18; 10:15; எபேசியர் 4:13, 16; 1 தெசலோனிக்கேயர் 3:12; 4:9, 10; 2 தெசலோனிக்கேயர் 1:3; 1 தீமோத்தேயு 4:15). கிறிஸ்து தன்னுடைய வாழ்க்கையில் நாளுக்கு நாள் தன்னை புதிதாக்கினதாக பவுல் கண்டார் (2 கொரிந்தியர் 4:16). அவர் பரிசுத்த ஆவியின் உதவியால் கிறிஸ்தவர்கள் பெலப்படுத்தப்பட்டு புதிதாக்கப்படுகிறார்கள் என்று போதித்தார் (எபேசியர் 3:16; தீத்து 3:5).*

*புதிதாக்குதல்* **கிறிஸ்தவனுக்கு உண்மையான அறிவைக்** *கொண்டு வருகிறது. "... க்கு" என்பது "இஸ்" என்பதன் மொழியாக்கம், அதன் அடிப்படை அர்த்தம் "உள்" என்ற பொருளைக் கொண்டுள்ளது. அது ஆலோசனையாக இலக்கை அடைதல் அல்லது "திசையை நோக்கிப்" போதல் என்று காட்டுகிறது. புதிதாக்கப்பட்ட நபர் தன்னை சிருஷ்டித்தவருடைய சாயலில் "உண்மையான அறிவை" அடைகிறான் என்று பவுல் போதித்தார். பவுல் இந்தக் கருத்தை அநேகமாக சிருஷ்டிப்பிலிருந்து எடுத்திருக்கலாம் (ஆதியாகமம் 1:26, 27). புதிய மனுஷன் கிறிஸ்துவின் "சாயலைப்" பெறும்படி சிருஷ்டிக்கப்பட்டவன் அவன் தினசரி புதுப்பிக்கப்பட வேண்டியவனாயிருக்கிறான். இந்த புதுப்பிக்கப்படல் இல்லாத நிலையில் புதிய ஜீவன் முடிந்து போகும், மற்றும் அந்த நபர் தன்னுடைய முந்தைய வழியில் போய் விடக் கூடும்.*

*"அறிவு" (epignōsis) என்பது ஒருவரை இணங்க வைக்கத்தக்கதாக கள்ளப் போதகர்களின் போலியான அறிவுக்கு எதிரானது. அறிவையும் கிறிஸ்துவின் சாயலையும் பெற்றுக் கொள்வதின் விளைவு மீண்டும் மீண்டும் செயல்படுவதும் முன்னேற்றமடைவதுமான காரியம். ஒரு நபர் எந்தளவுக்கு இதில் சிறப்படைகிறாரோ அவ்வளவுக்கதிகமாய் அவர் இயேசுவைப் போலாக முடியும்; அவர் எவ்வளவாய் இயேசுவைப்போல் இருக்கிறாரோ அவ்வளவாய் அவரைப் பற்றிய அறிவு பெரிதாய் உண்டாயிருக்கும். அவருடைய தன்மையின் அறிவைப் பெற்றிருந்தால் மட்டுமே ஒரு கிறிஸ்தவன் இயேசுவைப் போல் மாறுவான்.*

***"புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்" (3:10இ)***

*வசனங்கள் 10, 11 பவுல் தனது பிற நிருபங்களில் சொன்ன வாக்கியங்களுடன் ஒத்த கருத்தைக் கொண்டுள்ளது. கலாத்தியர்கள் கிறிஸ்துவைத் "தரித்துக்" கொண்டதாக, அல்லது "அணிந்து கொண்டதாக" எழுதினார்.* **புதிய மனுஷனும்** *கிறிஸ்துவும், ஆவிக்குரிய பொருளில், கிறிஸ்துவுக்குள் ஒருவன் ஞானஸ்நானம் பெறும் போது* **தரித்துக் கொள்கின்றனர்** *(2:12, 13; கலாத்தியர் 3:27). கொலோசெயர்கள் கிறிஸ்துவுக்குள் புதிதாகியிருந்தனர். அவர்கள் தங்களுடைய பழைய வஸ்திரங்களை களைந்து போட்டு புதிய ஆடையைத் "தரித்துக்" கொண்டார்கள்.*

*இந்த மாற்றம் ஒரு வித்தியாசப்பட்ட வாழ்க்கை முறையை கொண்டு வரவேண்டியதாயிருந்தது. கட்டுப்படுத்த இயலாத இச்சைகளில் வாழ்ந்து கொண்டிருந்த கடந்த காலத்தில் வாழ்ந்த மனுஷன், இனியும் இருக்கக் கூடாது;*

*புதிய மனுஷன் சுயகட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டியதிருந்தது. அவர்கள் தங்கள் வாழ்க்கையில் தீய ஒழுக்கங்களுக்கு இடமளிப்பதற்குப் பதில் கொலோசெயர் நல்லவைகளுக்கான கிரியை செய்யக் கூடியவர்களாயிருந்தனர். ஐசுவரிய வாலிபனின் பிரச்சனை கொலை பாதகமோ, விபச்சாரமோ, அல்லது கள்ள சாட்சிகளோ அல்ல, ஆனால் அவன் நற்கிரியை செய்வதில் ஈடுபாடு உடையவனாயிருக்கவில்லை, ஏழைகளைக் குறித்து அக்கறையில்லாமல் இருப்பது போன்ற காரியங்கள் அவனிடமிருந்தது (மத்தேயு 19:22).*

*கிறிஸ்துவைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொள்ளும் அநேகர் தங்களுடைய உலகத்துக்கடுத்த தீய செயல்களை களைந்து போட்டு விட்டதாகக் கூறுகின்றனர், ஆனால் அது போதுமானதல்ல. கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் தங்களிடம் ஒழுக்கங்களை விருத்தியடையச் செய்து கிறிஸ்தவ சேவைகளிலும் மற்ற நேர்மறை காரியங்களில் கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்கவும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.*

*கொலோசெயர்கள் புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டதோடு மாத்திரமல்ல, சிலுவையிலே கிறிஸ்துவின் மரணத்தினாலே சிருஷ்டிக்கப்பட்ட சமுதாயத்திலும் ஒரு அங்கமாகி இருந்தனர் (எபேசியர் 2:13). அவருடைய மரணம் நியாயப்பிரமாணத்தையும், யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையேயான பகையையும் அழித்துப் போட்டது, அதைத் தொடர்ந்து கிறிஸ்துவின் ஒரே சரீரமாகிய சபையை அவர்களுக்கு அளித்தார். பிரிவினைகளுக்குக் காரணமாயிருந்த முந்தின காரியங்கள் எதுவாயிருந்த போதிலும், இயேசு ஜனங்கள் ஒரே சரீரத்திற்குள் ஒன்றாகவும், அதாவது, அவருக்குள் ஞானஸ்நானம் பெறுவதன் மூலம், கிறிஸ்துவுக்குள்ளகும்படி பகைமையைத் தீர்த்துவைத்தார் (ரோமர் 12:5; 1 கொரிந்தியர் 12:13).*

### *அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை (3:11அ)*

***புதிதாக்கப்படுதல்*** *என்று பவுல் விவரிப்பது பழைய மனுஷனையே புதுப்பித்தல் என்று பொருளல்ல; பழைய மனுஷன் செத்துப் போகிறான். மாறாக, புதிய மனுஷன் தான் தொடர்ந்து புதுப்பிக்கப்பட வேண்டியவனாயிருக்கிறான்.*

*ஒரு கார் புதிதாக இருக்கலாம், ஆனாலும் அதன் ஓட்டுனர் அதன் எரிபொருள் கொல்களத்தை ஓட்டியதன் விளைவாக வெறுமையாக்குவார் மேலும் மறுபடியும் மறுபடியும் அந்தக்காலத்தை நிரப்ப வேண்டிய அவசியம் அவருக்கு உண்டு; நேரம் வரும்போது, அவர் சக்கரங்களின் டயர்களையும், பேட்டரியையும், அல்லது வேறு சில உதிரிப்பாகங்களையும் மாற்ற வேண்டிய நிர்பந்தம் அவருக்கு உண்டு.*

***அதிலே*** *என்பது கிரேக்க வினையடைச்சொல் hopou, விலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது, அதன் பொருள் "எங்கே" என்பதாகும். புதிதாக்கப்படுதலை அநுபவித்தவர்கள் ஒரு புதிய ஆவிக்குரிய இடத்தில் "அதிலே" - அல்லது "எங்கே" - இனம், தேசியம், மண்டலம், சமுதாயர்பிரிவு, மற்றும் சமுதாய வித்தியாசமில்லையோ அங்கே இருக்கிறார்கள். மனிதபார்வையில் இவைகளெல்லாம் நிலைத்திருப்பதில்லை என்று சொல்லப்படுவதாக பொருளல்ல; தேவனுடைய பார்வையில் இவைகள் இல்லாத இடம். கிறிஸ்தவர்கள் தேவனுடைய மனதைக் கொண்டிருக்க வேண்டியவர்கள்*

*(எபேசியர் 4:1-3). எல்லாரும் அவருக்குள் ஒன்றாகும்படியாகவும் நாம் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்றதின் மூலம் இந்த வட்டாரத்திற்குள் பிரவேசிக்கிறோம் (கலாத்தியர் 3:26-28). இந்த உண்மையை பவுல் 1 கொரிந்தியர் 12:13லும் வெளிப்படுத்தியிருக்கிறார்.*

*3:5, 8, 9ல் பவுல் பட்டியவிட்டுள்ள தீய செயல்கள் வித்தியாசப்பட்ட இனபாகுபாடுகளை ஜனங்களிடையே தோன்றப்பண்ணி பிரிவினைகளையும் எல்லைகளையும் ஏற்படுத்துகின்றன, ஆகிலும் 3:12-14ல் அவர் வரிசைபடுத்தியுள்ள ஒழுக்கங்கள் அப்படிப்பட்ட பிரிவினைகளை தவிர்க்க உதவி புரியும். இந்த கூட்ட மக்கள் கிறிஸ்தவர்களாவதற்கு முன் பகையையும் சண்டைகளையும் கொண்டிருந்த போதிலும், இனியும் கொலோசெயர்களுக்குள்ளே வேறுபாடுகள் மங்கிப்போய், அந்த கிறிஸ்தவ சமுதாயத்துக்குள் அவை ஒரு பெரும் வழக்காயிருத்தல் கூடாததாயிருந்தது.*

*வசனம் 11ல் பவுல் முதலாவதாக புறஜாதிகளைக் குறிப்பிட்டார், அதினாலே யூதர்கள் தேவனுக்கு முன்பாக மற்றவர்களைக் காட்டிலும் முன்னிடம் பெறக் கூடியவர்களல்ல என வலியுறுத்தும்படி அப்படிச் செய்தார், வேறு இரண்டு பட்டியல்களில், பவுல் யூதர்களை முதலாவதாகக் குறிப்பிட்டார் பிறகு கிரேக்கர்களைக் குறிப்பிட்டார் (1 கொரிந்தியர் 12:13; கலாத்தியர் 3:28), இது சாதரணமாக அவர் வரிசைப்படுத்திக் காட்டும் முறை. (ரோமர் 1:16; 2:9, 10; 3:9, 29, 30; 9:24; 10:12; 1 கொரிந்தியர் 1:24). இதில் பெரும்பாலான வசனப்பகுதிகளில், அவர் இரண்டுவகையான ஜனங்களை மட்டுமே குறிப்பிட்டிருக்கிறார், அவர்களை யூதன் (யூதர்கள்) கிரேக்கர்கள் (கிரேக்கப் பண்பாட்டுக்குரியவர்கள்) - அதாவது, யூதர்கள் மற்றும் யூதரல்லாதோர், அல்லது புறஜாதிகள் என்று பிரித்திருக்கிறார். இந்த பட்டியல் பகுதியிலும் இதையே குறிப்பிட அவர் முயற்சித்திருக்கலாம், ஆனாலும் மற்ற கூட்டத்தாரையும் குறிப்பிட்டு எந்த கூட்ட மக்களெல்லாம் கிறிஸ்துவினால் சம அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டனர் என்பதை காட்டும்படி இப்படிக் குறிப்பிட்டார்.*

*பவுல் கிறிஸ்துவுக்குப் புறம்பே இருக்கிற வேறுபட்ட கூட்டத்து மக்களெல்லாம் ஒரே மாதிரியாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் மற்றும் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுடன் அதே நிலைப்பாட்டில் வைக்கப்பட வேண்டும் என்று அர்த்தப்படுத்த வில்லை. குறிப்பிடப்பட்ட தடைகள் எல்லாம் கிறிஸ்துவுக்குள் மாத்திரம் தகர்க்கப்பட்டது (கலாத்தியர் 3:28). நியாயப்பிரமாணத்தின் சுவரை அவர் தகர்த்து, சிலுவையின் மூலமாக தமக்குள்ளே ஒரே சரீரத்தில் இருப்பவர்களை தேவனுடன் ஒப்புரவாக்கக் கூடும்படி இப்படிச் செய்தார் (எபேசியர் 2:14-16). தேவன் பேதுருவிடத்தில் தாம் பட்சபாத முள்ளவரல்ல என்றும் கிறிஸ்தவர்கள் யூதக் கிறிஸ்தவர்களுக்கும் புறஜாதிக் கிறிஸ்தவர்களுக்கும் இடையே பிரிவினைகளை ஏற்படுத்த வேண்டாம் என்றும் சொன்னார் (நடபடிகள் 10:34, 35; 15:7-11). பல்வேறு சந்தர்ப்பங்களில் கிறிஸ்துவுக்குள் இருந்த பல தரப்பட்ட மக்களுக்குள் ஐக்கியத்தை ஏற்படுத்தும் பொருட்டு பவுல் போராடினார்.[24]*

*புதிய ஜீவனுக்குள் பிரவேசிக்கும் வழி எல்லா கூட்டத்து மக்களுக்கும் ஒரே மாதிரியானது தான். யூதர்களும் பாவிகளாக இருந்தவர்கள்தான், புறஜாதிகளைக் காட்டிலும் அவர்கள் சிறப்பானவர்களாக*

*இருக்கவில்லை (ரோமர் 3:9, 10). இந்தக் காரணத்தால், தேவன் இரு திறத்தாருக்கும் இரட்சிப்பிற்குத் தேவைப்படுவைகளை கோருவதில் எந்த வித்தியாசமும் காட்ட வில்லை (நடபடிகள் 15:9, 11; ரோமர் 3:22) அல்லது தேவனோடு நட்புறவு வைப்பதில் அப்படி வித்தியாசம் காட்டவில்லை (ரோமர் 10:12). "எல்லார்மேலும் இரக்கமாயிருக்கத் தக்கதாக, தேவன் எல்லாரையும் கீழ்ப்படியாமைக்குள் அடைத்துப் போட்டார்" (ரோமர் 11:32).*

***"விருத்தசேதன முள்ளவனென்றும்***
***விருத்த சேதனமில்லாதவனென்றுமில்லை" (3:11ஆ)***

***விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்கள்*** *எனும் வார்த்தை யூதர்களுக்குக் குறிப்பிடப்படுவது, அதிலே யூதமதத்தமைந்தவர்கள் உள்ளடக்கம், விருத்தசேதனம் பண்ணப்படாதவர்கள் என்பது அனைத்து யூதர்களல்லாதோரை, புறஜாதிகளை உட்படுத்தியது, பவுல் "விருத்த சேதனமில்லாமைக்கு" முன் "விருத்தசேதனமுள்ளவர்கள்" என்று பெரும்பாலான இடங்களில் குறிப்பிட்டுள்ளார், முதலாவதாக குறிப்பிடப்படுவதற்கு நியாயப்பிரமாணத்தின் கீழ் விருத்தசேதனம் பெற்றவர்களுக்கு பெரும் மதிப்பு கொடுக்கப்பட்டது தான் (காண்க ரோமர் 4:9-12; 1 கொரிந்தியர் 7:18, 19; கலாத்தியர் 5:6; 6:15). இரண்டு சம்பவங்களில் மட்டும் மாற்றி எழுதினார், எப்படியிருப்பினும், இந்த வித்தியாசம் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதில்லை என்பதை வலியுறுத்தினார் (கலாத்தியர் 2:7; எபேசியர் 2:11). 1 கொரிந்தியர் 7:8அ வில் விருத்தசேதனத்தை முந்திக் குறிப்பிட்டவர் பிறகு வசனம் 18ஆ வில் வரிசையை மாற்றி எழுதினார்.*

*யூதர்கள் கலாச்சார ரீதியாக பின்னடைவில் இருந்த அந்நியர்களை காட்டு மிராண்டி(கள்) என்றும் ஸித்தியர்(கள்) என்ற நாடோடி என்று நாகரீகமற்ற கூட்டமாகக் குறிப்பிட்டனர். நாகரீகமான, அல்லது நாகரீகமற்ற யூதரல்லாதோரை "விருத்தசேதனம் பெறாதவர்கள்" என்று குறிப்பிட்டது. கிரேக்கர்களைப் பொறுத்தமட்டில் அனைத்து கிரேக்கர் - அல்லாதவர்களை கிரேக்கர்கள் காட்டுமிராண்டிகள் என்று அழைத்தனர், ரோமர்கள் கூட முதலில் அப்படித் தான் அழைக்கப்பட்டனர். பின்னர், அவர்கள் கிரேக்க கலாச்சாரத்தை ஏற்றுக்கொள்ளத் துவங்கினபோது, ரோமர்களும் "கிரேக்கர்கள்" என்றழைக்கப்பட்டனர். அப்பொழுது ரோமகளும் கிரேக்கர்களும் கிரேக்க - ரோமக்கலாச்சாரத்துக்குப் புறம்பே இருந்த அனைவரையும் காட்டுமிராண்டிகள் என்ற ரீதியில் பார்த்தனர்.*

*"காட்டுமிராண்டி" என்னும் வார்த்தை (barbaros) புதிய ஏற்பாட்டில் வேறு இடங்களில் காணப்படுகிறது, அது சில வேளைகளில் "அந்நியர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (நடபடிகள் 28:2, 4; ரோமர் 1:14; 1 கொரிந்தியர் 14:11). அது கல்வியறிவு இல்லாதவர்களும் தெளிவாக பேச அறியாதவர்களும் அல்லது கலாச்சார ரீதியாக கற்றவர்களின் மொழியைப் பேச அறியாதவர்களுமாயிருந்தவர்கள், இயேசு "காட்டு மிராண்டித்" தனத்தை ஒழித்து "சகோதரர்" என்றழைக்கப்பட வழி வகுத்தார்.*

"Barbarian[s]" *மற்றும்* "Scythian[s]" *"ஸ்கைத்தீனியர்" என்போர் ஒன்றுக்கொன்று முரண்பட்ட வசனம் 11ல் குறிப்பிடப்படுகிற மற்ற எதிரெதிரான கூட்டத்தாரைப்போல் இரண்டு கூட்டமல்ல. ஸித்தியர்கள்*

என்போர் காட்டுமிராண்டிகளாயிருந்தவர்கள். யூதர்களால், ரோமர்களும், கிரேக்கர்களும் அற்பமாய் கருதப்பட்ட மிகவும் கீழ்த்தரமான கொடிய காட்டுமிராண்டிகள் என்று சொல்லப்பட்டவர்கள், இவர்கள் கருங்கடலை சுற்றிலும் வாழ்ந்து கொண்டிருந்த நாகரீகமற்ற மலைஜாதியினர். ஒரு காட்டுமிருகத்தைப் போல பண்பில்லாத மக்களாய் வாழ்ந்தவர்கள் என்று ஜோசிபஸ் குறிப்பிட்டார்.[25]

ஸித்தியர்களைக் Scythians, குறித்து Herodotus எழுதியதாவது, "அவர்கள் தங்களுடைய எதிரிகளில், முதலில் கொல்லப்பட்டவனின் இரத்தத்தைக் குடித்தார்கள், மண்டை ஓட்டின் தோல்களை கை துடைக்கும் துணிகளாகவும் வெட்டப்பட்ட தலையின் மண்டை ஓட்டை குடிக்கும் பாத்திரமாகவும் பயன்படுத்தினர். மிக அருவருப்பான பழக்கங்களைக் கொண்டிருந்த அவர்கள் ஒருபோதும் தண்ணீரால் தங்களை சுத்தம் செய்து கொள்ள மாட்டார்கள்":[26] மற்ற எழுத்தாளர்களும் அவர்களுடைய மோசமான நடக்கைகளை உறுதி செய்தனர். அவர்கள் அருவெறுக்கத் தக்க ஜனங்களாயிருந்த போதிலும், கிறிஸ்தவர்களானபோது இயேசுவைப் பின்பற்றுகிற மற்றவர்களைப் போலவே சமமாக நடத்தப் பட்டார்கள். சமுதாயத்தில் எந்த ஒரு பகுதியில் வாழும் ஜனமாயிருந்தாலும் கிறிஸ்துவுக்குள் இணைக்கப்படமுடியும், அப்பொழுது இந்த பிரிவுகள் தடை செய்யப்பட்டவர்களாய்க் காணப்பட மாட்டார்கள், கிறிஸ்தவம் வித்தியாசங்களை அழிக்கவும் எல்லாரையும் ஒரே சகோதரத்துவத்துக்குள் கொண்டுவரவும் செயல்பட்டுள்ளது.

***"அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை" (3:11இ)***

***அடிமைகளும் சுயாதீனமுள்ளவர்களும்*** கூட கிறிஸ்துவுக்குள் சமத்துவத்தைக் காணமுடியும். அவர் (கிறிஸ்து) அவர்களுக்கிடையே இருந்த பெரும் பிளவை எடுத்துப் போட்டு அதினால் அவர்கள் சகோதர சிநேகத்தில் இணைக்கப்பட்டிருக்கச் செய்தார். சிலுவையினிமித்தம் இருவருமே சுயாதீனமுள்ளவர்கள். பவுல் பயன்படுத்தியுள்ள வார்த்தையின்படி "சுயாதீனமுள்ளவன்" என்பது, அடிமையாயிருந்த ஒருவன் சுயாதீனம் பெற்றிருப்பதையும், அதே போல ஒருபோதும் அடிமையாக இருந்திராதவனையும் குறிக்கும். அடிமைத்தனம் ஒரு காலத்தில் இருந்திருந்த போதிலும், சமத்துவக் கொள்கைகள் மற்றும் கிறிஸ்துவுக்குள் காணப்படும் அன்பு போதிக்கப்படும் போது அவரால் அடிமைகள் மற்ற கிறிஸ்தவர்களோடு இணைக்கப்பட்டார்கள் மற்றும் முடிவில் அடிமைத் தனத்தை ஒழிப்பதில் வெற்றி சிறந்தது.

ரோமர்களிடத்தில் அநேக அடிமைகள் இருந்தார்கள், அவர்களில் பெரும்பாலானோர் யுத்தக் கைதிகளாக பிடித்து வரப்பட்டவர்கள். "அரிஸ்டாட்டலின் கருத்துப்படி ஒரு அடிமை என்பவன் பூர்வ கால உலகத்தில், சட்டரீதியாகப் பேசினால், ஒரு நபரல்ல அவன் ஒரு சொத்தாக அல்லது 'ஒரு வாழும் கருவியாக' வோ கூட இருந்தான் ..."[27] சில நேரங்களில் அடிமைகள் தங்கள் எஜமானர்களை விட அதிகமான கலாச்சாரப்பண்பு பெற்றவர்களாயிருந்தார்கள், அவர்கள் அநேகந்தரம் விலங்குகளைப் போல் நடத்தப்பட்டிருந்தார்கள். அவர்களில் சிலர் தங்கள் சுயாதீனத்தை கிரயம் கொடுத்து வாங்கமுடிந்தது அல்லது அவர்களின் சிறப்பான சேவையினிமித்தம்

ஒரு தயவை பெற்றனர். இது கிலாவுதியுராயனின் தாயார், அந்தோனியாளின் அடிமையாகிய பேலிக்ஸின் விஷயத்தில் உண்மையாயிருந்தது.

தேவன் ஜனங்களின் பாஷைகளை தாறுமாறாக்கினார், அதினால் ஜனங்கள் சிதறி உலகம் முழுவதும் பரவ ஏதுவாக்கிற்று (ஆதியாகமம் 11:1-8). மனித இனம் பிரிந்திருக்கக் கூடும் ஆனால் அதே வேளையில் ஐக்கியப்பட்ட குடும்பங்களின் கூட்டமாக வாழும்படி வகையில் அவர் இதைச் செய்தார். ஜனங்கள் தங்கள் பொல்லாத திட்டத்தை நிறைவேற்ற இயலாமல் செய்யும்படி சிதறடிப்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. இயேசுவின் பணியோ வித்தியாசமானது. அவர் நீதியால் ஜனங்களை ஒன்றிணைத்து தேவனை சேவிக்கச் செய்யவே அவர் வந்தார். ஒவ்வொருவரையும் இணைத்து ஒரே பூமிக்குரிய தேசமாக உருவாக்க அவர் வரவில்லை. அவர் தம்மைப் பின்பற்றி வருவோரை தமக்குள்ளாக ஒன்றாக்கவும் சகோதரத்துவத்தை ஏற்படுத்தும் பொருட்டு உலக முழுவதும் தம்மைப் பின்பற்றுவோர் உண்டாயிருக்கும் பொருட்டாகவும் அவர் அவர்களைப் பரிசுத்தமாக்கவே அவர் வந்தார். அவர் பிரிவினைக்கு இடமளிக்க வில்லை. மேலும் அவருடைய ஒரே சரீரத்திற்குள் பிரிவினையாகிய நடுச்சுவரை நிலைத்திருக்கவும் விடவில்லை.

### **“கிறிஸ்து எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார்” (3:11ஈ)**

**கிறிஸ்து எல்லாரிலும், எல்லாமுமாயிருக்கிறார்.** எல்லாம் என்றால் என்ன? நேரடிப்பொருளில் சொன்னால் “கிறிஸ்துவே எல்லாக் காரியங்களாயும், எல்லா காரியங்களுக்குள்ளாகவும் இருக்கிறார்.” கிறிஸ்துவே “எல்லாம்” என்பது இந்தப் பிரபஞ்சம் அவரை நம்பியிருக்கிறது, ஏனெனில் அவரே அதை சிருஷ்டித்தவரும் தமது வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவருமாயிருக்கிறார் (எபிரெயர் 1:2, 3). அவரே “எல்லாமுமாக” கிறிஸ்தவர்களுக்குத் தேவையான சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் கொடுக்கிறவராயிருக்கிறார், அவர் “எல்லாரிலும்” இருக்கிறார், ஏனெனில் அவரது பிரசன்னத்தினாலும் வல்லமையினாலும் சகலமும் நடப்பிக்கப்படுகிறது (கொலோசெயர் 1:16, 17). அவரே “எல்லாரிலும்” இருக்கிறபடியால் சகல ஆவிக்குரிய மற்றும் சரீரத்திற்குரிய தேவைகள் அவரில் வாசம் பண்ணுவோருக்கு அளிக்கப்படுகிறது.

நிலைத்திருக்கும் சகலத்திலும் மட்டும் அவர் எல்லாமாக இருப்பதில்லை, மாறாக அவருக்குள் புதிதாக்கப்பட்டவர்களிலும் அவர் எல்லாமுமாக இருக்கிறார். கிறிஸ்தவர்கள் *யாராக என்னவாக* வெல்லாம் இருக்கிறார்களோ அவைகள் அனைத்தும் ஒட்டுமொத்தமாக அவரையே சார்ந்திருக்கிறது, இந்தக் காரணத்தினால், கிறிஸ்தவ சமுதாயத்தில் எவ்வித பிரிவினைக் கோடும் பலதரப்பட்ட இனங்களின் தனிமங்களுக்கு இடையே வரையப்பட்டு விடக்கூடாது. கிறிஸ்து தமது ஜனங்களை ஒற்றுமையாக்க தேவையான சகலத்தையும் ஒழுங்கு செய்திருக்கிறார்.

பவுல் சொல்லணிக் கலையாக கேட்ட கேள்வி: “கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?” (1 கொரிந்தியர் 1:13அ) கிரேக்க மொழியில் இந்தக் கேள்வி ஒரு எதிர்மறைப் பதிலை எதிர்பார்த்து கேட்கப்பட்டதுபோல் உள்ளது. இதை வருகிற இந்தச் சொற்றொடர் போல் அமைக்கலாம்; கிறிஸ்து பிரிந்திருக்கவில்லை, அவர் பிரிந்திருக்கிறாரா? இதற்கு தெளிவாக பதில் அளித்தால், “இல்லை, அவர் பிரிந்திருக்க வில்லை,” என்பது தான்.

*அவர் தம்மை பின்பற்றுவோருக்கு எல்லாமுமாக இருப்பாரானால் மற்றும் அவர்கள் எல்லாரிலும் இருப்பாரானால், பிறகு நாம் பிரிந்திருக்கக் கூடாது, ஏனெனில் அவர் பிரிந்திருக்க வில்லை. கிறிஸ்தவ சமுதாயத்தின் அனைத்துத் தனிமங்களிலும் ஒன்று பட்டிருக்க வேண்டும், சமூக தடைகள் எதுவாயிருந்த போதிலும் இதுவே உண்மை.*

*இந்த "எல்லா" எனும் இவ்வசனப்பகுதியில் வரும் வார்த்தையின் பகுதி அளவு நல்லவைகள் எல்லாவற்றிலும் தம்மைப் பின்பற்றுவோர் உட்பட எல்லாரிலும் இருக்கிறார். இங்கே குறிப்பிடப்படும் காரியம் அவர் வாசம் பண்ணுகிற எல்லா விசுவாசிகளையும் குறிக்கும் (யோவான் 17:23) ஆனால் சாத்தான் வாசம் பண்ணுகிற, அவருக்குப் புறம்பேயிருக்கிற மனுஷர் எல்லாரிலும் இருப்பதில்லை (யோவான் 8:44; 13:27), ஏனெனில் அவர் எல்லாமுமாக மற்றும் இவ்வுலகத்தின் எல்லா நல்ல காரியங்கள் எல்லாவற்றிலும் இருப்பதால், அவர் கிறிஸ்தவர்களுக்கு எல்லாமுமாக இருக்கிறார். நாம் விசுவாசமுள்ள கிறிஸ்தவர்களாயிருந்தால், பிறகு அவருடைய இந்த பிரபஞ்சத்தின் நல்லவைகளின் ஒரு பகுதியாக நாமும் இருக்கிறோம்.*

## தேவபக்திக்கான காரியங்களைத் தரித்துக்கொள்ளுதல் *(3:12-14)*

***12**ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, **13**ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். **14**இவை எல்லாவற்றின் மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்.*

### *"ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய்" (3:12அ)*

***ஆகையால்** (oun)* எனும் வார்த்தை - "எனவே" என்றும் மொழிபெயர்க்கப்படும் - இதற்கு முந்திய வார்த்தையை திருப்பிப் பார்க்கச் செய்கிறது: "கிறிஸ்து எல்லாரிலும், எல்லாமுமாக இருக்கிறார்." கிறிஸ்து "எல்லாரிலும் எல்லாமுமாக," இருப்பதால் கொலோசெயர்கள் தங்களிடம் ஒழுக்கங்களை விருத்திசெய்து சகலத்திலும் போதுமானவராயிருக்கிற கிறிஸ்துவுக்கேற்றாற்போல் ஒற்றுமையை வளர்க்க வேண்டும். பவுல் தான் வசனம் 9, 10ல் குறிப்பிட்ட வாக்கியத்தை சுட்டிக்காட்டி அவர்கள் தங்கள் பழைய மனுஷனை களைந்து போட்டு புதிய மனுஷனைத் தரித்து கொண்டிருப்பதைப் பேசியிருக்கக் கூடும். இதைச் செய்ததினால், அவர்கள் புதிய மனுஷனுக்குரிய தன்மையின் நல்லொழுக்கங்களை எடுத்துக் கொண்டு தங்களுடைய வாழ்க்கையை புதியதாய் சிருஷ்டித்துக் கொள்ள வேண்டும்.

கொலோசெயிலிருந்த கிறிஸ்தவர்கள் தெரிந்துகொள்ளப் பட்டவர்களாயிருந்தார்கள் *(eklektoi)*. ஒரு நபர் தெரிந்து கொள்ளப்பட வேண்டுமாயின் குறிப்பிட்ட தகுதியாம்ஸங்களைப் பெற்றுக் கொள்ள

வேண்டும். யூதாஸிற்குப் பதிலாக ஒருவன் தெரிந்தெடுக்கப்பட்ட போதும், பந்திவிசாரணை செய்ய தெரிந்து கொள்ளப்பட்ட ஏழுபேர் விஷயத்திலும் இது உண்மையாக இருந்தது (நடபடிகள் 1:21-25; 6:5). தேவனால் தெரிந்து கொள்ளப்பட தகுதியுடையவராக வேண்டுமாயின், ஒரு நபர் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும் (எபேசியர் 1:4). கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஜனங்கள் அவருக்குள் ஞானஸ்நானம் பெற்றவர்கள், இப்படியாக அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டார்கள். கொலோசெயர்கள் ஞானஸ்நானத்தைப் பெற்றுக்கொண்டிருந்தார்கள் (2:12), ஆதலால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குள் அவர்களும் இருந்தார்கள். கிறிஸ்துவுக்குப் புறம்பே இருப்பவர்களைத் தேவன் தெரிந்து கொள்ளவில்லை.

"தெரிந்து கொள்ளப்படுதல்" "தேர்ந்தெடுத்தல்" ஆகியன இரட்சிப்புக் கென்று முன்பதாகவே தெரிந்து கொள்ளப்பட்டவர்களல்ல என்பதைப் பவுல் 2 தீமோத்தேயு 2:10ல் தெரிந்து கொள்ளுதலைக் குறித்து சொல்லும் வாக்கியமானது தெளிவாக்குகிறது: "ஆகையால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி, சகலத்தையும் அவர்கள் நிமித்தமாக சகிக்கிறேன்," என்றார். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் ஏற்கனவே இரட்சிக்கப்பட்டவர்களாயிருந்தால், அவர்கள் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படி பவுல் ஏன் அநேக பாடுகளை அவர்களினிமித்தம் சகிக்க வேண்டும்? இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்று ஏன் அவர் ஜெபிக்க வேண்டும் (ரோமர் 10:1-3). சிருஷ்டிப்புக்கு முன்பாக இத்தனை பேர்தான் பூமியில் இரட்சிக்கப்பட வேண்டுமென்று முன் தீர்மானித்திருந்தால் ஏன் அப்படி ஜெபிக்க வேண்டும்? குறிப்பிடப்பட்டுள்ளபடி, தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மற்றும் இரட்சிக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்களாகிறார்கள், ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவுக்குள் வர ஜனங்களுக்கு தெரிவு செய்யும் உரிமை கொடுக்கப்பட்டுள்ளது. எனவே அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களில் ஒருவராக இருக்கக் கூடும்.

கிறிஸ்துவுக்குள் வருவோர் கிறிஸ்துவின் சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு தேவன் முன் குறித்திருக்கிறோம் (ரோமர் 8:29). இவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் - தாம் துவக்கத்திலிருந்தே அறிந்திருந்தவர்கள், அவர்கள் சத்தியத்தை விசுவாசிப்பவர்கள் (2 தெசலோனிக்கேயர் 2:13), அதாவது தங்கள் இரட்சிப்பின் சுவிசேஷத்தை விசுவாசிப்பவர்கள் (எபேசியர் 1:13). இந்த சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் (2 தெசலோனிக்கேயர் 1:7-9). கீழ்ப்படியவும் கீழ்ப்படியாமற் போகவும் ஜனங்களுக்கு தெரிவு செய்து கொள்ளும் உரிமை உண்டு, மற்றும் அப்படிச் செய்ய விரும்புகிற எவரும் "ஜீவத் தண்ணீரை இலவசமாய்ப் பெற்றுக் கொள்ளக் கூடும்" (வெளிப்படுத்தின விசேஷம் 22:17). தேவன் தமது சித்தத்திற்கு ஜனங்கள் பதில் செயல் செய்யும்படி விரும்புகிறார் (2 பேதுரு 3:9), ஆகிலும் அவர் அவர்களை கீழ்ப்படிய பலவந்தம் பண்ணுவதில்லை. இயேசு எருசலேமை பார்த்து அழுதார் (லூக்கா 19:41) ஏனென்றால் அவர் அவர்களைத் தம்மிடமாய்ச் சேர்த்துக் கொள்ள ஆசையாயிருந்தார், ஆனால் அவர்களுக்கோ அவரிடத்தில் வர மனமில்லை

*(மத்தேயு 23:37). இயேசு அவர்களைத் தெரிந்தெடுத்தார், ஆகிலும் அவர்கள் அவரை புறந்தள்ளினார்கள், ஒவ்வொருவருக்கும் சுயமாய் தெரிந்து கொள்ளும் உரிமையிருக்கிறது.*

*இந்தத் தெரிந்து கொள்ளுதலை விவரிக்க இரண்டு கூடுதல் வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. கிரேக்க வார்த்தையான hagioi, இங்கே* **பரிசுத்தம்** *என்று மொழிபெயர்க்கப்பட்டது,* **பரிசுத்தவான்கள்** *என்றும் வசனங்கள் 1:2, 3, 12, 27 ஆகியவைகளில் மொழிபெயர்க்கப்பட்டது,* **பிரியர்** *எனும் வார்த்தை (ēgapēmenoi), பவுலால் வேறு இடங்களில் துல்லியமாக பேசப்படுகிறது (1 தெசலோனிக்கேயர் 1:4; 2 தெசலோனிக்கேயர் 2:13), இதன் பொருள் அவர்கள் நேசிக்கப்பட்டவர்களும் தொடர்ந்து தேவனால் நேசிக்கப்படக்கூடியவர்களாகவுமிருக்கிறார்கள். இந்த இரண்டு பதங்களும் தேவனோடு அவர்களுக்குள்ளே நட்புறவு முறை சுய விளக்கமுடையவை.*

*இந்த சகோதரர்கள் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குள் இருந்தார்கள், "ஆகையால்" - "எனவே" - அவர்கள் தேவனுடைய பரிசுத்தராயும் பிரியமுள்ளவராயும் ஜீவிக்க வேண்டியவர்கள், அவர்கள் தேவனுக்கு விசேஷமானவர்களாயிருந்தார்கள். அவர்கள் மற்றவர்களைப் போல பொதுவானவர்களும் (தீட்டுள்ளவர்கள்) சாதாரணமானவர்களுமாயிராதபடியால், ஆனால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், உலகத்தின் தீய செயல்களிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டவர்களுமாயிருந்தபடியால், மிக உயர்ந்ததும் சிறப்பானதுமான ஆவிக்குரிய ஒழுக்கங்களை அவர்கள் முன்மாதிரியாகக் காட்ட வேண்டியவர்களாயிருந்தார்கள். இந்த தகுதியாம்ஸங்களெல்லாம் அவர்களை உயர்பண்புடையவர்களாக அவர்களுடைய சமுதாயத்தில் காட்டும்.*

***"உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு" (3:12ஆ)***

*("உருக்கமான" என்பது உள்ளத்தில் அல்லது இருதயத்தில் என்று ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுகிறது. அதன் நேரடி வார்த்தை தமிழ் திருமறையில் இல்லை. எனவே "உருக்கமான" என்ற தலைப்பிலேயே கவனிக்கவும்.)*

*உருக்கமான* ***(இருதயத்தில்)*** *என்று இங்கே சொல்லப்பட்டிருப்பது வழக்கமாக "இருதயம்" என்பதற்கு பயனப்படுத்தப்பட்ட வார்த்தையான kardia, அல்ல. இந்த வார்த்தை splagchnon, என்பது நேரடிப் பொருளில் "குடல்கள்"* (bowels) *(காண்க KJV). எப்பொழுதும் ஏறத்தாழ இவ்வார்த்தை பன்மையிலேயே பயன்படுத்தப்பட்டுள்ளது, இந்த வார்த்தை ஒரு மனிதனுடைய உள்ளான பகுதிகளை, யூதாஸ் காரியோத்தின் "குடல்கள்" பற்றி சொல்லப்பட்டிருப்பது போல் பேசப்படுகிறது (நடபடிகள் 1:18). அதே வார்த்தை "இருதயம்" என்று பிலேமோனில் சொல்லப்படுகிறது (பிலேமோன் 7, 12, 20க்கான விளக்கவுரையைக் காண்க) மேலும் 1 யோவான் 3:17; ஆனால் வேறு சம்பவங்களில், மனம் இளகுதல் ("இரக்கத்தின்" மாற்று வார்த்தை; லூக்கா 1:78) மற்றும் "உருக்கமான பட்சம்" (2 கொரிந்தியர் 6:12; 7:15; பிலிப்பியர் 1:8; 2:1). பவுல் இங்கே இரக்கத்துடன் சேர்த்து சொன்னார். கிரேக்க மற்றும் எபிரேய கருத்தில், பல்வேறு உணர்ச்சிகரமான நிலைகள்*

*சரீரத்தின் வித்தியாசப்பட்ட பகுதிகளுடன் சம்பந்தப்பட்டுள்ளன - உடலின் உட்பாகங்கள், ஈரல், நுரையீரல்கள், மற்றும் இருதயம் ஆகியவைகளுடன் சம்பந்தப்பட்டவை, கிரேக்கர்கள் உடலின் உட்பகுதிகளை கோபம் அன்பு போன்ற உணர்வுகளின் உறைவிடமாகக் கருதினர். எபிரெயர்கள் உடலின் உட்பகுதிகளை பாசம், அனுதாபம், இரக்கம், மற்றும் அன்பு ஆகியவற்றின் மூல (உற்பத்தி) ஸ்தானமாகக் கருதினர்.*

*இந்த வார்த்தையின் ஒரு அமைப்பு (splagchnizomai), "இரக்கத்தை உணருதல்," என்பது தேவையுடையோரினிமித்தம் இயேசு கொண்டிருந்த எண்ணத்தை வெளிப்படுத்துகிறது (மத்தேயு 9:36; 14:14; மாற்கு 1:41; 8:2; லூக்கா 7:13). மற்றவர்களின் தேவைகளைக் கண்டு உள்ளத்தால் தொடப்பட்டவர்களைக் குறித்த உவமைகளை விளக்கப்படுத்த இயேசு இந்த வார்த்தையைப் பயன்படுத்தினார் (மத்தேயு 18:27; லூக்கா 10:33; 15:20).*

***இரக்கத்தை** (oiktirmos) என்பது இரக்கத்தின் செயலாக, அனுதாபம், அக்கறை, மற்றும் ஜனங்களுடைய பிரச்சனைகளைக் குறித்த விழிப்புணர்வு ஆகியவை வெளிப்படுத்தப்படுகிறது. இந்த வார்த்தை இரக்கத்தின் உணர்வாக மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வது, விசேஷமாக மற்ற பாடுபடுகிறவர்களுக்குக் காட்டுகிற பரிவு, அல்லது உதவி தேவைப்படுவோருக்கு இரங்குதல், என்பதை அர்த்தப்படுத்துகிறது. அது ஒரு இளகிய மற்றும் அன்புள்ளம் கொண்டவராயிருத்தல் மூலமாக ஜனங்கள் பாதிக்கப்பட்டிருப்பதைக் கண்டு ஆழ்ந்த அனுதாபம் காட்டடல்.*

*Splagchnon மற்றும் oiktirmos ஆகியவை சேர்ந்து ஒன்றாக நேரடிப் பொருளில் "உடலின் உட்பகுதியின் இரக்கம்" எனப்படுவது. அவைகளை "இருதயத்தால் இரக்கப்படுதல்" என்று மொழிபெயர்ப்பது சிறப்பானது.*

***தயவு** (chrēstotēs) இதன் பொருள் உதவிகரம், உயர் பண்புடமை, மனம் இளகுதல், நேர்மை, அல்லது நற்குணம் ஆகியன - தேவனுடைய இயல்பின் தகுதியை விளக்கப்படுத்துகிறது (லூக்கா 6:35; ரோமர் 2:4; 11:22; 2 கொரிந்தியர் 6:6; எபேசியர் 2:7; தீத்து 3:4) மேலும் கிறிஸ்தவர்கள் விருத்தி செய்து கொள்ள வேண்டிய தகுதியும் இதுவே (கலாத்தியர் 5:22). இயேசு தயவுக்கு உதாரணமாக தேவனை உதாரணப்படுத்தி தமது சீஷர்களை பின்பற்றச் செய்தார் (லூக்கா 6:35). சங்கீதம் 14:1ஆ வை மேற்கோள் காட்டி, பவுல் எழுதினார், "நன்மை செய்கிறவன் ஒருவனாகிலும் இல்லை" (ரோமர் 3:12ஆ). ஒருவகையில் கிறிஸ்தவர்கள் இந்தத் தனிப் பண்பை முழுமையாய் அடைந்து விடமுடியாது; இருப்பினும் தேவனுடைய உதவியுடன், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு நாம் அதை முன்னேற்றம் செய்து கொள்ள முடியும்.*

*அடுத்த நல்லொழுக்கம் **மனத்தாழ்மை** (tapeinophrosunē). இந்த வார்த்தை தன்னையே ஒருவர் தாழ்ச்சியுடன் எண்ணி நடந்து கொள்வது அது தவறான மனத்தாழ்மைக்கு ("மாயமான தாழ்மை"; 2:18, 23), பெருமை மேட்டிமை, மற்றும் கர்வம் ஆகியவைகளுக்கு முரணானது. கொலோசெயர் புத்தகத்திற்கு அப்பால், புதிய ஏற்பாட்டில் இது நான்கு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது (நடபடிகள் 20:19; எபேசியர் 4:2; பிலிப்பியர் 2:3; 1 பேதுரு 5:5அ). இந்த வார்த்தையின் மாற்று வார்த்தைகள் கிரேக்க புதிய ஏற்பாட்டில் காணுகிறது. இயேசு தாமே தம்மை "மனத்தாழ்மையுள்ளவராக" மத்தேயு 11:29ல் சொன்னார். பவுல் இயேசு தம்மைத் தாமே "தாழ்த்தி"*

மரணபரியந்தம் கீழ்ப்படிந்திருந்தார் என்று எழுதினார் (பிலிப்பியர் 2:8, 9), பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், "தாழ்மையுள்ளவர்களுக்கோ" கிருபையளிக்கிறார் (1 பேதுரு 5:5ஆ, 6).

தாழ்மையாயிருந்த ஜனங்கள் பொதுவாக கிரேக்கராலும், ரோமர்களாலும், மற்ற அஞ்ஞான உலகத்தாராலும் பரியாசம் செய்யப்பட்டார்கள்; அவர்கள் பெலவீனர்களாயும் கோழைகளாயும் கருதப்பட்டார்கள். திருமறை கருத்தில், எப்படியிருப்பினும், தாழ்மை மற்றவர்களுடன் ஒப்பிடும் போது தன்னை விலைமதிப்பிடுவதாகவும் தேவனுடைய கண்களில் எல்லாருமே சம மதிப்புள்ளவர்கள் என்று ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. தாழ்மையுள்ளவர்கள் ஏதாவது உயர்ந்த சிறப்பு திறமை தன்னிடத்தில் இருந்தால் அது தேவனிடத்திலிருந்து அவர்கள் அந்தக் திறமைகளைப் பெற்றுக் கொண்டதாகவும் அது அவர்களுடைய சுயமான முயற்சியால் வரவில்லை, என்றும் சொல்லுவார்கள் (1 கொரிந்தியர் 4:7).

இயேசுவிடம் போய்ச் சொல்லும்படி நூற்றுக்கதிபதி ஆட்களை அனுப்பி "... நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல" (லூக்கா 7:6). என்று சொன்னபோது அவன் தாழ்மையைக் காட்டினான் இயேசு தமது உவமையில் பயன்படுத்திய நபர்களில் ஒருவனாகிய ஆயக்காரன் "தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும்" என்று சொன்ன போது தனது தாழ்மையைக் காட்டினான் (லுக்கா 18:13). எபேசு பட்டணத்து மூப்பர்களிடம் பவுல் தான் வெகுத்தாழ்மையுடன் தேவனை சேவித்ததாகக் குறிப்பிட்டார் நடபடிகள் (20:19). அவர் பிலிப்பியர்களுக்கு புத்திமதி சொல்லும்போது. "... மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக் கடவீர்கள்" என்றார் (பிலிப்பியர் 2:3).

**சாந்தம்** *(prautēta)* என்பதை "ஒருவருடைய சுய முக்கியத்துவம், சாந்தம், மனத்தாழ்மை, மரியாதை, பிறரின் எண்ணங்களுக்குக் மதிப்பளித்தல் ஆகியவைகளினால் ஒரு அளவுக்கு அதிகமாக மன நெகிழ்ச்சி அடையாதத் தன்மையை விளக்கப்படுத்துகிறது."[28] கிறிஸ்தவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டியதும் ஆசைப்பட வேண்டியதுமான இந்தத் தகுதியை பவுல் அடிக்கடி தனது போதனையில் சேர்த்துக் கொண்டிருந்தார்.[29] சாந்தகுணமுள்ளவர்கள் பெரிதும் மன இரக்கம் உள்ளவர்களாகவும், அன்புடையவர்களாகவும், இளகிய மனமுடையவர்களாகவும், சிந்திக்கப்பட வேண்டிய அவர்களுடைய இயல்பான பண்புகளும் உடையவர்களாயிருப்பார்கள். அவர்கள் கடுமையானவர்களும் மரியாதையில்லாதவர்களும் மற்றும் மூர்க்கமானவர்களுமாய் இருப்பதில்லை - இதனால் அவர்கள் பெலவீனமானவர்கள் என்று அர்த்தமல்ல.பெலவீனமுள்ள ஒருவன் மேஜையின் மேல் உள்ள இருநூறு பவுண்டு எடையுள்ள பொருளை கவனமாக தூக்கி கீழே தரையின் மேல் வைப்பது இயலாத காரியம்; பலசாலியாயுள்ள ஒரு நபர் மட்டுமே அதைச் செய்ய முடியும். ஜனங்கள் கொடூரகுணமுள்ளவர்களாயும், அன்பில்லாதவர்களாயும், வெறுப்புக்குணமுடையவர்களாயும், அல்லது மரியாதையற்றவர்களாயும் இருக்கும் போது சாந்தமாய் இருக்க வேண்டுமாயின் உள்ளான பலம் தேவை.

இந்தப் பட்டியலின் கடைசி தகுதி நீடிய **பொறுமை.** இங்கே பயன்படுத்தப்படுகிற கிரேக்க வார்த்தை *(makrothumia)*

*பின்வருமாறு விளக்கப்படுத்தப்படுகிறது, "கோபமுறுத்தும் சூழ்நிலையிலும் சகிப்புத் தன்மையுடன், நீடிய பொறுமையாய், மற்றவர்களுடன் அமைதியாய் நடந்து கொள்ளும் தன்மையுடன் இருப்பது."[30] பொறுமையாய் இருப்பவர்கள் தவறாக நடத்தப்பட்டாலும் சகித்துக் கொள்ள விருப்பமுள்ளவர்களாயிருப்பார்கள், கஷ்டமான சூழ்நிலைகள் வரும்போது உறுதியாய் இருப்பார்கள். இந்த வார்த்தை தேவனாலும் இயேசுவாலும் மனிதகுலத்தை தெய்வீகமாய் நடத்துதலைக் குறிக்கிறது (ரோமர் 2:4; 9:22; 1 தீமோத்தேயு 1:16; 1 பேதுரு 3:20; 2 பேதுரு 3:15), அதே போல கிறிஸ்தவர்கள் கொண்டிருக்க வேண்டிய தகுதியும் கூட (2 கொரிந்தியர் 6:6; கலாத்தியர் 5:22; எபேசியர் 4:2; 2 தீமோத்தேயு 4:2). யாக்கோபு பொறுமைக்கு மாதிரியாக பயிரிடுகிறவர்களையும், தீர்க்கதரிசிகளையும், யோபையும் குறிப்பிட்டார் (யாக்கோபு 5:7, 10, 11). ஆகிலும், இயேசுவே மிகப் பெரிய உதாரணமாயிருக்கிறார்: "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேதுரு 2:23). "தமக்கு விரோதமாய் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களை" அவர் சகித்தார் (எபிரெயர் 12:3).*

*இன்னல்களும் சோதனைகளும் தங்கள் நடத்தைகளை விருத்தி செய்து கொள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவிடக்கூடும் (ரோமர் 5:3, 4; யாக்கோபு 1:2-4). வேதனைகளையும் சோதனைகளையும் அல்லது பரீச்சைகளையும் தங்கள் வாழ்க்கைச் சூழலில் பொறுமையாய் சகிப்பவர்களுக்கே இது உண்டாகிறது (1 கொரிந்தியர் 4:12; 1 பேதுரு 2:20). "அந்த சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதானப் பலனைத் தரும்" (எபிரெயர் 12:11).*

*கொலோசெயர்கள் ஏற்கெனவே "புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருந்தார்கள்" (3:10), ஆனாலும் அவர்களுடைய பண்புகளில் உடனடியான மாற்றம் எதையும் உண்டாக்கியிருக்கவில்லை. புதிய நபருக்குரிய சில பண்புகளை அவர்கள் தரித்துக் கொள்ள வேண்டியதிருந்தது. அவர்கள் அசுத்தமான, பாவமான நாடோடிகளிலிருந்து கிறிஸ்துவின் இராஜ்யத்தின் சுதந்திரராய் மாற்றப்பட்டிருந்தார்கள். அவர்கள் தங்களுடைய பழைய அழுக்கான ஆடைகளிலேயே தொடர்ந்து இருக்கக் கூடாதிருந்தது, ஆனால் கறையற்ற ஆடைகளாகிய புதிய வாழ்க்கையைத் தரித்துக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தார்கள்.*

***தரித்துக் கொண்டு** (endusasthe) என்பது கொலோசெயர்கள் வசனப்பகுதியில் சொல்லப்பட்ட நல்லொழுக்கங்களைத் ("ஆடையைப்போல") தரித்துக் கொள்ள வேண்டிய ஒரு கட்டளையின் வலியுறுத்தலாக இருந்தது. இது தேவனுடைய பரிசுத்தரும் பிரியருமாய் மாற்றப்பட்ட தன்மைக்கு முரண்படாதது. அவர்கள் யாராக இருந்தார்கள் என்பதால், ஆவிக்குரிய முறையில் அவர்கள் வித்தியாமானவர்களாக இருக்க எதிர்பார்க்கப்பட்டனர்.*

*"பவுலால் பாராட்டுப்பெற்ற நல்லொழுக்கங்கள் சரி எதிராக கண்டனம் பண்ணப்பட்ட தீய ஒழுக்கங்களுக்கு முன் இருக்கின்றன - சமுதாயக் கிருபைகள், சமுதாய பாவங்களெல்ல."[31] வசனங்கள் 8, 9ல் வரும் காணப்படக் கூடாத தீய ஒழுக்கங்கள் மற்றும் வசனங்கள் 12 லிருந்து 14ல் வரும் இருக்க*

*வேண்டிய நல்லொழுக்கங்கள் கிறிஸ்தவ நடத்தைகளுக்கு மாத்திரமல்ல ஐக்கியத்துக்கும் அவசியமானவை. கோபம், மூர்க்கம், பொறாமை, தூஷணம், வம்பு வார்த்தைகள், மற்றும் பொய் ஆகியவையெல்லாம் ஒரு சமுதாய ஜனங்களை துண்டு துண்டுகளாக பிரித்து விடும்; இவைகள் இல்லாதிருப்பதே ஐக்கியத்திற்கான அடிப்படை. இரக்கம், தயவு, மனத்தாழ்மை, சாந்தம், பொறுமை, சகிப்புத் தன்மை, மன்னித்தல், மற்றும் அன்பு ஆகியவைகளின் அஸ்திபாரத்தின் மேல் ஒற்றுமை கட்டியெழுப்பப்பட முடியும். இந்த நல்லொழுக்கங்கள் புறந்தள்ளப்பட்டு தீயொழுக்கங்கள் கைக் கொள்ளப்படுவதால் அவை குழப்பத்தையும் பிரிவினையையும் மட்டுமே கொண்டு வரும்.*

*கொலோசெயர்கள் தங்கள் வாழ்க்கையில் பெருக்கிக்கொள்ள வேண்டிய நல்லொழுக்கங்கள் மூன்று பிரிவுகளாக காணப்படுகின்றன: (1) மற்றவர்களிடம் காட்ட வேண்டிய மனப்பான்மை - உருக்கமான இரக்கம், தயவு, சாந்தம், மற்றும் அன்பு (2) தனக்குள் கொண்டிருக்க வேண்டிய மனப்பான்மை - தாழ்மை; மற்றும் (3) தீமையாக நடத்தப்படும் போது செயல்படும் எதிர் கிரியை - பொறுமை, சகிப்புத் தன்மை, மற்றும் மன்னித்தல். முதல் ஐந்தும் மனப்பான்மையையும், கடைசி மூன்றும் மற்ற ஜனங்களிடம் காட்ட வேண்டிய பொறுப்புணர்வையும் உட்படுத்தியுள்ளன. கொலோசெயர்கள் குறிப்பிட்ட தகுதியாம்ஸங்களைத் தரித்துக் கொள்ள வேண்டியவர்களாயிருந்தார்கள் (3:12-14) மேலும் குறிப்பிட்ட சில காரியங்களை நடப்பிக்கவும் வேண்டியவர்களாயிருந்தார்கள் (3:15-17). அதே போல தீய ஒழுக்கங்கள் ஒருவரின் சுயத்திலும், மற்றவர்கள் மீதும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும், அதுபோலவே நல்லொழுக்கங்களும் அவைகளுக்கென பாதிப்புக்களைக் கொண்டிருக்கின்றன.*

***"ஒருவரையொருவர் தாங்கி ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்குமன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (3:13)***

*சகிப்புத் தன்மையும் மன்னித்தலுமாகிய நல்லொழுக்கங்களை தொடர்ந்து வளர்த்துக் கொள்ள கொலோசெயர்கள் எதிர்பார்க்கப்பட்டனர்.* ***ஒருவருக்கொருவர் தாங்கி*** *(anechomai) என்பதன் பொருள் சகித்துக்கொள்ளுதல் - கஷ்டங்களையும் கோபமூட்டுதலையும் சகித்துக்கொள்ள சித்தமுள்ளவர்களாயும், அதேபோல மற்றவர்களால் சினமூட்டப்படும் சூழ்நிலைகளிலும் பொறுமையாய் நடந்துகொள்ளுதல் என்பதாகும். எபேசியர் 4:2ல் பவுல் அன்பினால் ஒருவரையொருவர் தாங்க வேண்டும் என்று அன்பை சேர்த்துச் சொல்லுகிறார். தமது பொறுமையை சோதிக்கத்தக்கதாக செயல்பட்டவர்களுடன் இயேசு பொறுமையோடே சகித்தார் (மத்தேயு 17:17; மாற்கு 9:19; லூக்கா 9:41). அவரைப் பின்பற்றுவோர் உபத்திரவங்களையும் அல்லது தொல்லைகளையும் சகிக்க வேண்டியதாகலாம் (1 கொரிந்தியர் 4:12; 2 தெசலோனிக்கேயர் 1:4; 2 தீமோத்தேயு 3:12). மேலும் நாம் அவமதிப்புக்களையும் கெடுதிகளையும் மற்றவர்களால் விளைவிக்கப்படுவதை விசுவாசத்தினிமித்தம் சகித்துக் கொள்ள தயாராக இருக்க வேண்டும்.*[32] *நேர்மறையில் பேச வேண்டுமானால் "தாங்கிக்"*

*கொள்ள வேண்டுமென்பது கனிவுடன் வெறுப்பையும் சகித்துக் கொண்டு, பழிவாங்குவதற்குப்பதிலாக ஆசீர்வதிக்க வேண்டியது (லூக்கா 6:28; ரோமர் 12:14; 1 பேதுரு 2:21-23). எதிர்மறையில் சொன்னால், அன்பற்றமுறையிலோ அல்லது தவறாகவோ நடத்தப்படும் போது கலக்கமடையவோ கோபப்படவோகூடாது. கொலோசெயர்கள் மற்றவர்களால் தவறாக நடத்தப்படும் போது தங்களுடைய தகுதியை மீறி நடக்கக் கற்றுக்கொள்ளக் கூடாதவர்கள், மாறாக சகிப்புடன் கூடிய ஆவியுடையவர்களாய் நடந்து கொள்ள வேண்டும்.*

*சக கிறிஸ்தவர்களிடம் சகிப்புத்தன்மையைக் காட்ட வேண்டும். பெரும்பாலும் ஜனங்கள் அடுத்தவர் மனம் புண்படும்படி அல்லது பாதிக்கப்படும்படியான காரியங்களை நடப்பிப்பார்கள். கிறிஸ்தவர்கள் அவர்கள் சகோதரரைப் பொறுத்துக் கொள்ளத்தக்க எண்ணத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும், பவுல்* ***ஒருவரையொருவர்*** *மற்றும்* ***ஒருவருக்கொருவர்*** *என்னும் வார்த்தையைப் பயன்படுத்தி விசுவாசிகளின் சமுதாயத்தில் நிலைத்திருக்கத்தக்க நெருக்கத்தை வெளிப்படுத்தினார். கிறிஸ்துவுக்குள் சகோதரர்களாக சகோதரிகளாக, நாம் சில குடும்பங்களில் இருப்போர் தங்களைச் சுற்றிலும் இருப்பவர்களைக் காட்டிலும் தங்கள் குடும்பத்தாரிடம் மிகவும் புண்படும் படி நடந்து கொள்வதுபோல, நடந்து கொள்ளாதபடி எச்சரிக்கையாக நாம் இருக்க வேண்டும்.*

*ஒருவருக்கொருவர்* ***மன்னியுங்கள்*** *(charizomai; charis என்பதலிருந்து தொடர்புடைய சொல்) என்பது "கொடுத்தல்," "அளித்தல்," அல்லது "படைத்தல்" என்றெல்லாம் பொருள்படக் கூடும் (காண்க லூக்கா 7:21; ரோமர் 8:32; 1 கொரிந்தியர் 2:12; கலாத்தியர் 3:18; பிலிப்பியர் 1:19; 2:9; பிலேமோன் 22) அல்லது "இன்னொருவருடைய பாதுகாப்பில் ஒருவரை ஒப்படைப்பது" (நடபடிகள் 3:14; 25:11, 16). அது ஒரு கடனை மன்னிப்பது போலவோ அல்லது இங்கே குறிப்பிடுவது போல மற்றவர்களை பாதிக்கும் செயலை செய்வதற்காகவோ மன்னிப்பதைக் குறிப்பிடலாம் (லூக்கா 7:42, 43; 2 கொரிந்தியர் 2:7, 10; எபேசியர் 4:32). "பாவமன்னிப்பிற்கென்று" அடிக்கடிப் பயன்படுத்தப்படும் வார்த்தை இது அல்ல, அது aphesis; ஆகிலும் இது பாவமன்னிப்பைக் குறித்த நிறைவான பொருளைக் கொடுக்க வல்லது, இதுதான் லூக்கா 7:42ல், "இரக்கத்துடன் மன்னித்தல்" என்று பொருள்பட மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, பவுல் கொலோசெயர்கள் தொடர்ந்து ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டியவர்கள் எனும் பொருளில் ஒரு வார்த்தையை அமைத்துப் பேசினார்.*

*மன்னிப்பைக்குறித்த தமது போதனையில், இயேசு அடிக்கடி பயன்படுத்திய வார்த்தைகள் aphesis ("மன்னித்தல்") மற்றும் aphiēmi ("மன்னிக்கும்படி") என்பவைகள். நாம் மற்றவர்களை மன்னிக்கும் செயல் ஒழுக்கரீதியாக முடிவுபெறாதவைகளாக இருக்கவேண்டும்: "ஏழு எழுபது முறை" (மத்தேயு 18:22). இந்தக் கருத்தை அவர் தனது எஜமானனால் பெரிய கடன் தனக்கு மன்னிக்கப்பட்டும், தனது உடன் வேலையாட்கள் தங்களுடைய சிறிய கடனை தனக்குத் திருப்பிக் கொடுக்கும் படி நிர்ப்பந்தம் பண்ணின ஊழியக்காரனைப் பற்றிய உவமை மூலம் விளக்கப்படுத்துகிறார். எஜமானன் மற்றவர்களை மன்னிக்காத ஊழியக்காரனைத் தண்டித்தான் (மத்தேயு 18:23-*

*34). அதற்கு முடிவுரையாக இயேசு, "நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற் போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" என்றார் (மத்தேயு 18:35). மற்றவர்களை மன்னிக்க மறுக்கும் நபர்களை தேவன் மன்னிக்க மாட்டார் (மத்தேயு 6:14).*

*நாம் பெறும் மரியாதக் குறைவுகள், அவமதிப்புகள், புறக்கணிப்புக்கள், மன ரீதியான புண்படுத்தப்படுதல் போன்ற ஊறுபாடுகளை மன்னிக்க வேண்டும். ஒரு தவறு நடத்தலுக்கு எதிரான இயல்பான எதிர்கிரியை ஒருவேளை மன்னிக்காத அதிருப்தியுடன் கூடிய ஆவியில் பழிவாங்கும் மனப்பான்மையாயிருக்கலாம். நமக்கு தீங்கு செய்வோருக்கு திருப்பி நாமும் தீங்கு செய்வதற்குப் பதிலாக, நம்மை வேதனைப்படுத்துவோருக்கு நாம் நன்மை செய்ய வேண்டும் (லூக்கா 6:35; ரோமர் 12:20, 21).*

*ஒருவர் பேரில் ஒருவருக்கு* **குறைபாடு** *உண்டானால் (momphē), எனும் கிரேக்கப் பெயர்ச்சொல், புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே காணப்படுகிறது, இந்த வார்த்தையின் வினைச்சொல், memphomai, என்றால் "குற்றப்படுத்துதல்" அல்லது "குற்றம் கண்டுபிடித்தல்" (மாற்கு 7:2; ரோமர் 9:19; எபிரெயர் 8:8). பவுல் குறைபாடு இருப்பது நியாயமானது என்று நியாயப்படுத்தவில்லை, ஏதோ ஒன்றின் நிமித்தம் நாம் பாதிக்கப்பட்டால் அதினால் நாம் நீதியுள்ளவராகக் கருதப்பட்டாலும் கருதப்படாமல் போனாலும், நம்மை வேதனைப்படுத்தினவர்களை நாம் மன்னிக்கத்தான் வேண்டும். ஒரு குற்றம் மன்னிக்கப்பட்ட பின், அது மறக்கப்படவும் வேண்டும். இப்படியாகத்தான் "கர்த்தர்" நம்மை மன்னித்திருக்கிறார். இந்த வசனத்தில் சொல்லப்படும் கர்த்தர் (கிறிஸ்து எனும் பதம்) இயேசுவைக் குறிக்கிறது.*

**மன்னித்தது** *போல (charizomai) என்பது "மன்னியுங்கள்" எனும் முந்திய வசனத்தில் சொன்ன அதே வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது; ஆனால் இந்த சொல் அமைப்பு ஒரு கடந்தகால முற்றுவினை, அதாவது கர்த்தர் தமது மன்னிக்கும் செயலை அவர்களுடைய கடந்தகால பாவங்களை* <u>மன்னித்து விட்டார்</u> *என்று காட்டுகிறார். "மன்னித்தல்" என்பது கிறிஸ்தவர்களுக்கு ஒரு முக்கியமான பண்பாக இருக்கிறது.[33] நாம் அடிக்கடி தேவனுடைய சித்தத்தை மீறியும் அவர் நம்மை மன்னிப்பாரானால், நாமும் ஒருவருக்கொருவர் மன்னிக்க வேண்டும். தனக்கு மன்னிக்கப்பட வேண்டாத அளவுக்கு பாவமில்லாதிருக்கிற மனுஷனே மற்றவர்களை மன்னிக்காதிருக்க அதிகாரம் பெற்றவனாயிருக்கிறான். மன்னிப்பதற்கான முன்மாதிரியையும் உள்நோக்கத்தையும் இயேசு நமக்கு கொடுத்திருக்கிறார் (எபேசியர் 4:32).*

*ஆக்கப்பூர்வமான வார்த்தைகளான* **போல** *மற்றும்* **அதே போல** *(kathōs kai[34] மற்றும் houtos kai[35]) என்பன பவுலின் எழுத்துக்களில் பொதுவானமுறை. இந்த வார்த்தைகள் கொலோசெயர்கள் பின்பற்ற வேண்டிய மாதிரி இயேசுவே என்பதை வலியுறுத்தும்படி பயன்படுத்தப்பட்டது. அவர்களை முற்றிலுமாய் "மன்னித்திருந்த" இயேசுவை பின்பற்ற வேண்டியவர்களாயிருந்தார்கள். நேரடியாக, கிரேக்க பொருளில் சொல்லப்படுகிறது, "கர்த்தர் உங்களை மன்னித்திந்தது போல நீங்களும் தான்" என்று சொல்கிறது. இந்த வாக்கியத்தை பூர்த்தி பண்ணிக்கொள்ள உங்களுக்குத்*

*தெரியும்: "... நீங்களும் கூட மன்னிக்க வேண்டும்."* தேவனுடைய மன்னிப்பை அனுபவித்தவர்கள் மற்றவர்களை மன்னிக்க மனமுடையவர்களாக இருக்க வேண்டும்.

***"இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்" (3:14)***

*கிறிஸ்தவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டிய உச்சக்கட்ட தகுதியாம்ஸம் "அன்பு" (agapē); மற்ற எல்லாவற்றிற்கும் மேலே காணப்படுவது இது (1 கொரிந்தியர் 13:13; 1 பேதுரு 4:8). அன்பு கிறிஸ்தவ நல்லொழுக்கங்களிலேயே உச்சக்கட்ட பண்பாக வைக்கப்பட்டுள்ளது. கிரேக்க வார்த்தையின்படி அதன் தோற்றக் காட்சியில் மிகத் தெளிவானதாய்க் காணுகிறது, ஏனெனில் "அன்பு" பவுல் பட்டியலிட்டபடி நல்லொழுக்கங்களிலேயே முதலில் இடம் பெறுகிறது (கலாத்தியர் 5:22). 2 பேதுரு 1:5-7ல், அது கடைசியில் குறிப்பிடப்பட்டுள்ளது, ஒருவகையில் சொன்னால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சில காரியங்கள் இப்படித்தான் வலியுறுத்தி எபிரேய மொழியில் காட்டப்படும். அன்பு மற்றவர்களை கட்டி எழுப்புகிறது (1 கொரிந்தியர் 8:1) கூடவே மற்றெல்லா நல்லொழுக்கங்களிலும் வளர்வதற்கான செயல் ஊக்கம் கொடுக்கிறது (ரோமர் 13:8-10; கலாத்தியர் 5:14).*

*அன்பு (செலுத்தப்படும்) மற்ற நபர் அதற்குத் தகுதியானவரா இல்லையை அல்லது சுலபமாக அன்பு செலுத்தக்கூடியவரா என்பதை அடிப்படையாகக் கொண்டதல்ல. கிறிஸ்தவர்கள் அன்பு செலுத்தப்படத்தக்கவர்களுக்கும் தகுதி இல்லாதவர்களுக்கும் அன்பு காட்ட வேண்டும். தேவன் இப்படித்தான் அன்பு கூருகிறார் (1 யோவான் 4:9, 10). இந்தப் பாவம் நிறைந்த உலகத்தை, தமது அன்புக்குப் பாத்திரமில்லாத உலகத்தை, எவ்வளவாய் அன்புகூர்ந்து அதன் இரட்சிப்புக்காக தமது குமாரனையே கையளித்தார் (யோவான் 3:16). தேவன் அன்பின் தேவனாக இருக்கிறபடியால், அன்புகூர்ந்தார், ஜனங்கள் அன்பு கூரத்தக்கவர்கள் என்பதால் அல்ல.*

*வசனம் 14அ வில்* ***இவை எல்லாவற்றின் மேலும் ... அன்பைத் தரித்துக் கொள்ளுங்கள்*** *என்று சொல்லுகிறது.* NASB *"அன்பைத் தரித்துக் கொள்ள வேண்டியவர்கள் நாம்" என்று சொல்லுகிறது, இந்த சொற்றொடரில் பவுல் வினைச்சொல் எதையும் கொடுக்கவில்லை. இதன் நேரடி மொழிபெயர்ப்பில் இதை இப்படியாக வாசிக்கலாம், "மேலும் அவைகள் அனைத்திலும் அன்பு." "தரித்துக் கொள்ளுங்கள்" என்பது குறித்துக் காட்டுகிறது. கிரேக்க வார்த்தையான epi, என்பது இங்கே "அப்பால்," எனும் பொருள் 3:2, 6ல் சொல்லப்பட்டுள்ளது போல "மேல், மீது" என்ற எளிமையாக அல்லது "மேலே" என்றும்* (NIV) *மொழியெர்க்கப்பட்டுள்ளது. மற்றொரு சாத்தியக்கூறான பயன்பாடு, "கூடுதலாக" என்பது தெரிந்துகொள்ளப்பட்ட பொருளில் அன்பின் அளவீடு இடம் பெற்றிருக்கலாம்: "இவை எல்லாவற்றின் மேலாக," "மற்றெல்லாவற்றிற்கும் மேலாக" அல்லது இங்கே மொழிபெயர்க்கப்பட்டுள்ளபடி, "இவையெல்லாவற்றிற்கும் அப்பால்" என்று பொருள் கொள்ளலாம். இந்தச் சொற்றொடர் "இவைகளுக்கப்பால் (அல்லது, இவை எல்லாவற்றிற்கும் மேல்) அன்பையும் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று எடுத்துக் கொண்டால் இதன் பொருள் அவ்வளவு அதிக வித்தியாசத்தை*

ஏற்படுத்தாது.

பவுல் பிறகு **சற்குணத்தின் கட்டைக்**குறித்துப் பேசினார், அதை அன்பின் கருத்துடன் நெருக்கமாக கட்டுகிறார், **பூரணம்** என்பதன் கிரேக்க வார்த்தை, *teleiotēs,* என்பது எபிரெயர் 6:2ல் மட்டுமே வேறிடத்தில் காணப்படுகிறது, அது பூரணராகுதல் (வளர்ந்தேறினவர்) என்று மொழிபெயர்க்கப்பட்டது. *Teleios* ன் பெயருரிச்சொல் நிறைவான பூரணம் என்பதற்கு மேலான பொருளைக் கொண்டிருக்கிறது, அது குறையற்ற வளர்ச்சி என்பதை விட மேலானது (காண்க 1:28). **கட்டு** *(sundesmos)* என்பது காரியங்களை ஒன்றிணைத்துக் கட்டுகிற அமைப்பைக் குறிக்கிறது. இந்த வார்த்தை நடபடிகள் 8:23ல் "கட்டில் அகப்பட்டிருத்தல்" என்றும் மற்றும் வேறு இடத்தில் "உடலின் தசை நாரால் ஒன்றுடன் ஒன்று இணைத்துக் கட்டப்பட்டிருத்தல்" பற்றி "கட்டு" என்று சொல்லப்பட்டது (எபேசியர் 4:3; கொலோசெயர் 2:19).

"அன்பின் பூரண பந்தத்துக்கு" சம்பந்தப்படுத்தி விளக்கமளிக்க மூன்று பெரிய வியாக்கியானங்கள் ஆலோசனையாகக் கொடுக்கப்படுகிறது: அன்பு கிறிஸ்தவர்களை ஒன்றாகக் கட்டுகிற ஒரு கட்டு, அது கிறிஸ்தவ ஒழுக்கங்களைக் கூட்டிக் கட்டுகிறது, அல்லது கிறிஸ்தவனுக்குள்ளே பரிபூரணத்தைக் கொண்டு வருகிறது, கிறிஸ்தவர்களின் ஜீவியத்தில் அன்புக்குக் கிடைக்கப்பட்டுள்ள செல்வாக்கு இந்த மூன்று கோணங்களில் எதுவுமே அநீதியுள்ளதாயிராது. ஒவ்வொரு விளக்கவுரையையும் கூர்ந்து கவனிப்போமாக:

முதல் விளக்கம், அன்பு பிசின் போன்று ஒட்டும் தன்மையுடையது, அதாவது முழுமையாக இயேசுவைப் பின்பற்றுவோரை ஐக்கியத்தில் ஒன்றிணைத்துக் கட்டத்தேவையான போதிய சக்தி அதற்குள் அடங்கியிருக்கிறது. அதுதான் மிகப் பெரிய பந்தத்தை ஏற்படுத்தும் முகவர். நாம் ஒருவருக்கொருவர் ஈர்க்கப்பட்டு ஒரு அன்பின் வல்லமையான கட்டினாலே ஐக்கியத்திற்குள் ஒற்றுமையான பரிபூரணத்தால் இணைக்கப்படுகிறோம். இதற்கு ஒரு உதாரணம் தான் யோனத்தானுடைய ஆத்துமா தாவீதின் ஆத்துவாவோடே இசைந்திருந்தது (1 சாமுவேல் 18:1).

இரண்டாவதாக, அன்பு பரிபூரண கட்டாகிய ஒழுக்கத்தின் நூல் கயிறாக இருந்து மற்ற எல்லா நல்லொழுக்கங்களையும் ஒன்றாக இணைக்கத்தக்கதாக ஒரே பொட்டலமாகச் சுற்றப்பட்டு கட்டப்படுகிறது. அது முழுமையாக இணைத்து அவைகளை ஒரு முழு சரீரத்தின் அவயங்கள் இணைக்கப்பட்டது போல் கட்டுகிறது. அன்புக்கு இப்படிப்பட்ட பாதிப்பு இருக்கிறதா என்பது சாத்தியமே ஆனால் சந்தேகத்திற்குரிய விளக்கம்.

மூன்றாவதாக, அன்பு ஒரு தனி சிறப்புள்ள பண்பு, அது ஆவிக்குரிய வளர்ச்சியை அல்லது பரிபூரணத்தை அடையச் செய்கிறது, இதுதான் அதன் அர்த்தம் எனில், அது கிறிஸ்தவன் மற்ற ஒழுக்கங்களை வளர்த்துக் கொள்ளச் செய்கிறது என்று பொருள் (1 கொரிந்தியர் 13:4-7). சிலர் இதை முதலாவது கருத்துடன் சேர்த்து ஆலோசனையாக, அன்பு கிறிஸ்தவர்களை ஒற்றுமையாக இணைத்துக் கட்டுவதால், அது நிறைவான உறவுமுறையை ஏற்படுத்துகிறது. என்கின்றனர். உறவுமுறைகளின் பரிபூரணமெல்லாம் விசுவாசிகள் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பினால் வருகிறது. அன்பு என்பது ஒரு பந்தம் அது கிறிஸ்தவர்களை வளர்ச்சியடையச் செய்து ஒரு அளவான வளர்ச்சிக்குரிய கூட்டமாக, கிறிஸ்துவுக்குள் சமாதானமான ஐக்கியத்தை ஏற்படுத்துகிறது.

*சுருங்கச் சொல்லின், பவுல் கொடுத்துள்ள நல்லொழுக்கங்களின் பட்டியல் 3:12-14ல் காணப்படுவது பின் வருமாறு:*

1. *"இரக்கம்" ஒரு மனுஷன் மற்றவர்களின் பாதிப்புகளை உணர்ந்து நேரம் வரும்போது அவர்களுடைய தேவைகளையோ அல்லது பாடுகளையோ அறிந்து அவர்களுக்கு உதவி செய்ய விரும்புவார்.*
2. *"தயவு" ஒரு கிறிஸ்தவனை செயலூக்கம் கொடுத்து இளகிய மனதுடனே கூட கவனிக்கவும் கடுமையாகவோ கரடுமுரடாகவோ நடந்து கொள்ளாமல் இருக்கச் செய்கிறது.*
3. *"தாழ்மை" ஒரு நபரை மனபூர்வமாய் எல்லாரோடும் ஒருங்கிணைத்து எந்த நிலையிலிருந்தாலும் அவர்களுக்கு மேல் தன்னை உயர்த்திக் கொள்ளாமல் அல்லது மற்றவர்களைக் காட்டிலும் தான் உயர்ந்தவன் என்ற எண்ணங்கொள்ளாதிருப்பான்.*
4. *"சாந்தம்" தனிப்பட்டவர்களின் கடினமான முனைகளை மிருதுவாக்கி உறவுமுறையை பலப்படுத்தும் ஒரு மெத்தையாக்குகிறது. அது ஒரு மென்மையான ஸ்பரிசத்தால் இருதயத்தை வருடிக் கொடுத்து மற்றவர்களுக்குள் கிரியை செய்கிறது.*
5. *"பொறுமை" வாழ்க்கையின் போராட்டத்தை வெகு காலமாக கண்ணோக்கிப் பார்த்து இவைகள் கொஞ்சம் காலத்துக்கு மட்டுமே என்றும் அவைகளின் முக்கியத்துவம் கடந்து போகும் என்று காணுகிற ஒரு நல்லொழுக்கம்.*
6. *"ஒருவருரையொருவர் தாங்கி" என்பது தனக்கு இழைக்கப்படும் அவமானத்தைச் சகித்துக் கொள்ளும் தகுதி, தடைகளைப் பொறுத்துக் கொண்டு, தவறிழைக்கப்படுகையில் பழிவாங்கும் எண்ணமில்லாத குணம்.*
7. *"மன்னித்தல்" என்பது தேவனுடைய தன்மையின் இயல்பைக் குறிக்கக் கூடியதாயும் அது முறுமுறுப்பு இல்லாமல் தனக்கு இழைக்கப்பட்ட தவறை மறந்து விடக் கூடியதாகவுமிருக்கிறது.*
8. *"அன்பு" சகல நல்லொழுக்கங்களையும் கட்டுகிறது மற்றவர்களுக்காக அக்கறையும் இரக்கமும் காட்டவல்லது. அது தன்னையே அர்ப்பணிக்கத்தக்க மனதையும் பாசத்தின் நோக்கத்திற்காக அப்படிச் செய்கிறதுமாய் இருக்கிறது.*

## மேலும் கற்றுக்கொள்ள

***"அன்பு" (3:14)***

*"அன்பு" என்பது "மற்றவர்களிடத்தில் தனிக்கவனத்துடன் ஆர்வம் காட்டுதல், மதிப்புக்கொடுத்தல், பாசம் காட்டுதல், கவனம் செலுத்துதல், காதலித்தல் (மிகவும் நெருக்கமானவர்களிடத்தில் மட்டும் அன்பு காட்ட வேண்டும் என்று மட்டுப்படுத்தாமை, மற்றும் கிரேக்க வசனப்பகுதியில் மிக அபூர்வமாக பாலுணர்வு கவர்ச்சியை வெளிப்படுத்துதல்)" என்றெல்லாம் விளக்கமளிக்கப்படுகிறது.[36] இதன் வினைச்சொல் 3:12, 19 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது; இதன் பெயர்ச்சொல் வார்த்தை 1:4, 8, 13; 2:2; 3:14 ஆகிய*

வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

கிரேக்கமொழியில் இரண்டு பதங்கள், வித்தியாசப்பட்ட விதத்தில், புதிய ஏற்பாட்டில் "அன்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது: *agapē* (அதன் வினைச்சொல்லாகிய *agapaō*) மற்றும் *phileō*. இதன் வினைச்சொல் வடிவமாகிய *philē* புதிய ஏற்பாட்டில் காணப்படவில்லை. அடிப்படைப் பொருள் என்னவெனில், உணர்ச்சி வசப்படுதலில் வெளிப்படுத்தப்படுதல், அதிலே பிரியப்படுதல் மற்றும் அடுத்த நபருடன் உறவு கொண்டாடுதல். *Agapaō* என்பது பாசம், நல்விருப்பம், நற்கவனம் செலுத்துதல். பவுலின் காலத்தில், *agapaō* எனும் வார்த்தை மிக அதிகமாக அன்பை வெளிப்படுத்தும் பொருட்டு *phileō* பயன்படுத்தப்பட்ட சொல். இரண்டு வார்த்தைகளையும் பயன்படுத்துவதில் கணிசமான முறையில் அதன் பயன்பாட்டு வார்த்தைகள் ஒத்திருக்கிறது. "அன்பு," என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மற்றொரு வார்த்தை *eros* (இது சிற்றின்ப ஆவலைத் தூண்டுகிற காதல் என்பதைக் குறிக்கும்). புதிய ஏற்பாட்டில் இவ்வார்த்தை வருவதில்லை.

*Phileō*. பவுல் வினைச்சொல்லாகிய *phileō* வைப் பயன்படுத்தி 1 கொரிந்தியர் 16:22லும் தீத்து 3:15லும் மட்டுமே தன்னிலை விளக்கமாகப் பயன்படுத்தினார். யோவானில் இவ்வார்த்தை, அடிக்கடியாக பதினொருமுறை, பயன்படுத்தப்பட்டுள்ளது. *Phileō* என்பது நட்பு, நேசம், மற்றவர்களிடம் காட்டும் சகோதரத்துவம் என்றெல்லாம் விளக்கமளிக்கப்படுகிறது. கிரேக்கப் பெயர்ச்சொல்லான *philos* என்பது "நண்பன்" (பிரியம்) என்று இருபத்தியெட்டு முறை மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இது பெரும்பாலும் தொகுப்பு வார்த்தைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது: "சகோதர சிநேகம்," *philadelphia* (ரோமர் 12:10); "பண ஆசை" என்பதற்கு *philarguria* (1 தீமோத்தேயு 6:10); "பணப்பிரியர்" (பண ஆசையுள்ளவர்கள்) *philarguros* (2 தீமோத்தேயு 3:2); "தற்பிரியர்" *philautos* (2 தீமோத்தேயு 3:2); "சுகப்போகப்பபிரயர்" *philēdonos* (2 தீமோத்தேயு 3:4); "தேவப்பிரியர்" *philotheos* (2 தீமோத்தேயு 3:4); "நல்லோர்மேல் பிரியமுள்ளவன்" *philagathos* (தீத்து 1:8); "புருஷரிடத்தில் ... அன்புள்ளவர்கள்" *philandros* (தீத்து 2:4); "பிள்ளைகளிடத்தில் அன்புள்ளவர்கள்" *philoteknos* (தீத்து 2:4); மற்றும் "(தேவனுடைய) அன்பு மனுஷர்மேல் காட்டப்படுதல்" *philanthropos* (தீத்து 3:4).

*Phileō* இயல்பான பாசத்தை தன்னுள் கொண்டது, ஆனால் அது கற்றலால் வரும் அன்பாகவும் இருக்கக்கூடும். வாலிப ஸ்திரீகள் தங்கள் புருஷர்களையும் தங்கள் பிள்ளைகளையும் அன்பு செலுத்தும்படி முதிய ஸ்திரீகள் போதிக்க வேண்டியவர்கள் (தீத்து 2:4). (கிரேக்க வார்த்தைகளில் ஒன்றான *philandros* என்பதன் பொருள் "புருஷப் - பிரியர்கள்.") *Phileō* என்பது போதிக்கப்படவும் "கைக்கொள்ளப்படவும்" வேண்டிய ஒன்று.

*Agapaō*. இப்படிப்பட்ட அன்பு *phileō* அன்பையும் உட்படுத்தியிருக்கலாம்,[37] ஆனால் *agapaō* என்பதில் வரும் உறவுமுறை *phileō* வை காட்டிலும் ஆழமான அன்பை மற்றவர்கள் மீது வெளிப்படுத்துவதைக் குறிக்கும். இரண்டுமே தங்களுக்கென ஏதோ ஒன்றை தெரிந்து கொள்வதில் காட்டும் ஆர்வத்தைக் குறிக்கும், முதன்மை இடத்தைத் தேடுவது

*போல (மத்தேயு 23:6ல் phileō லூக்கா 11:43ல் agapaō) அல்லது ஒரு நபரிடம் கொண்டுள்ள அன்பு, அது இயேசு அன்பாயிருந்த "சீஷன் மேல் கொண்டிருந்த அன்பைப்" போன்றது (agapaō என்று யோவான் 19:26; 21:7, 20; ஆகிய வசனங்களில் சொல்லப்படுகிறது; phileō யோவான் 20:2). தேவன் அன்புகூருகிறவர்களை சிட்சிக்கிறார் (agapaō எபிரெயர் 12:6; வெளிப்படுத்தின விசேஷம் 3:19ல் phileō). Agapaō என்பது அநேகக் காரியங்களில் கட்டளையிடப்பட்டிருப்பதால், அது எப்பொழுதுமே இயல்பான அன்பைக் குறிப்பதில்லை, இயேசு ஒரு வாலிபனைப் பார்த்து அவனிடத்தில் "அன்புகூர்ந்தார்" (மாற்கு 10:21), அது இயல்பான அன்பைக் குறிப்பிடுவதாகக் காணுகிறது.*

*சிலர் குறிப்பிடுகையில் உணர்ச்சி வசப்படும் பாசம் agapaō, எனும் வார்த்தையில் சேர்க்கப்படவில்லை என்ற முடிவுக்கு வந்துள்ளனர், இதற்கு முக்கிய காரணம் இயேசு தம்மைப் பின்பற்றுவோர் தங்கள் சத்துருக்களை சிநேகிக்க வேண்டும் என்று போதித்தார் என்பதே அன்பிலே வித்தியாசப்பட்ட அளவீடுகள் இருப்பதால் (மத்தேயு 10:37; லூக்கா 7:42, 47; யோவான் 15:13), நாம் நம்முடைய சத்துருக்களை சகக் கிறிஸ்தவர்களிடத்தில் காட்டுகிற அதே ஆழமான பாசத்துடன் கூடிய அன்பைக் காட்டுகிற அளவுக்கு கோரவில்லை என்ற முடிவுக்கு நாம் வரமுடியும். சில வகைகளில், இயேசு தமது மற்ற சீஷர்களைக் காட்டிலும் ஒரு சீஷனிடத்தில் மட்டும் அதிகமாக அன்புகூர்ந்திருக்க வேண்டும். யோவான் 19:26லும் 21:7, 20லும் பெரிதான அன்பைப் பற்றி விளக்கப்படுத்துகிறது.*

*வித்தியாசப்பட்ட அளவிலான அன்பு கிறிஸ்தவர்களிடம் கோரப்படுகிறது. நாம் அவரை நமது முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும். முழு மனதோடும், முழு பெலத்தோடும் அன்புகூர வேண்டியவர்கள் (மத்தேயு 22:37; மாற்கு 12:30). இரண்டாவது தளம் குடும்பத்துக்கும் சக கிறிஸ்தவர்களுக்கும் காட்டுகிற அன்பு, இது இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் காட்டிய அன்புக்கு சமமானது (யோவான் 13:34). மூன்றாவது தளம் நம்மைப் போல பிறனையும் நேசிக்கிற, நமது அயலார்களுக்குக் காட்டுகிற அன்பு (மத்தேயு 22:39). கடைசி தளம் நமது சத்துருக்களுக்கான அன்பு (மத்தேயு 5:44; லூக்கா 6:35). நாம் நம்முடைய தேவனிடத்தில் அன்புகூருவது போல, சக கிறிஸ்தவர்களிடத்தில் அன்புகூருவது போல, அல்லது நம்முடைய அயலாரிடம் அன்புகூருவதுபோல சத்துருக்களிடத்திலும் அன்புகூர கோரப்படுவதில்லை.*

*Phileō விலோ agapaō விலோ உள்ள அர்த்தம் எதுவாக இருந்தாலும் கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் உண்மையான அன்புகூரக் கூடியவர்களாயிருக்க வேண்டியவர்கள். "ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சலுண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக் கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி?" (1 யோவான் 3:17). ஒரு கிறிஸ்தவன் தனது சக கிறிஸ்தவனுக்கு எவ்வளவாய் அன்பு காட்டுகிறானோ, அவ்வளவாய் அவன் தேவனைப் போலாவான்; ஏனெனில் தேவன் அன்பாயிருக்கிறார் (1 யோவான் 4:8). இயேசு தம்மைப் பின்பற்றுவோர்களிடம் காட்டும் அன்பு அவர்களுடைய இருதயங்களை நிரப்பி, இருதயங்களில் செயலுக்கம் கொடுத்து தேவனுடைய சேவையில் ஊக்கமளிக்க வேண்டும். அன்பு இருதயத்திலிருந்து -*

*தோன்றிவருகிற ஒரு சீஷத்துவ சின்னம் அதை கிறிஸ்தவர்கள் ஒரு அடையாளக் குறியாக அணிந்து கொள்ள வேண்டும். அன்பு சகல ஜனங்களுக்கும் நாங்கள் இயேசுவின் சீஷர்கள் என்று அறியப்பண்ணும் (யோவான் 13:35).*

***மன்னிப்பு (3:13)***

*மன்னிப்பு என்பது என்ன?* நாம் மன்னிக்கப்படும்படி (பிறனை) மன்னிக்க வேண்டுமென்று இயேசு போதித்தார். மன்னிப்பைக் குறித்து நான்கு கிரேக்க வார்த்தைகள் விவாதங்களில் பயன்படுத்தப் படுகின்றன.

*(1) Aphesis,* எனும் வார்த்தை, இதன் பொருள் "விடுதலையாக்குதல்" அல்லது "சுதந்திரம் கொடுத்தல்" இது பாவத்திலிருந்து (விடுதலை) கொடுப்பது போல, இப்பதம் நாம் மற்றவர்களை மன்னிப்பதற்குக் குறிப்பிடலாம் தேவனுடைய செய்கைக்கு மட்டுமே குறிப்பிடப்படுகிறது.[38]

*(2) Apolouō* என்பது "மன்னிப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது ஒரு முறை மட்டுமே ("மன்னித்தல்"): அது மற்றவர்களை மன்னிக்கிற காரியத்தில் குறிப்பாக பயன்படுத்தப்பட்டது: "மன்னியுங்கள் அப்பொழுது உங்களுக்கு மன்னிக்கப்படும்" (லூக்கா 6:37ஆ) மற்ற வசனப்பகுதிகளில் "அனுப்பிவிடுதல்" (மத்தேயு 15:23), "தள்ளி விடுதல்" (மத்தேயு 19:3), மற்றும் "விடுதலையாக்குதல்" (மத்தேயு 27:15).

*(3) Aphiēmi* எனும் வார்த்தை அடிக்கடி "அனுமதித்தல்" (மத்தேயு 3:15) அல்லது "விட்டுவிலகுதல்" (மத்தேயு 4:11) என்று பொருள்படும், இயேசு தமது மலைப் பிரசங்கத்தின் போது மாதிரி ஜெபத்தில் மற்றவர்களுடைய கடன்களை மன்னித்தல் பற்றிக் குறிப்பிடுகிறார் (மத்தேயு 6:12; காண்க லூக்கா 11:4) தொடர்ந்து அவர், நாம் மற்றவர்களின் மீறுதல்களை மன்னிக்க வேண்டும் என்றும் சொன்னார் (*paraptōma* என்பதும் "குற்றப்படுத்துதல்"; ரோமர் 4:25; மத்தேயு 6:14, 15; மாற்கு 11:25, 26). நமக்கு எதிராக பாவம் செய்கிறவர்களை குறித்து பேதுரு கேட்டார் (*hamartia*) (மத்தேயு 18:21). நமக்கு எதிராக பாவஞ்செய்கிறவர்களை நாம் கடிந்து கொள்ள வேண்டும். அவர்கள் மனந்திரும்பினால் நாம் மன்னிக்க வேண்டும் (லூக்கா 17:3, 4).

(4) மற்றொரு வார்த்தை *charizomai*, என்பது "மன்னித்தல்," என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, அதன் பொருள் "கிருபையாக மன்னித்தல்," இப்படியாக நம்முடைய பாதிக்கப்பட்ட நம்முடைய உள்ளங்களுக்கு எவ்விதமறுதிருப்தியும் எதிர் பார்க்காமலேயே மன்னித்தல் (எபேசியர் 4:32; கொலோசெயர் 3:13).

*நமக்கு எதிரான பாவத்தைப்பற்றி என்ன?* மன்னித்தலைக் குறித்து பேதுருவுக்கு ஒரு ஆர்வம் இருந்தது, ஏனெனில் இயேசுவிடம் அவர், " 'ஆண்டவரே, என் சகோதரன் எனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து வந்தால், நான் எத்தனைதரம் மன்னிக்க வேண்டும்? ஏழுதரம் மட்டுமோ என்று கேட்டான். அதற்கு இயேசு: ஏழுதரமாத்திரம் அல்ல, ஏழெழுபது தரம் மட்டும் என்று உனக்குச் சொல்லுகிறேன்' " என்றார் (மத்தேயு 18:21, 22). பிறகு அவர் இரண்டு வேறுபட்ட தொகையில் கடன் பெற்ற மனுஷர்களை ராஜா மன்னிப்பதைக் குறித்த உதாரணத்தைக் கொடுத்தார். அதிகமான கடனைக் கொண்டவன் அதிகமாய் மன்னிக்கப்பட்டிருந்தும் தன்னை விட குறைவான கடன் தன்னிடத்தில் பெற்றவனை மன்னிக்கும்

*மனமில்லாமையினால் அதிக வேதனைக்கு அவன் உள்ளானான். இயேசு முடிவுரையாக, "நீங்கள் அவனவன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" என்றார் (மத்தேயு 18:35).*

*நமக்கு எதிராகப் பாவஞ்செய்தவர்களிடம் நேர்மையான அக்கறையுடன் அணுக வேண்டியவர்கள் நாம். அவர்கள் மனந்திரும்பினால், நாம் அவர்களை மன்னிக்க வேண்டும் (லூக்கா 17:3, 4). இத்துடன் இயேசு மேலும் குறிப்பிடுகையில் சகோதரன் தனித்திருக்கையில் அவனிடம் போய் பேசியும் அவன் செவி கொடாமற்போனால், நம்மோடே கூட இரண்டு அல்லது மூன்று சாட்சிகளைக் கூட்டிக் கொண்டு போய் பேச வேண்டும். அவர்களுக்கும் அவன் செவிசாய்க்காமற்போனால், இந்தக் காரியம் சபைக்கு முன்பாகக் கொண்டு போகப் படவேண்டும்; சபைக்கும் அவன் செவி சாய்க்காமல் போனால் அவனை "கிறிஸ்தவனல்லாதவனைப் போல" நடத்த வேண்டும்[39] (மத்தேயு 18:15-17). சில சூழ்நிலைகளில் நாம் நமக்கு எதிராக பாவஞ்செய்தவர்களை மன்னிக்க இயலாமல் போகலாம், இந்த விஷயத்தில் மன்னிப்பதுதான் சரியான எதிர்கிரியையாக இருக்க முடியும் (லூக்கா 23:34; நடபடிகள் 7:60).*

*நமக்கு எதிரான பாவங்கள் என்பது கடன்கள் அல்லது சமுதாயக் கடமைகளிலிருந்து வித்தியாசப்பட்டவை. நாம் ஜெபம் பண்ணும்போது யாரைப் பற்றியாவது விரோதமான எண்ணம் நமக்குள் இருந்தால் நாம் அவர்களை மன்னித்து ஜெபிக்க வேண்டும். அப்படிப்பட்டதப்பிதங்களை நாம் மன்னியாதிருந்தால் தேவன் நம்மை மன்னிக்கமாட்டார் (மாற்கு 11:25, 26). இந்த குற்றங்களில் விருப்பமற்ற செயல்கள் மற்றவர்களால் நமக்கு இழைக்கப்படக் கூடும் அல்லது தனிப்பட்ட ரீதியில் நமக்கு கோபமூட்டும் செயல்களான, மரியாதைக் குறைவாக நடத்தப்படுதல், அவமானங்கள், புறக்கணிப்புகள், மனம் புண்படுத்தப்படுதல் ஆகிய அனைத்தும் உட்பட்டவை. நாம் அவர்களை நமது இரக்கத்துடன் மன்னிக்க வேண்டும். நாம் வெகு நாட்கள் ஒருவருடன் இருந்தால், நமக்கு விருப்பமற்ற ஏதாவது ஒரு செயல் நடக்கும், அதை நாம் அவருக்கு எதிராக எடுத்துக் கொண்டிருக்கக் கூடாது; மாறாக, நாம் அவரை மன்னிக்க வேண்டும்.*

***"தேவனுடைய கோபம்" (3:6)***

*தேவனுடைய சரிசம கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டுமானால், நாம் அவருடைய நிறைவான இயல்பை அறிந்து கொள்ள வேண்டும். அவர் கிருபையும் நீதியுமுள்ள தேவன் (ரோமர் 3:24, 26), கோபமும் இரக்கமுமுள்ளவர் (ரோமர் 2:5; 12:1), அன்பும் வெறுப்புமுள்ளவர் (எபிரெயர் 1:9). அவர் இவைகளில் எந்த ஒரு தனிப் பண்புக்கும் அளவிடப்பட்டவரல்ல, ஏனெனில் அவர் அன்பாகவும் இருக்கிறார் தீவிரமாகவுமிருக்கிறார் (ரோமர் 11:22). மனிதர்கள் அவருடைய சாயலில் உருவாக்கப்பட்டிருப்பதால், அவர்கள் அவருடைய உணர்வுகளோடு தொடர்புடையவர்களாயிருக்கின்றனர் (ஆதியாகமம் 1:26, 27), ஜனங்களிடத்தில் அவருடைய அப்படிப்பட்ட குணாதிசயங்கள் சில இருக்கின்றன. வித்தியாசம் என்னவெனில் தேவன் அவர்களைக் கட்டுப்படுத்தி நீதியின் வழியில் நடத்துகிறார், அவர்களோ அவைகளைப் புரட்டி தவறாகப் பயன்படுத்துகின்றனர்.*

*பாவம்நிறைந்த மனுக்குலத்தின் மேல் தேவனுடைய கோபாக்கினை வரும் (மத்தேயு 3:7). நற்செய்தி என்னவெனில் பாவமன்னிப்பிற்கென்று இயேசு தமது இரத்தத்தைச் சிந்தினார் (மத்தேயு 3:7; 26:28; 2 கொரிந்தியர் 5:21) மேலும். அப்படிச் செய்ததினால், வருகின்ற கோபாக்கினைக்கு விசுவாசிகளை தப்பிக்க வைத்தார் (1 தெசலோனிக்கேயர் 1:10; 5:9). அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு இயேசு நித்திய இரட்சிப்பாகிய பிரதிபலனை அளிக்கிறார் (எபிரெயர் 5:9), ஆனாலும் அவர் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கு நீதியுள்ள ஆக்கினையை செலுத்துவார் (2 தெசலோனிக்கேயர் 1:7-9) தேவன் அப்படிப்பட்ட ஆக்கினைத் தீர்ப்பைக் கொடுப்பார், ஏனெனில் அவரால் "அன்பு காட்டவும் கூடும் ... இனி அன்பு காட்டாமாலும்" இருக்க முடியும் (ஓசியா 9:15) அந்தத் தீர்ப்பு எதிராளியாய் காணும் பாவிகள் தொடர்ந்து முரட்டாட்டத்தில் நிலை நிற்பவர்களுக்குக் கொடுக்கப்படும் (சங்கீதம் 5:5; 11:5).*

*தமது பிரமாணங்களை மதிக்காதவர்கள் மேல் தேவன் தமது நீதியின்படியான கோபாக்கினையைச் செலுத்துவார். "மேலும் நியாயப்பிரமாணம் கோபாக்கினையை உண்டாக்குகிறது, நியாயப்பிரமாணமில்லாவிட்டால் மீறுதலுமில்லை" (ரோமர் 4:15). தேவனுடைய பிரமாணத்தை ஒருவரும் மீறாதிருந்தால், நீதியுள்ள கோபாக்கினையோ கிருபையோ தேவையில்லை, ஏனெனில் கிருபை பாவங்களை மன்னிக்கவும் நீதிசெலுத்துவதிலும் தொடர்புடையது. எல்லாரும் பாவம் செய்தவர்கள் (ரோமர் 3:23); எல்லாரும் தேவனுடைய பிரமாணத்தை மீறினவர்கள், ஆதலால் இயேசு சாத்தியப்படுத்திய கிருபையின் மூலமாக வருகிற நீதி அவசியமானது (ரோமர் 3:24).*

*நியாயப்பிரமாணம் நீதியைத்தருவிக்க இயலாததாயிருந்ததால், கிறிஸ்தவர்கள் எந்த வித பிரமாணத்துக்கும் கீழ் இல்லை என்று சிலர் முடிவு செய்கின்றனர் (ரோமர் 3:20; கலாத்தியர் 2:16, 21; 5:4). நியாயப்பிரமாணம் கோபாக்கினையையும் ஒரு சாபத்தையும் கொண்டு வருகிறது (ரோமர் 4:15; கலாத்தியர் 3:10). இந்தத் தோற்றக் காட்சியிலிருந்து, நியாயப்பிரமாணம் ஒருவரையும் நீதிமானாக்கவில்லை என்று காணுகிறது. மறுபுறம் பார்த்தால், கீழ்ப்படியத்தக்க கட்டளைகளை இயேசு கொடுத்திருக்கிறார்.[40] இவை தேவனுடைய பிரமாணத்தையும் கிறிஸ்துவின் பிரமாணத்தையும் உருவாக்குகிறது (1 கொரிந்தியர் 7:19; 9:21; கலாத்தியர் 6:2), அது சுயாதீனப் பிரமாணம் (யாக்கோபு 1:25; 2:12). கட்டளைகள் எங்கேயோ, அங்கே பிரமாணமும் உண்டாயிருக்கிறது; ஏனெனில் நியாயப்பிரமாணம் கட்டளைகளாலானது. இயேசு தமது கட்டளைகளுக்கு எல்லாரும் கீழ்ப்படிந்து நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படி கொடுத்திருக்கிறார் (யோவான் 12:49, 50).*

*தேவனுடைய கோபாக்கினை உண்மையானது. அவரது பிரமாணத்தைப் பின்பற்றாமல் கிறிஸ்துவின் பிரமாணத்தையும் பின்பற்றாமல் இருக்கும்படி தெரிவுசெய்து கொண்டவர்கள் மேல் அவருடைய கோபாக்கினை ஊற்றப்படும். தேவனை அறிந்து கொள்ளுதல் என்பது அவரது அன்பையும், இரக்கத்தையும் அதே போல அவருடைய நீதியையும் அறிவதே.*

## *பயன்பாடு*

***தவிர்க்க வேண்டிய குறிப்பான பாவங்கள் (3:5-7)***

*வசனம் 5ல் சொல்லப்பட்டபடி கிறிஸ்தவர்களான பின்பு "பாவத்துக்கு மரித்திருத்தல்" என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள பாவங்கள் யாவை?*

1. *ஒழுங்கீனங்கள் - எல்லா வகையான பாலுணர்வு ஒழுங்கீனச் செயல்கள்.*
2. *அசுத்தம் - கிறிஸ்தவர்கள் மனதில் கொண்டுள்ள எவ்வித அசுத்த சிந்தனைகளும் (மத்தேயு 5:27, 28; ரோமர் 1:32).*
3. *தீய இச்சைகள் - கிறிஸ்தவர்கள் சரீர இச்சைகளை கட்டுப்படுத்த அறிந்திருத்தல் அவசியம்.*
4. *தீய ஆசைகள் - ஒழுங்கீனமான செயல்களுக்கு கொண்டிருக்கும் எல்லாவித பலமான ஆசைகளும்.*
5. *பொருளாசை - ஆஸ்திகள், தொழுகை செய்வது உட்பட, அளவுக்கு மீறிய ஆசை, அல்லது அதற்காகவே ஒப்புக்கொடுத்த பிரயாசங்கள் போன்ற ஆரோக்கியமற்ற எண்ணங்கள்.*

*ஒழுங்கீனமான பழக்கத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருப்பவர்கள் மேல் தெய்வீகக் கோபாக்கினை வரும் (வசனம் 6). தேவன் நீதியை விரும்பி அக்கிரமத்தை வெறுக்கிறார் (எபிரெயர் 1:9அ). தேவன் தமது சித்தத்தை எதிர்த்து புறந்தள்ளுகிறவர்களுக்கும், தீய இச்சைகளுக்கு தங்களை ஒப்புக்கொடுப்பவர்களுக்கும் அவர் எதிராயிருக்கிறார்.*

*கொலோசெயர் தங்களுடைய முந்தைய இத்தகையப் பாவங்களுக்குத் தங்களை ஒப்புக்கொடுத்திருந்தனர், ஆதலால் தேவனுடைய கோபாக்கினைக்குக் கீழ் இருந்தனர் (வசனம் 7). இந்த பழக்கங்களுக்கு அவர்கள் மரித்த போது, அவர்கள் மீது தேவன் கொண்டிருந்த கண்ணோக்கு இப்பொழுது மாறியது. மன்னிப்பைப் பெற்றுக் கொண்டதால் தேவனுடைய மனதில் எவ்வித மாற்றம் இந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருந்தவர்களுக்கு உறுதியளித்தது? முதல் பேதுரு 2:10 சொல்லுகிறது. "முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதே இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்."*

***இயேசுவைப்போல் மாறுதல் (3:8-11)***

*நாம் கோபத்துக்கும், புறங்கூறுதலுக்கும் பொய் பேசுதலுக்குமாக வசீகரிக்கப்படும் போது நாம் எப்படி இயேசுவைப் பின்பற்றக் கூடும்? கிறிஸ்தவர்கள் பின்வரும் காரியங்களை களைந்து போடும்படி போதிக்கப்படுகின்றனர்:*

1. *கோபம் - மனநிலையின் நிதானத்தைக் கட்டுக்குள் வைக்க இயலாமல் கிளர்ந்தெழுதல்.*
2. *மூர்க்கம் - அநியாயத்தைக் கண்டு அடக்க முடியாத தீவிரமான கோப உணர்ச்சி.*
3. *பொறாமை - கீழ்த்தரமான ஆவியைக் கொண்டிருத்தல்.*
4. *புறங்கூறுதல் - யாரோ ஒருவரின் அல்லது ஏதோ ஒன்றின் புகழை*

*(அல்லது நற்பெயரைக்) கெடுக்க எடுத்துக் கொள்ளும் பிரயாசம்.*

5. *வம்புவார்த்தை - கடினமான வார்த்தைகளின் பேச்சு.*
6. *பொய் - சத்தியத்தைப் புரட்டுதல்.*

*இந்த பாவமுள்ள பழக்கவழக்கங்களை தவிர்ப்பதால் மட்டும் கிறிஸ்தவ நடக்கையை உறுதிப்படுத்துவதில்லை; கிறிஸ்துவைப் போன்றத் தகுதி களைத் தரித்துக்கொள்வதும் அவசியமானதே (வசனம் 10). கிறிஸ்தவர்கள் இயேசுவை அறிந்து கொள்ளும்போது மட்டுமே அவருடைய தனிப்பண்புகளைத் தரித்துக் கொள்வார்கள். பவுலின் இலக்கு இயேசுவை அறிந்து கொள்வதும் அதினால் அவரால் நியமிக்கப்பட்டிருக்கும் பந்தயப்பொருளை அடைவதும் தான் (பிலிப்பியர் 3:10-14). நமது கண்கள் இயேசுவின் மீது மட்டும் வைக்கப்பட்டிருக்க வேண்டும் (எபிரெயர் 12:2).*

The Great Stone Face, *(மிகப் பெரிய கல் - முகம்) எனும் கதையில், ஒரு பையன் தனது சிறுவயது தொடங்கி தனது கிராமத்துக்கு வரப்போகிற ஒரு பெரிய மனிதனைப் பற்றிக் கேள்விப் பட்டிருந்தான். அந்த மனிதனுடைய முகம் ஒரு மலையிலிருக்கிற கல்லுக்கு ஒப்பாக இருக்கும். இந்தப் பையன் வருடங்களினூடே அந்த மனிதனுடைய நடக்கையைக் கேள்விப்பட்டதில் மிகவும் வியப்படைந்தான், அவனை இவன் (பையன்) ஒரு நாள் சந்திப்பான் என்று நம்பியிருந்தான். அவன் அதை உணரவில்லை, ஆனால் அவன் வளர்ந்து வரும்போது அந்த மனிதனுடைய நடவடிக்கையை சிந்தித்துக் கொண்டே வளர்ந்தான், பிற்பாடு அந்தப் பையனே பெரிய மனிதனாக வந்தான் என்று கிராமத்தினர் விளக்கமளித்தனர். இப்பொழுது ஒரு வயதானவனாக - அந்தப் பையன் வளர்ந்திருந்த வேளையில் ஒரு நாள் - அவன் அந்த மலையில் இருந்த முகத்தை ஏறெடுத்துப் பார்த்தான், அப்பொழுது கிராமத்தினர் அவன் மிகப்பெரிய கல் முகமாக அவனை உணர்ந்தார்கள்.[41] அவன் அந்த (கல்முக) மனிதனைப்போல மாறினான் ஏனெனில் அந்த மனிதனைப் பற்றி கேள்விப்பட்டு அதிசயித்து அந்த மனிதன் விவரிக்கப்பட்டது போல அவனைப் பின்பற்றியிருந்தான், இயேசுவை நோக்கிப் பார்ப்பதன் மூலம், அவரைக்குறித்து அதிசயப்பட்டு, அவரைப் பற்றிய சிந்தையில், நாமும் அவரைப் போல் ஆகமுடியும் (2 கொரிந்தியர் 3:18).*

### *கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய தகுதியாம்ஸங்கள் (3:12-14)*

*புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளும்போது அதன் தகுதியாம்ஸங்கள் கடந்த காலத்திலிருந்த விரும்பத்தகாத குணாதிசயங்களை தவிர்ப்பதற்கு அது உதவிகரமாயிருக்கும், ஒரு கண்ணாடி தம்ளரில் தண்ணீரை நிறைத்தால் அதிலிருந்து காற்று வெளியேற உந்தும்; அதை போல நேர்மறைக் கிறிஸ்தவ நடக்கைகள் எதிர்மறைக் குணாதியங்களை தங்கள் வாழ்க்கையிலிருந்து அப்புறப்படுத்த உதவியாயிருக்கும்.*

*புதிய இயல்பைத் தரித்துக்கொள்ள பவுல் நமக்கு மூன்று காரணங்களைக் கொடுத்தார்: நாம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், பரிசுத்தர், மற்றும் பிரியர்கள் (வசனம் 12அ). தேவன் நம்மைத் தமது சொந்தமாக தெரிந்து கொண்ட தன் நம்பிக்கையை நாம் பிரதிபலிக்க வேண்டியவர்கள். நாம் பொல்லாத உலகத்திலிருந்து தனியாகப் பிரித்தெழுக்கப்பட்டு*

அவருக்குப் பிரியமான பிள்ளைகளானோம், என்பதை நாம் உணரவேண்டும் விசேஷித்த வேலைக்கென தெரிந்து கொள்ளப்பட்ட ஒரு பிள்ளை தன்னுடைய வேலையைக் குறித்துப் பெருமைப்படுவான், ஏனெனில் தன்னைப்போல் மற்றவர்கள் நிறைவேற்ற இயலாத பொறுப்பு தன்னிடம் ஒப்புக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதால்தான். அதேபோல, இயேசு நம்மை தம்முடைய வித்தியாசப்பட்ட பிரியர்களாகத் தெரிந்து கொண்டார் என்று கிறிஸ்தவர்கள் அறிய வேண்டும்.

கிறிஸ்தவர்கள் தங்களின் ஆவிக்குரிய தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறார்கள் (வசனங்கள் 12ஆ-14). இந்த நல்லொழுக்கங்களை வளர்த்துக் கொள்ளும் போது ஒருவர் எப்படியிருக்கக் கூடும்? அவர் எவ்வாறு செயல்படுகிறார்? அவர் ...

1. இரக்கமுள்ளவராயிருப்பார் - மற்றவர்களுடைய தேவைகளில் அக்கறையுள்ளவராயிருப்பார்.
2. தயவுள்ளவர் - மற்றவர்களுடைய நலனைத் தேடுவதில் ஆர்வமுள்ளவர்.
3. தாழ்மையுள்ளவர் - மற்றவர்களுடைய நிலைமைக்கு ஒப்பாக தனது நிலைமையை மாற்றிக் கொண்டு அவர்களிடமிருந்து தன்னை தனிமைப்படுத்திக் கொள்ளாதிருப்பார்.
4. சாந்தமுள்ளவர் - மற்றவர்களைக் குறித்து இளகிய மனமுடையவராயிருந்து, மற்றவர்களிடம் பழகும்போது கடுமையானவைகளை தவிர்த்து, இரக்கமற்ற தன்மையை விட்டு பழகுவார்.
5. பொறுமையுள்ளவர் - மன அழுத்தம் மற்றும் நெருக்கடி நேரங்களில் சகித்துக் கொள்ளும் தன்மையுடையவராயிருத்தல்.
6. ஒருவரையொருவர் தாங்குபவர் - இழைக்கப்படும் அவமானங்களை கண்டுகொள்ளாதிருந்து, தடைகளை சகித்து, தவறாக நடத்தப்படும்போது பழி வாங்கும் எண்ணமில்லாதிருப்பார்.
7. மன்னிப்பவர் - தனக்கு விரோதம் செய்பவர்களுக்கு எதிரான மனம் கொண்டிராதவர், மன்னிப்பிற்கான அடிப்படை இயேசுவிடம் தான் பெற்ற மன்னிப்பு.
8. அன்புள்ளவர் - மற்றவர்களின் நலனைத் தேடுவதன் விளைவாகக் காட்டப்படும் நேசம். மற்றவர்களிடத்தில் அன்புகூரும் கிறிஸ்தவர்களின் இருதயத்தில் மற்றெல்லா தகுதிகளும் ஒருங்கே வந்து சேரும். எல்லா நல்லொழுக்கங்களுக்கும் மேலான மிக முக்கியமான நல் லொழுக்கம் இது.

**மன்னித்தல் என்றால் மறப்பதாகுமா? (3:13அ)**

மனது புண்படுத்தப்பட்ட அனுபவம் ஒருபோதும் மறந்து விட முடியாது, அது உண்மையாக மன்னித்து விடப்பட்டாலும் மறக்க இயலாதது, இராயனுக்கு முன்பாக நின்ற போது விசாரணை நேரத்தில் பவுல் தன்னை கைவிட்டவர்களை நினைவுகூருகிறார், ஆகிலும் அவர்களை அவர் மன்னித்திருந்தார். “அந்தக் குற்றம் அவர்கள் மேல் சுமராதிருப்பதாக” என்று வேண்டிக் கொண்டார் (2 தீமோத்தேயு 4:16இ).

*ஒருவர் தான் அநுபவித்த அநியாயங்களை நினைத்துப் பார்கிறாரா அல்லது இல்லையா என்பதைப் பொருத்தா மன்னிப்பு நிச்சயிக்கப்படுகிறது? இல்லை, அது புண்பட்ட காரியம் எப்படி நினைவுபடுத்தப்படுகிறது என்பதைப் பொருத்தது. அது நினைத்துப் பார்க்கப்பட்டாலும் அதை இழைத்த நபருக்கு எதிராக பற்றிக் கொண்டிராத பட்சத்தில், அது மன்னிக்கப்பட்டதுதான். இருப்பினும், அவைகள் நினைவுபடுத்தப்பட்டு, தவறிழைத்தவருக்கு எதிராக பற்றிக் கொள்ளப் பட்டிருக்குமானால், பிறகு அவர் மன்னிக்கப்படவில்லை என்று பொருள்.*

***தவறிழைத்தவர் மனந்திரும்பாதபோது (3:13அ)***

*ஒருவர் மனந்திரும்பாதபோதும் மன்னிக்கப்படலாமா?*

*இயேசு தம்மைப் பின்பற்றினோர்களிடம் கட்டளையிட்டு மனந்திரும்பிவிட்டோம் என்று சொல்லுபவர்களுக்கு மன்னியுங்கள் என்றார். "உன் சகோதரன் உனக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்தால், அவனைக் கடிந்து கொள்; அவன் மனஸ்தாபப்பட்டால், அவனுக்கு மன்னிப்பாயாக அவன் ஒரே நாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, ஏழுதரம் ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து: 'நான் மனஸ்தாபப்படுகிறேன்' என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக" என்றார் (லூக்கா 17:3அ, 4). ஒருவர் இன்னொருவருக்கு எதிராக எதைச் செய்தால் என்று வசனம் தெளிவுபடுத்தவில்லை, ஆனாலும் இயேசு குறிப்பிடும்போது அவர்கள் மனந்திரும்பினால் தம்மைப் பின்பற்றுபவர்கள் அவர்களை மன்னிக்க வேண்டும் என்றார்.*

*தன்னை மன்னிக்கும்படி ஒருவர் கோரும்போது, நாம் என்ன செய்ய வேண்டும் என்று பார்த்த பின், நாம் இப்படியாகக் கேட்டுக் கொள்வோம், "அவர் நம்முடைய மன்னிப்பைக் கோராதிருப்பாரானால் என்னவாகும்"; நாம் மன்னிக்க வேண்டுமா? தேவன் அளிக்கும் மன்னிப்பு நிபந்தனைக்குட்பட்டது, அது மனந்திரும்புதலைச் சார்ந்தது (2 பேதுரு 3:9), எனவே மனந்திரும்பாதவர்களை கிறிஸ்தவர்கள் மன்னிக்கக் கட்டுப்பட்டவர்களல்ல என்பதாகக் காணப்படுகிறது. இது கிறிஸ்தவனுக்கும் பொருந்துமா? ஒரு கிறிஸ்தவனுக்கு வேதனையைக் கொடுத்தவன், மன்னிக்கச் சொல்லி கேட்கவில்லை, ஆகிலும் அவன் தன் தவறுக்கு மனஸ்தாபப்படுவது போன்ற அடையாளத்தைக் காட்டுகிறான், ஒரு கிறிஸ்தவன் அவனை மன்னிக்க வேண்டுமா? ஒருவன் உண்மையில் மனந்திரும்பாமல் மாய்மாலமாக மன்னிப்புக் கேட்டால் அதைப் பற்றி என்ன? அந்த நபரை மன்னிப்பது தவறா?*

*இந்தக் கேள்விகளுக்கான பதில் மாற்கு 11:25ல் காணப்படுகிறது. அங்கே இயேசு போதித்ததாவது, "நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" (மாற்கு 11:25). மன்னிக்கும்படி கேட்காத ஒருவனை மன்னிப்பதற்கு இது ஒரு உதாரணமாக இருக்கக் கூடும். மன்னிப்புக் கோராதவர்களுக்காக இயேசு மன்னிக்கும்படி ஜெபம் செய்தார் - தம்மை சிலுவையில் ஆணி அடித்தவர்களுக்காகவும் ஜெபம் பண்ணினார் (லூக்கா 23:34). அதே மன்னிக்கிற சுபாவமுடையவனாக ஸ்தேவான் தான்*

*கல்லெறியப்பட்டு மரிக்கிற போது தன்னை வெளிப்படுத்தினான் (நடபடிகள் 7:60).*

---

குறிப்புகள்

[1]*மத்தேயு 5:32; 15:19; 19:9; மாற்கு 7:21; நடபடிகள் 15:20, 29; 21:25; 1 கொரிந்தியர் 5:1; 6:13, 18; 7:2; 10:8; 2 கொரிந்தியர் 12:21; கலாத்தியர் 5:19; எபேசியர் 5:3; 1 தெசலோனிக்கேயர் 4:3; வெளிப்படுத்தின விசேஷம் 2:14, 20, 21; 9:21.* [2]*மத்தேயு 15:19; மாற்கு 7:22; யோவான் 8:3.* [3]*மத்தேயு 5:27, 28; 19:18; மாற்கு 10:19; லூக்கா 16:18; 18:20; யோவான் 8:4; ரோமர் 2:22; 13:9; யாக்கோபு 2:11.* [4]*மத்தேயு 13:17; லூக்கா 15:16; 16:21; 17:22; 22:15; 1 தீமோத்தேயு 3:1; எபிரெயர் 6:11; 1 பேதுரு 1:12.* [5]*லூக்கா 12:15; ரோமர் 1:29; எபேசியர் 4:19; 5:3; 1 தெசலோனிக்கேயர் 2:5; 2 பேதுரு 2:3, 14.* [6]Eduard Lohse, *Colossians and Philemon*, trans. William R. Poehlmann and Robert J. Karris, Hermeneia (Philadelphia: Fortress Press, 1971), 137. [7]Ibid. [8]*யாத்திராகமம் 4:14; எண்ணாகமம் 11:10; உபாகமம் 11:17; யோசுவா 7:1; நியாயாதிபதிகள் 2:12; 2 சாமுவேல் 6:7; 1 இராஜாக்கள் 15:30; 2 இராஜாக்கள் 13:3; எஸ்றா 10:14; யோபு 9:13; சங்கீதம் 78:31; ஏசாயா 5:25; எரேமியா 4:8; எசேக்கியேல் 5:13; ஓசியா 8:5; மீகா 5:15; நாகூம் 1:6, 7; செப்பனியா 2:2; சகரியா 1:2.* [9]*எண்ணாகமம் 16:46; உபாகமம் 9:8; யோசுவா 22:20; 1 சாமுவேல் 28:18; 2 இராஜாக்கள் 22:13; யோபு 42:7; சங்கீதம் 21:9; ஏசாயா 51:20; எரேமியா 7:20; எசேக்கியேல் 13:13-15; தானியேல் 9:16; ஓசியா 13:11; மீகா 5:15; செப்பனியா 1:18; சகரியா 7:12.* [10]*மாற்கு 3:5; யோவான் 3:36; ரோமர் 1:18; 5:9; எபேசியர் 5:6; எபிரெயர் 3:11; வெளிப்படுத்தின விசேஷம் 14:10; 15:1; 16:19; 19:15.*

[11]William Hendriksen, *Exposition of Colossians and Philemon*, New Testament Commentary (Grand Rapids, Mich.: Baker Book House, 1964), 147. [12]Bruce M. Metzger, *A Textual Commentary on the Greek New Testament*, 2d ed. (New York: United Bible Societies, 1971), 625. [13]Herbert M. Carson, *The Epistles of Paul to the Colossians and Philemon: An Introduction and Commentary*, The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1960), 82. [14]*யோவான் 11:9; 12:35; ரோமர் 6:4; 1 கொரிந்தியர் 7:17; 2 கொரிந்தியர் 5:7; கலாத்தியர் 5:16, 25; 6:16; எபேசியர் 2:10; 4:1; 5:8, 15; பிலிப்பியர் 3:17; கொலோசெயர் 1:10; 1 தெசலோனிக்கேயர் 2:12; 4:1; 1 யோவான் 1:7; 2:6; 2 யோவான் 4, 6; 3 யோவான் 3, 4.* [15]*யோவான் 8:12; 11:10; 12:35; 1 கொரிந்தியர் 3:3; 2 கொரிந்தியர் 4:2; 10:3; எபேசியர் 2:2; 4:17; பிலிப்பியர் 3:18; 1 யோவான் 1:6; 2:11.* [16]NASB, மொழிபெயர்ப்பில் *orgē* என்பது ஆறுமுறை "கோபம்" என்றும் முப்பது முறை "மூர்க்கம்" என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [17]*மத்தேயு 3:7; லூக்கா 3:7; 21:23; ரோமர் 2:5, 8; 3:5; 5:9; 9:22; 12:19; எபேசியர் 2:3; 5:6; கொலோசெயர் 3:6; 1 தெசலோனிக்கேயர் 1:10; 2:16; 5:9; வெளிப்படுத்தின விசேஷம் 6:16, 17; 11:18; 14:10; 16:19; 19:15.* [18]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translators Handbook on Paul's Letters to the Colossians and to Philemon*, Helps for Translators (New York: United Bible Societies, 1977), 82. [19]*மத்தேயு 15:19; மாற்கு 7:22; கொலோசெயர் 3:8; 1 தீமோத்தேயு 6:4; 2 தீமோத்தேயு 3:2.* [20]Hendriksen, 149.

[21]David M. Hay, *Colossians*, Abingdon New Testament Commentaries (Nashville: Abingdon Press, 2000), 126. [22]*ரோமர் 13:12-14; கலாத்தியர் 3:27; எபேசியர் 4:22, 24; 1 தெசலோனிக்கேயர் 5:8.* [23]Eduard Schweizer, *The Letter to the Colossians: A Commen-*

*tary*, trans. Andrew Chester (Zürich: Benziger Verlag, 1976; reprint, Minneapolis: Augsburg Publishing House, 1982), 197. [24]*நடபடிகள் 15:1, 2; 1 கொரிந்தியர் 12:12, 13; கலாத்தியர் 2:11-14; 3:26-28.* [25]Josephus *Against Apion* 2:269; see also Philo *On the Embassy to Gaius* 10. [26]Herodotus *History* 4.64, 65, 75; quoted in Hendriksen, 154. [27]Peter T. O'Brien, *Colossians, Philemon*, Word Biblical Commentary, vol. 44 (Waco, Tex.: Word Books, 1982), 193. [28]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature*, 3d ed., rev. and ed. Frederick William Danker (Chicago: University of Chicago Press, 2000), 861. [29]*காண்க 1 கொரிந்தியர் 4:21; 2 கொரிந்தியர் 10:1; கலாத்தியர் 5:23; 6:1; எபேசியர் 4:2; 2 தீமோத்தேயு 2:25; தீத்து 3:2.* [30]Bauer, 612.

[31]A. T. Robertson, *Paul and the Intellectuals: The Epistle to the Colossians*, rev. and ed. W. C. Strickland (Nashville: Broadman Press, 1959), 107. [32]*நடபடிகள் 18:14; 2 கொரிந்தியர் 11:1, 4, 19, 20; எபேசியர் 4:2; 2 தீமோத்தேயு 4:3; எபிரெயர் 13:22.* [33]*காண்க ரோமர் 12:17-21; 2 கொரிந்தியர் 2:5-11; கலாத்தியர் 6:1, 2; பிலேமோன் 17, 18.* [34]*ரோமர் 15:7, 8; எபேசியர் 5:2, 25, 29.* [35]*ரோமர் 5:15, 18; 11:31; 1 கொரிந்தியர் 2:11.* [36]Bauer, 6. [37]"If *phileō* and *agapaō* ... are to be distinguished in the NT, the former is probably the love of friendship, the latter reverential love: but there appears to be a growing tendency to regard the two verbs as synonymous" (James Hope Moulton and George Milligan, *The Vocabulary of the Greek Testamen*t [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1930], 669–70). [38]*மத்தேயு 26:28; மாற்கு 1:4; 3:29; லூக்கா 1:77; 3:3; 4:18; 24:47; நடபடிகள் 2:28; 5:31; 10:43; 13:38; 26:18; எபேசியர் 1:7; கொலோசெயர் 1:14; எபிரெயர் 9:22; 10:18.* [39]David L. Roper, *The Life of Christ, 1: A Supplement,* Truth for Today Commentary (Searcy, Ark.: Resource Publications, 2003), 581. [40]*மத்தேயு 28:20; யோவான் 12:50அ; 14:15, 21, 24; 15:10; 1 கொரிந்தியர் 14:37; 1 யோவான் 2:3, 4; 3:22, 24; 5:2, 3.*

[41]Nathaniel Hawthorne, "The Great Stone Face," in *The Complete Short Stories of Nathaniel Hawthorne* (Garden City, N.Y.: Doubleday & Co., 1959), 451.